வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,

அவர்கள் இயற்றிய

நாற்றொகுதி.



முதற் பகுதி.

# 3. மான விஜயம்.

# உரிமையுரை.

## நேரிசை வெண்பா.

எம்முடைய நண்ப ரெனப்பெறு தாரெவர்க்குஞ்
செம்மையுற விஃதுரிமை செய்கின்றா—மம்மவவர்
யாவேனு மென்றா லெடுத்துப் படிக்குறாஉம்
மாவேட்கை யாளரான் மன்.

உரிமையுரை: மாவேட்கை - பெரு விருப்பம். இச்செய்யுளில், நண்பரல்லாதார் நூலினிடத்துக் குற்றங் காணும் நோக்குடையரேனும் நூலினைத் துருவி ஆராய்குநர் அவராதலின், அன்னார்க்கு இதனை உரிமை செய்கின்றோம் என்றனர்.

# INTRODUCTION.

PANDITS are no doubt estimable persons, but if the Vernacular literature of the country is to be improved and made an effective instrument of popular education, they are not the persons who can do it. They represent an old and antiquated learning, practically useless for purposes of modern life. Ramayanam and Bharatam are excellent books in a way, but the mind of the modern Indian cannot be nursed on such stale food. The Indian classical literature is the reflection of a condition of society which prevailed centuries ago, and is now valuable only as the repository of historic materials hidden amidst a mass of myth and fantastic exaggeration; nor does it contain terms and vocabularies that can be utilised directly or in adapted forms to convey ideas of modern science and art. Practically, for all purposes served by modern literature in European countries for popular instruction and amusement, the best works in the Vernacular language are almost useless. These works which form the basis of the Pandits' erudition, differ so entirely in the vocabulary, diction and collocation of words from the languages spoken by the most cultured of Indians that it is as difficult to derive amusement or instruction from them as from Greek works. To be able to understand Ramayanam or Silappathikaram in Tamil requires an elaborate previous study prosecuted for years. The fact is that these works were never written for the benefit of the ordinary classes of people, and therefore intelligibility was never aimed at as their chief characteristic. They were intended for a small coterie of learned men, in many instances for Pandits hanging on to the courts of local rulers, and it was only their approval that was cared for. For the masses no education of more than an elementary order was thought necessary. A specially gifted individual, by a peculiar combination of fortunate circumstances, might develop into a poet or a poetess and of such gifted individuals there are several instances in the history of Tamil literature. But the general bulk of the population, who in those days lived in villages even more largely than at present, were content with such education as could be got in village schools where the curriculam was never of an ambitious nature and was confined mostly to the three R's and such additional information as was useful in the daily pursuits of life. A Brahmin child perhaps learned the elements of astrology and some elementary ethics in Sanskrit. A Vaisya boy received a special grounding in accounts, while the higher class Sudra had to be content with even more elementary education. The great masses were, of course, left altogether illiterate. The famous University of Madura is not known to have troubled itself with the problem of popular education, nor did the more ancient authors of the Jain and the Buddhist faiths. The Pandits thought and wrote for themselves,

while the village communities provided in their own crude way for their educational wants.

The classical literature of Tamil, on which our modern Pandit is nursed, has very little of that vitality and breadth necessary for the healthy growth of popular intelligence. If the 20 millions of people that speak Tamil are to have their minds reformed on the Western pattern, the result will not be brought about by D'r. Duncan's plan. The Government of Madras rightly considers that to require our erudite Pandits "to study science in order that they may be the means of introducing a vocabulary of scientific terms into the Vernacular languages would be wrong in principle." "In English," as Government observes, "new terms and vocabularies are constantly being manufactured from other languages, and if these are to be introduced into Oriental languages similar methods will inevitably present themselves for adoption." In other words, it is useless trying to manipulate the existing Vernacular vocabulary for new scientific terms; on the other hand, it is more easy to adopt foreign words and terminology than to twist existing Vernacular words for this purpose. The latter will only make confusion worse confounded. It is no doubt desirable that in the elementary classes of our schools the boy's mother-tongue should be made the main medium of instruction, and the importance of doing so has recently been urged on the local Governments by the Government of India. But to convey instruction by means of the Vernacular language is not the same thing as to coin elongated and jaw-breaking expressions which are as unintelligible to the young mind as any English expression can be. In fact, the new Vernacular expressions would be more difficult to the young student because, while he constantly hears his elders at home, in school and elsewhere using the English expressions and becomes more or less familiar with them; the same advantage is absent in the case of Vernacular terms newly coined.

The peculiar condition of India, which makes a close and complete study of English necessary, and really more important in many ways than that of any native language, should not be forgotten, and all higher studies in science have necessarily to be done in English. The young child forced to use strange Vernacular terms will have ultimately to forget them, for when he acquires sufficient knowledge of English and does most of his reading in that language, he will not care to remember, much less to use, his earlier acquisitions in the Vernacular.

Our University, with all the abuse that hasty people heap on it, is producing a class of men who would soon prove the originators of a new useful literature to meet the popular demand that is springing up. In the absence of the old patrons of learning, Rajahs and nobleman, who no longer think of patronising authors, but lavishly endow gymkhanas, literature must become paying before it can attract competent devotees, and we are hopeful that this state will soon arise. It must be remembered that the best way of diffusing a knowledge of science among the masses is not to begin by placing primers and text-books in

their hands. Primers and text-books have their place after general treatises dealing with outlines in a narrative and popular manner. Graduates with a sufficiently high education can, of course, write their treatises better than the Pandits can be expected to do, with their narrow and one-sided culture.

Instead of taking up Pandits for improvement, the educational department should encourage young graduates with linguistic inclinations to aim at high standard of knowledge in the Classical and Vernacular languages of the country. After all, the literature of a country should represent the contemporary activities and aspirations of the people, and should be the product of minds conversant and in sympathy with these activities and aspirations. Mythological stories and Puranams of holy places have no doubt a certain merit in that they show the capacity of the language in some respect. But it is ideas, healthy, stimulating ideas, that are wanted more than feats of literary legerdemain. English literature does not contain, for instance, fifty words to convey the idea of a lion; the poet, the novelist, the historian, and every species of writer in English employ the same word to imply the king of the beasts. But Tamil has a whole page of synonyms for lion, and similar concrete objects, and is an entire stranger to what may be called literary economy, by which only one word is employed to indicate one idea. More wealth of ideas and less of redundant vocabulary are wanted to impart the necessary elasticity and expansiveness to Tamil literature; and this transformation can only be a slow process and brought about by the exertion of minds trained in modern knowledge.

Indeed, there are already indications to show that the younger generetion of our graduates are rising to a sense of the importance of leading a departure from the old tradition of the Tamil Literature and bringing into existence a fresh school calculated to meet the wants of the general public rather than the ambition and ideals of a small class of erudite Pandits. They begin to see that, among that considerable class of middle-class people who without being themselves educated in English are yet in touch to some extent with the new ideas and aspirations stimulated by Western civilisation in the country, there is a growing healthy curiosity to know what transpire in other countries of the world as well as in India and a laudable desire to possess means of satisfying this curiosity. During the late South African War, I was greatly impressed by the curiosity evinced by all but the poorest classes to know the minutest details of the progress and the fortunes of the war from day to day, and the circulation of the Vernacular newspapers rose in exact proportion to the promptitude and fulness of the information supplied by them. Nor is this fresh desire for information regarding affairs concerning the world at large, special or spasmodic. There is reason to believe that this desire is more or less a permanent outcome of the fresh conditions of life, of new thought and activity of the people throughout India. This desire our younger graduates, have the good sense to try to

turn to practical account in their own interest as well as in the interest of their fellow countrymen.

In the last two years there has been a remarkable development in the Vernacular press. A number of newspapers have been started and most of them have a more or less respectable circulation; at least two of these journals are conducted by graduates and a monthly magazine by name *Jnana Bodhini* containing well-written and thoughtful articles on religious, social, and literary topics, is conducted altogether by graduates of our university. The Tamil Sangam recently started at Madura by a way of the revival of the old historical institution for which that capital of ancient Tamil Kingdom is celebrated, is a movement pointing to the welcome departure I have indicated above. Small debating Societies have been established here and there and are maintained by graduates and under-graduates. Besides those, literary attempts of a less ephemeral nature are also made by the younger generation of the educated class. This last is, of course, the most important feature of the new born attitude of the educated Dravidian youths towards their mother-tongue in whose antiquities and fertility they take a pardonable pride. The books and the booklets occasionally published now are few and not of a high order. Most of them are small works of fiction intended to amuse uneducated minds and to bring some addition to the writer's means of livelihood. Naturally along with works of fiction, works of a historical nature are also forthcoming. The life of the Great Moghul Emperor, Akbar, an account of the ruined city of Vijayanagar in the Bellary district, a sketch of the various Dravidian Kingdoms established in Southern India have recently furnished topics for small volumes in this branch of literature. A writer has translated a portion of the great epic of John Milton, and another some of Shakespeare's plays Works on agriculture and medicine have also appeared; of translations, new editions and commentaries of a religious character, there have been as usual a large number. In writing and publishing these books, I believe, the writers have been prompted by a fresh-born confidence in popular literature as paying profession. I welcome this confidence, because no activity, not supported by some economic basis can be wide or enduring. The old openings which Public Service and learned professions offered having become more or less overcrowded, our graduates are turning to fresh fields and pastures new. And of these, literature will not be the least honourable though certainly not the most paying.

Of the new band of graduates who have thus stepped into the field of literature, I am glad to mention as one of the most, if not the most conspicuous amongst them the name of Pandit **V. G. Suryanarayana Sastriar** of the Madras Christian College. Apart from the surviving generation of the old school of Pandits, Pandit Swaminatha Aiyer, for instance, I think I may say that Mr. V. G. Suryanarayana Sastriar is the foremost worker in the cause of the advancement of the Tamil literature. As a graduate of the Madras University,

his knowledge of English is of a high order. And this combined with his profound scholarship in Tamil has given him a unique advantage over the vanishing school of the Orthodox Pandits. He has been a very busy writer and takes great interest in efforts directed towards the improvement of Tamil. He has written works in Drama, Poetry and fiction, and all these are of a very high order. His conscientious endeavour is to make Tamil composition, in prose as well as in verse, simpler and more popular than it has been till now and in this sense I entirely endorse the opinion expressed by that veteran Anglo-Indian Tamil scholar, Dr. G. U. Pope, once wellknown in this Presidency, now enjoying his well-earned rest and repose in the serene classic scenery of Oxford with unabated admiration for the literature which he has done more than anybody else to advance, the opinion namely "the herald of a new school of Tamil poets heartily to be welcomed."

The main characteristics of his works may be described to be, (1) to introduce the western system of punctuation, the absence of which in the literature now extant is a notorious cause of confusion in the minds of young students, (2) a less frequent use of what is known as *sandhi* by which letters run into one another in compounds, often tending to make the meaning less intelligible to the reader, while at the same time preserving rhyme and harmony considered essential in Tamil versification and (3) the employment of less archaic and obscure words and expressions. He has besides tried to introduce the English system of blank verse and often makes a diversion to discourse upon topics related to modern social and moral ideas, such as the greatness of contentment, the law of causation, the moral Government of God, the necessity of acquiring wealth, the usefulness of the human body, the greatness of honour, &c. In imitation of Shakespeare and other Western dramatic writers Mr. V. G. Suryanarayana Sastriar occasionally introduces verses adapted to Hindu music, a feature entirely strange to the classic works of Tamil. In the celebrated three-fold classification of Tamil, *Iyal*, *Isai* and *Natakam* the last class is not represented so far as it is known by any important work, except that well-known Jain work Silappathikaram. There is no doubt there must have been works of this nature in former times, because it is well-known that the Tamil Kings were patrons of theatre, buffoons used to be their constant companions, aud dancing their favourite pastime. Perhaps these works have been lost in consequence of foreign vandalism. In reviving this branch of Tamil literature Mr. V. G, Suryanarayana Sastriar has done valuable service to the Tamil world by his Natakaviyal (Tamil Dramaturgy) which I understand has been prescribed as a Text book by the University of Madras for the B.A. Degree Examination of 1903. He is still young and I hope it will be his distinction and fame to leave behind him enduring marks of the influence of his genius on the new era into which Tamil literature is struggling to enter.

MADRAS, 20-10-1902.

G. SUBRAMANIA IYER.
*Editor "Hindu"*

# முகவுரை.

---

சேரநாட்டின் தலைநகராகிய கருவூரின்கணிருந்து சேரமான் கணைக்கா லிரும்பொறை யென்னும் ஓரரசன் செங்கோல் செலுத்திவந்தான். அவன் நல்லிசைப் புலவராகிய பொய்கையாரிடத்து அறிவு நூல் பல ஐயந்திரிபறக் கற்றுணர்ந்தவன்; பொருட் செல்வமே யன்றிச் செவிச் செல்வமுமுடையான். இத்தகைய அறிவுநசை யுற்ற அண்ணல் தனது நாடுகாவலைப் பெரிதுங் கருதானாயினன். அறிவின்மீதுள்ள அவனது பேரவாப் பிறிதொன்றையும் பற்றியெண்ணுதற்கு இடந்தரவில்லை. அவன் தனது நாடு முழுதும் நன்னிலையிலுளதெனவும், தன்போலவே பிறரும் நல்லியல் புடையாரெனவும், நம்பி யொழுகினன். அவன் அவ்வாறு ஒழுகுதல் பிறநாட்டு வேந்தரைத் தன்மீது வஞ்சிசூடி மேற்சென்று சேருமாறு தூண்டிற்று.

இனிச் சோணாட்டின்கண் உறந்தையம் பதியிற் சோழன் செங்கணான் உலகநூல் முற்றக் கற்றுப் பலதுறைப் பயிற்சியுமுடையனா யிருந்தனன். அவன் இத்துணையோ டமையாது அறிவுநூலும் நல்லாசிரியரை யடுத்து வழிபட்டு உணர்தர விழைந்தனன். அவ்வாறே தான் கொண்ட விழைவு கைகூடுதல் கருதிய கோச்செங்கட் சோழன் பொருட் செல்வத்தையொரு பொருளென மதியாப் புலவர் பொய்கையாரை வேண்டினன். அப்புலவர் பிரானார் செங்கணான் அறிவு நூலுணர்ச்சிக்கு இன்னும் அருகனல்ல னென்றுன்னி அவனது வேண்டுகோட்கு இணங்கினாரல்லர்.

ஈதிங்ஙனமிருப்ப, ஏதோ ஒரு காரணம்பற்றிச் சேரமான்கணைக்கா லிரும்பொறைக்கும் சோழன் செங்கணானுக்கும் வழக்குண்டாய் ஒருவரோ டொருவர் போர் செய்யும்படி நேரிட்டது. அங்ஙனமே போரும் கழுமல மென்னும் ஊரின்கண் நடந்தது. அதன்கட் சோழனே வாகை மிலைந்தனன். அஃதேயுமன்றிச் சேரமானும் அவன்றன் ஆசிரியராகிய பொய்கையாரும் சோழனாற் சிறை கொள்ளப்பட்டனர். அவ்வாறு போரிற் பிடியுண்ட அவ்விருவரும் சிறைக்கோட்டத் திடப்பெற்றனர். ஈங்கே நாடகந் தொடங்குகின்றது.

அதன் பின்னர்ச் சோழன் அற்றைநாண்மாலைப் பொய்கையாரை யழைத்துத் தன் வல்லமை தோன்றப், "பொய் கையாடாப் பொய்கையாரே! இப்பொழுது நீவிர் நமது கைச்சிறையாயினீர்; யாம் நினைத்த

முதற் களம்.

படியெலாம் நும்மை யாட்டவும் வல்லேம்" என்று கூறினன். அஃதுளத்துட் கொண்ட அருந்தமிழ்வாணர் சோழனை ஏறட்டுப் பார்த்து, "அண்ணலே! அறியாது கூறினாய். நீ யென்னைச் சிறைப்படுத்தவும் வல்லையோ? யானே யென்னைச் சிறைப்படுத்தினேனேயன்றி வேறெவரும் அங்ஙனஞ் செய்தாரல்லர், செய்யவும் வல்லரல்லர்" என்று

ஆழ்கருத்துடன் பேசினர். அங்ஙனம் அவர் பேசியதன் உட்கருத்தினை உய்த்துணராத செங்கணான், "நீவிர் நமது சிறைப்பட்டதும் பொய்யோ? 'பொய்கையார்' என்று நுமக்கிட்ட பெயர் சாலும்!" என்று கூறிப் புன்னகை செய்தனன். அது கேட்ட பொய்கையார் சிறிதும் அஞ்சாது, "ஓ! புல்லறிவாள! நின்பேதைமை நன்றாயிருந்தது! இத்துணை உய்த்துணரும் வன்மையிலாத நீயும் என்னையடுத்து அறிவுநூல் கற்றல் எங்ஙனமியையும்? நீ யெனது யாக்கை மட்டிலே சிறைப்பற்றினையே யன்றி எனது இன்னுயிரையுஞ் சிறைக் கொண்டனையோ? அஃது எனது பழவினை காரணமாகத் தனது பரந்தநிலையி னீங்கிச் சுரிந்துசுருங்கி அணுவாகி இவ் யாக்கையின்கண்ணே வதிகின்றது கண்டாய்" என்றலும், சோழன் சிறிது புன்முறுவல் செய்து அவரை மீட்டுஞ் சிறைக் கோட்டத்திற்கு ஏகவிடுத்து, அவர்க்கு வேண்டியதொன்றும் உதவாது ஆண்டு அவரது செயல்களை ஆராய்வான் விரும்பினன்.

இது நிற்க. சிறைக்கோட்டத்தின்கணிருக்குஞ் சேரமான் கணைக்கா லிரும்பொறை, தனது ஆசிரியர்பொய்கையாரைப் போல மனவமைதியும் இன்பமுங்

**இரண்டாங்களம்.**

காணாய்ச் சிறைக்களமுற்ற நான்முதல் உணவு கோடலொழிந்திருந்தான்; தான் இவ்வாறு போரிற் றொலைவுண்டு காவலி லிருத்தலைபற்றி யெண்ணி யெண்ணிப் பெரிதும் ஏக்கமுற்று அயர்வானாயினன்.

மற்று, அரசனுந் தான் விரும்பியாங்கே, அற்றைஞான்றிரவிற் சிறைக் கோட்டத்தின் அருகுசென்று பொய்கையாரை உற்று நோக்கினான். அவ்வள

**மூன்றாங் களம்.**

வில் இறைவனைப்பாடி நின்றபுலவர் நிலமகளை நோக்கி, "உலகமாதாவே! இதுகாறும் நின்னிற் பிரிந்தே படுத்துறங்குமாறு நேரிட்டது. அப்பொழுதெல்லாம் பெரிதுந் துன்புற்றேன். இப்பொழுதோ, யான் உனது அருமைத் திருமடியிலேயே படுத்துக்கொள்ளும் பெரும்பேறு பெற்றேன். இனியெனக்கென்னோ குறை?" என்று சொல்லிக் களிகூர்ந்தார். இவையனைத்தையுங் கண்ணுற்ற சோழன் அவரது இன்பவுளங்கண்டு மகிழ்பூத்து ஏகினான்.

அற்றை நள்ளிரவு அரசன் மனைவியாகிய இராசமாதேவி துயிலிடைக்கண்ட

**நான்காங் களம்.**

தோர் தீக்கனவுபற்றி உளங்கவன்றழன்றனள். அஃதுணர்ந்த அறிவுடை நங்கை யென்னும் அவளது தோழி அவளைப் பல்லாற்றானுந் தேற்றித்தெருட்டி நின்றாள். அங்ஙனந்தேறிய இராசமாதேவி அரசன்பால் தான் கண்ட தீக்கனவினை மொழிவான் சென்றனள்.

பின்னர்ச் சோழன் வைகறைக் காலத்திலேயே பொய்கையாரை யழைத்து

**ஐந்தாங் களம்.**

அவரை வலம் வந்து வணங்கிச் சிறைவீடு செய்து துதித்தனன். இவ்வாறு செங்கணான் நெறிப்பட்டமை தேர்ந்த பொய்கையார் அவன்மீது களவழி நாற்பது என்னுமொரு செந்தமிழ் நூல் பாடித் தம் மாணாக்கருள் தலைநின்றவனாகிய சேரமானைச்

சிறைக்கோட்டத்திற் கண்டு இந்நற்செய்தியை அவற்குரைத்து அரசன் முன்னர்ச்சேரமானையுங்கொண்டு சென்று இருபெருவேந்தரையும் நட்பாளராக்கி அவ்விருவரது குறையையும் ஒருங்கே நீக்குங் கருத்தினராய் வருகின்றார்.

மற்று, சிறைக்கோட்டத்திருந்து அயருஞ் சேரமான் தான் அந்நிலையிலிருந்து வருந்துவதனினும் உயிர்துறத்த லுயர்வாமன்றோ வென்றெண்ணி மனமறுகித் துன்புற்றனன். இன்னணந் துன்புற்று அரிதிற் பொழுதுபோக்குஞ் சேரமான், வழிநாண் முற்பகற்பொழ்தில் தண்ணீர் வேட்கைமீதூரப், பொறுக்கலாற்றாது சிறைக்கோட்டங் காவலரை விளித்துத் தான்றன் ஏவலரைப் பணிக்குமாறுபோலப் பருகு நீர் கொணர்மினெனப் பணித்தனன். அவ்வாறு பணிப்பக் கேட்ட காவலர், உடனே செல்லாராய்ச் சிறிது காலந் தாழ்த்துச் சென்று நெடுநேரங் கழித்த பின்னர் ஒருவன் கொஞ்சந் தண்ணீரைச் சேரமான் பருகுமாறு மிக்க ஏக்கழுத்தத்தோடு நின்று ஒரு கையால் நீட்டினான். அங்ஙனம் அவன் நீட்டிய நீர்க்கலத்தைச் சேரமான் கைக்கொண்டானல்லன். உடனே கோட்டங் காவலன் வெகுண்டு வரம்பு கடந்து மன்னவனை நகையாடினன்; பின்னர் அந்நீர்க் கலத்தைச் சேரமா னருகிலேயே வைத் தகன்றனன். அவன் அகன்றபின்னர்ச் சேரமான் மானமே யுயிரினும் மாண்புடைத்தாமென மதித்து அந்நீரினைப் பருகாமலே யிருந்து உயிர் துறந்தனன். அந்தோ! * 'மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே' என்ற புலவர் வாக்கும் பொய்யோ? இதனைக் காவலருளொருவன் அரசற் குரைப்பான் சென்றனன். இடையிற் சிறிது போழ்தினுள் ஆண்டு அக மகிழ்ச்சியோடும் அடைந்த பொய்கையார் சிறைக்கோட்டம் புக்குச் சேரமான் கணைக்காலிரும்பொறை கிடந்தவிடஞ் சென்றார்; அவனைக் கண்டார், கலங்கினார், கலுழ்ந்தார்; எழுந்தார், விழுந்தார், அறிவழிந்தார், தம்மை மறந்தார்; மீட்டும் அறிவுகூடி யெழுந்தனர், சேரமானை உற்று நோக்கினர், பற்றித் தூக்கினர், தம்மார்பம் ஏற்றித் தாக்கினர். அவ்வேளையில் ஓரேட்டிற் செந்தமிழ்ச் செய்யுளொன்று வரையப்பெற்றுக் கணைக்காலிரும்பொறையின் மார்பிற் கிடந்தது வெளிப்பட்டது; அதனை யெடுத்தார், படித்தார், கைசோர விடுத்தார்; அண்ணல் சேரமானை வாரியணைந்து பெரிதும் வாய்விடுத்து அழுதரற்றினார். காரியம் மிஞ்சிப் போயிற்றென் றுணர்ந்த நற்றமிழ்ப்பாவலர் தம்து நன்மாணாக்கன் பிரிவினையாற்றகில்லாது ஆண்டே சமாதியிலிருந்து யாக்கையை வீழ்த்தனர். அதன்மேற் சோழனுஞ் சிறைக்கோட்டஞ் சென்று சேர்ந்து, ஆண்டுப் புலவரும் மாணாக்கரும் ஒருங்கே யிறந்து கிடப்பக்கண்டு, தேவி கண்ட தீக்கனவின் பயன் பலித்தவா வுணர்ந்து பெரிதும் புலம்பினான்; உண்மை யுணர்ந்து தன் சிறை காவலரைத் தெழித்தான், பழித்தான், சிறைக் கோட்டத்தை யழித்தான். பின்னர்த் தான் அறியாது செய்த இப்பாவச் செயல்கட்குங் கழுவாயாகத் தேவகுலம் பல குயிற்றினான்.

ஆருங் களம்.

---

* இனியநாற்பது.

இதுவே இந்நாடகத்தின் கதைச் சுருக்கமாம். இஃது அங்கம் என்னும் ஒருவகை நாடகச் சாதியின் பாற்படும். இதனிலக்கணத்தை எமது நாடகவியலிற் கண்டுகொள்க. இது யாம் புனைந்து வெளிப்படுத்திவரும் நாமகள்சிலம் பின்கண் எட்டாம் பரலாம். இது பெரும்பாலும் அகவல் யாப்பினியன்றுளது; சிறுபான்மை ஆங்காங்கு வெண்பாவும் விருத்தப்பாவும் பிறவும் விரவி வந்துளது. இடையிற் 'களவழிநாற்பது' நூலினின்றும் சில பாக்கள் மேற்கொண் டுரைக்கப்பட்டுள. இஃது இன்னணம் முற்றுஞ் செய்யுளாய் முடிந்துளதேனும் பாத்திரங்களின் ஏற்றத்தாழ்வுகருதிச் சொல் விகற்பங்களும் நடைவேறுபாடுகளும் ஆங்காங்குக் காட்டப்பட்டுள; ஆதலின் இது நடித்துக்காட்டும் நலமுளதாகுமென்றற்கண் யாதோர் ஐயப்பாடு மில்லை. இனிக் களவழி நாற்பதும், "குழவியிறப்பினும்" என்ற புறப்பாட்டுமே இத்தமிழ் நாடகத்திற்கு முதனூலென நின்று உதவி புரிந்தன.

இவ் வங்கத்தின் முதற் களத்தில் ஆன்ம லக்கணமும்; இரண்டாங் களத்திற் போர்செயல் நீதியும்; மூன்றாங் களத்தில் மெய்யுணர்ந்தாரியல்பும், கலைநலமுடையார் யாக்கை நலங்கருதாதிருத்தலும், மனநிறைவின் மாட்சியும்; நான்காங் களத்திற் கனவுகாட்சியினியல்பும், காரணகாரிய முறைப்பாட்டின் பெற்றியும், கடவுளார் செயற்கருத்தும்; ஐந்தாங் களத்திற் பெரியோரைப் பேணுமாறும், குருவினிடத் தொழுகுமாறும், வாழ்க்கைப்பயனும்; ஆறாங் களத்திற் பொருட் செல்வத்தி னின்றியமையாமையும், களியாட்டின் தீமையும், இவ்வுலக வாழ்க்கையின் மேதகவும், யாக்கைச் சிறப்பும், தற்கொலைப் பாவமும், மானத்தின் மாண்பும், ஆசிரியர்க்கு மாணுக்கர்பாலுள அன்பும், மனவுணர்வில்வழிப் பாவமின்மைக்கோளும், பிறவும் ஓராற்றால் விதிமுகத்தானும் மறைமுகத்தானும் உதாரண முகத்தானும் காட்டப்பட்டுள பான்மை அன்புடையார்க்கு எளிதிற் புலப்படும்.

முதற்கண் இந்நூல் மாதந்தோறும் ஆங்கில மொழியின் அச்சிட்டு வெளிப்படும் கிறித்தவக் கலாசாலைப் பத்திரிகையின்கட் சிறிதுசிறிதாகப் பிரசுரமாகி வெளிப்போந்தது; அது கண்ட நண்பர் பலரும் நூலினைத் தனித்து வெளியிடல் வேண்டினமையின் இது வெளிப்படுவதாயிற்று. தம் பத்திரிகையினின்றும் யாம் பெயர்த்து அச்சிட்டுக் கொள்ளும் உரிமைதந் துதவிய அப் பத்திராதிபர் மாட்டு வந்தனத்துடன் நன்றிபாராட்டுதலைத் தவிர்த்து யாம்வேறு செயக்கடவ கைம்மாறென்னே? முற்றும் ஆங்கில மொழியானியன்று வெளிப்படும்அப்பத்திரிகையின்கண் விலக்கென எம் புன்னூலையும் பதிப்பித்து எம்மைப் பலரும் நன்கு மதிக்குமாறியற்றிய அப்பத்திராதிபர் கருணைத்திறம் ஒருபொழுதும் மறக்கற்பால தன்று.

இனி இது பற்பல தொழில் புரியுங்கால் இடையிடைக் கிடைத்த அவகாசங்களிலெழுதிய தாகலின் இதன்கண் வழூஉக்கள் பல மலிந்திருத்தலுங்

கூடும்; அற்றேல் நல்லிசைப்புலவராயினர் அவையிற்றைத் திருத்தி எம்மீது அருள் புரிவாராக.

இந் நன் முயற்சியின்கண் எம்மைத் தூண்டிக் கடைபோகுமட்டும் தோன்றாத்துணையா யுதவிபுரிந்து நின்ற எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாய நடராசப்பெருமானை மனமொழிமெய்களிற் றொழுகின்றனம்.

என்று மெங்குறை யாங்கும் பரப்புநர்
துன்றி யெம்மிடஞ் சொல்லறி மாணவர்
நின்று வேலை நிகழ்த்துந ராயினு
மன்ற வெங்குருமாரவர் வாய்மையே. (உ)

16-9-1902.
சென்னை.

வி. கோ. சூ.

---

குறை - குற்றம். யாங்கும் - எவ்விடத்தும். துன்றி - நெருங்கி. சொல்லறிமாணவர் - நூல் பயிலும் மாணக்கர். நின்று நிகழ்த்துநர்எனக் கூட்டுக. மன்ற - மிகவும்; பெரிதும். குருமார் - ஆசிரியர். வாய்மை - உண்மையாக. வாய்மையே அவர் எம் குருமார் என்க.

# முன்னுரை.

ஆசிரியர் இந்நாடகத்தினை இயற்றுதற்குக் 'களவழி நாற்ப' தினையும், "குழவியிறப்பினும்" என்ற தொடக்கத்த புறப்பாட்டினையுமே ஆதாரமாகக் கொண்டனர் என்பது அவர் எழுதியுள்ள முகவுரையானே விளங்கும். இந்நூலின்கட் குறித்துள்ள வரலாற்றினை மேற்குறித்த இருநூல்களுமேயன்றி வேறு சில நூல்களும் குறிப்பாக எடுத்துக் காட்டுகின்றன. செயங்கொண்டார் தாம் செய்த கலிங்கத்துப் பரணியில், "களவழிக் கவிதை பொய்கையுரை செய்யவுதியன் கால்வழித்தளையை வெட்டியரசிட்ட பரிசும்"* என்று கூறியுள்ளனர். "இன்னருளின், மேதக்க பொய்கை கவிகொண்டு வில்லவனைப் பாதத்தளை விட்ட பார்த்திபனும்," என்று விக்கிரம சோழனுலாவும், "அணங்கு, படித்துப் பொறையனைப் பொய்கைக்குப் பண்டு, கொடுத்துக் களவழிப்பாக் கொண்டோன்," என்று குலோத்துங்க சோழனுலாவும், "நல்லவன் பொய்கை களவழி நாற்பதுக்கு, வில்லவன் காற்றளையை விட்டகோன்," என்று இராசராச சோழனுலாவும், "சேரமான்றன்னடிக் கண்டு தளைவிடுத்தாய் ஏழ்தளையுன், பொன்னடிக் கென்பதென்ன புத்தியோ" என்று சொக்கநாதர் தமிழ்விடுதூதும், "செய்கை யரிய களவழிப்பா முன்செய்த பொய்கை யொருவனற் போந்தாமோ - சைய மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணி நாள் வாழ்த்திக், கொலைச்சிறைதீர் வேந்தக்குழாம்" என்ற தொல்காப்பிய நச்சினார்க்கினியருரை மேற்கோட் செய்யுள் ஒன்றும் இச்செய்தியைக் கூறுகின்றன. களவழி நாற்பதின் பழைய உரையின் இறுதியிற் காணப்படும், 'சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும் பொறையும் போர்ப் புறத்துப் பொருது, உடைந்துழிச் சேரமான் கணைக்காலிரும் பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழி, பொய்கையார் களம்பாடி வீடுகொண்ட களவழி நாற்பது முற்றிற்று," என்ற வாக்கியம் இவ்வரலாற்றைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் கூறுகின்றது. ஆயினும் புறப்பாட்டு, 74-ம் செய்யுளாகிய, "குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்" என்ற தொடக்கத்த பாவின் இறுதியிற் காணப்படும், பாடினோர் பாடப்பட்டோரைக் குறிக்கும் பகுதிக்குறிப்பில், "சேரமான் கணைக்காலிரும்பொறை சோழன் செங்கணானோடு திருப்போர்ப் புறத்துப் பொருது பற்றுக்கோட்பட்டுக் குடவாயிற் கோட்டத்துச் சிறையிற் கிடந்துதண்ணீர் தாவென்று பெறாது பெயர்த்துப் பெற்றுக் கைக்கொண்டிருந்து உண்ணான் சொல்லித் துஞ்சிய பாட்டு" என்று எழுதியுள்ள வாக்கியத்தால், சேரமான் கணைக்காலிரும்

---

* "வெட்டியரசிட்ட வவனும்" பாடபேதம்.

பொறை சிறைவீடு பெற்றமை கூறப்படாததோடு 'துஞ்சிய என்ற சொல்லால் அவனிறந்தான் என்பதும் புலனுகின்றது. இதனை ஆதாரமாகக் கொண்டே மானவிஜய ஆசிரியரும் கணைக்காலிரும் பொறை உயிர் நீத்தமையையே கூறினார். அங்ஙனமெனில், களவழிபாடிச் சிறைவீடு பெற்றது பொய்யோ என்பார்க்குச் சமாதானமாகச் சிறைவீடு பெற்றதும் உண்டு அவன் துஞ்சியதும் உண்டு, என்றிரண்டு பகுதியையும், ஒருவாறு பொருத்தியே தமது நாடகக் கதையை ஆசிரியர் அமைத்தனர்.

இது நிற்கத், தமிழ் நாவலர் சரிதையென்னும் நூலுள், "சேரன் கணைக்காலிரும் பொறை செங்கணுற் குணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்ட போது பொய்கையாருக்கு எழுதிவிடுத்த பாட்டு," என்ற தலைப்பின் கீழ் மேற்குறித்த "குழவி யிறப்பினும்," என்ற புறப்பாட்டுக் காணப்படுவதோடு, அதன் கீழ், "இதுகேட்டுப் பொய்கையார் களவழி நாற்பது பாடச் செங்கணுன் சிறைவிட்டு அரசளித்தான்," என்ற வாக்கியமும் காணப்படுகின்றது. இதுபுறநானூற்றிற் கண்ட குறிப்போடு மாறுபடுவது வெளிப்படையாகத் தெரிகிறது.

இனிச், சோழன் செங்கணுேடு பொருது பற்றுக் கோட்பட்டுச் சிறையின்கண் நீர் பெருது துஞ்சிய கணைக்காலிரும்பொறை வேறு என்றும், களவழி நாற்பதாற் சிறை வீடு பெற்று அரசுரிமை எய்தியவன் இன்னவன் வழித்தோன்றலாகிய மற்றொரு கணைக்கா லிரும்பொறை யென்றும், முன்னவனுெடு பொருதவன் 'எண்டோளீசற்கு எழுபது மாடஞ்சமைத்த' முதற் செங்கட் சோழனென்றும், பின்னவனுெடு பொருதவன் பொய்கையாரால் களவழி பாடும் புகழ்பெற்றஇரண்டாஞ் செங்கட் சோழனென்றும், பெரிய புராணத்திற் சேக்கிழார் கோச்செங்கட்சோழன் வரலாறு கூறுமிடத்து, "அனபாயன், முந்தைவரும் குல முதலோராய முதற் செங்கணுர்" என்று விதந்து பாராட்டியதே இதற்குச் சான்றென்றும் சிலர் கூறுவர். இங்ஙனம், 'துஞ்சிய' என்றதும் 'சிறைவீடு பெற்று அரசெய்தியதும்' ஒன்றற்கொன்று முரண்பாடுற்றுக் கிடத்தலே இத்தகைய ஆசங்கைக்கு இடனுகின்றது.

மேற்கூறியவற்றை யெல்லாம் நுனித்து நோக்குமிடத்துத் 'துஞ்சிய' என்ற சொற்கு, 'மயங்கிக்கிடந்த' அல்லது 'மூர்ச்சித்துப்போன' என்று பொருள் கொள்ளின், வெளிப்படையில்முரணுகத் தோன்றும். இவ்விரு பகுதிகளும் சிறிதும் இடர்ப் பாடின்றிப் பொருந்தும். ''துஞ்சிய' என்ற சொல் இறந்த என்ற பொருளையே மிகுதியும் தருவதாயினும் இங்கு மூர்ச்சித்த என்று பொருள் கொள்ளவேண்டும்,' என்று பிரமஸ்ரீ மகாமகோபாத்தியாய தாக்ஷிணுத்ய கலாநிதி உ. வே. சாமிநாதையர் அவர்கள் (சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும் பக்கம் 94) கூறியது மிகவும் பொருத்தமுடையது.

ஈதிங்ஙனமாகவும், மானவிஜய வாசிரியர் கதையினை வேறுவிதமாக முடித்தது சாலாதே யெனின், அற்றன்று; உண்மை எவ்விதமாயினும், ஆசிரியர்

தாமெழுதுவது நாடகமாதலானும், நாடகவாசிரியன் தான் முடித்துக் காட்ட விரும்பிய பொருளமைதிக் கேற்பக் கதையினை மாற்றிக்கோடல் தக்க தொன்றாய புனைந்துரையாதலானும், எடுத்துக்கொண்ட நாடகம் அவலச் சுவைத்தாய அங்கமாதலானும், அதற்கேற்பத் தீப்பொருளிறுதியாய் ஆருயி ரிழத்தல் கூறுவது அமைவுடைத்தாதலானும், அங்ஙனம் கோடற்குத் 'துஞ் சிய' என்ற சொல் இடந்தரலானும், நாடகவாசிரியர் முறைமையில் நோக்குமி டத்து அன்னார் கொண்டது தவறாகா தென்பது தானே போதரும்.

இந்நாடகம் தசரூபகங்களுள் ஒன்றாகிய அங்கம் என்னும் சாதியுள் அடங்கும். இதனிலக்கணம்,

"அவலச் சுவைத்தா யங்கமொன் றுடைத்தாய்க்
கவலைகொண் மகளிர் கசிந்துள மழுங்க
அண்மினர் வாய்விடுத் தரற்றுமாண் பிற்றாய்
வாதம் விளைத்து வாய்ப்போர் காட்டி
மக்கள் பாத்திரமா வயங்குறு வதுவே
அங்க மென்ன அறிதல் வேண்டும்"

என்று இவ்வாசிரியர் தாமெழுதிய நாடகவியற் சூத்திரத்தானினிது விளங்கும்.

பொய்கையார் என்ற பெயருடைய புலவர்கள் பலர் இருந்தனர் என் பது பழைய நூல்களால் வெளியாகின்றது. களவழி நாற்பது பாடியவர் ஒரு பொய்கையார். புறநானூற்றில், "கோதை மார்பிற் கோதையானும்," "நாட னென்கோ வூரனென்கோ" என்ற தொடக்கத்த செய்யுட் (48, 49) களால் சேர மான் கோக்கோதை மார்பனைப் புகழ்ந்து பாடியவர் பொய்கையார் என்று தெரி கிறது. பொய்கையார் பாடியதாக நற்றிணையில், "பருவர னெஞ்சமொடு பல் படாகல" என்ற தொடக்கத்துச் செய்யுளொன்று காணப்படுகிறது. நாலாயிர திவ்யப் பிரபந்தத்துள் முதற் றிருவந்தாதி பாடியவர் பொய்கையாழ்வார். இவையே யன்றிப் பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்றென வொருசாராரால் கொள்ளக்கிடக்கும் 'இன்னிலை' யென்னும் நூலொன்று பொய்கையார் பெய ரால் வெளிவந்துள்ளது. இன்னும் யாப்பருங்கல விருத்தி யுரையிற் சில மேற் கோட் செய்யுட்கள்பொய்கையார் வாக்காக எடுத்துக் காட்டப்பட்டுள்ளன. மேற்கூறிய எல்லாவற்றையும் பொய்கையார் என்ற புலவரொருவரே பாடினா ரென்றும் அவரே திருமாலடிமையிற் சிறந்துவிளங்கினமையின் ஆழ்வார் என்று அழைக்கப்பட்டனரென்றும் நற்றிணை நூன்முகத்து அதன் உரை யாசிரியர் கூறியுள்ளார். ஆயினும் முதற் றிருவந்தாதிச் செய்யுணடைக் கும் ஏனைய புறநானூறு களவழி நாற்பதாதிய நூல்களின் நடைக்கும் பெரி தும் வேறுபாடு காணக்கிடக்கின்றமையானும், ஆழ்வார் மறந்தும் புறந்தொழா மாண்பினராதலானும், முதற் றிருவந்தாதி இயற்றிய பொய்கை யாழ்வார் வேறு, ஏனையவற்றை இயற்றிய பொய்கையார் வேறுவர் என்று கொள்வதே

அமைவுடைத்தாகும். இங்ஙனங் கோடலே மகாமகோபாத்தியாய சாமிநா தையர் அவர்களுக்கும் கருத்தென்பதைப் புறநானூற்றுப் பாடினோர் வரலாற் றுக் குறிப்பா லறியலாம். பொய்கை என்பது தமிழ் நாட்டு மேற்றிசைக் கண் ணதோரூர் என்றும்அங்குப் பிறந்தமையால் இவர்க்குப் பொய்கையார் எனப் பெயர் வாய்ந்ததென்றும் கூறுவர். இவரே தாம்பாடிய "கோதைமார்பிற் கோதையானும்," என்ற புறப்பாட்டுள், "கண்ணா றும்மே கானலந் தொண்டி, யஃதெம் மூரே" என்று கூறியது அவர் சேரனையடைந்த பின்னர் அவர் தாம் வசித்துவந்த தொண்டியைத் தமது ஊராகக் கூறினரென்று கோடலேபொருந் துவதாகும். இவருடைய காலம் சோழன் செங்கணான் காலமே.

சோழன் செங்கணான் உறையூரில் அரசுபுரிந்த சோழருளொருவன். இவன் பிறக்கவேண்டிய அமயங் கழித்துப்பிறந்தமையால் சிவந்த கண்களை யுடையனாயினன் என்றும், அதனால் அவனுக்குச் செங்கணானெனப் பெயர் வாய்ந்ததெனவும் புராணம் கூறும். இவனைக் கோச்செங்கட்சோழன் என்றுங் கூறுப. அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவன். இவன் எண்டோளீ சற்கு எழுபதுமாடங் கட்டியவனாகக் கூறப்படுதலின் சிவபத்தியிற் சிறந்தவன் என்பது புலப்படும். திருமங்கை மன்னன் பெரிய திருமொழியில் இவன் சிறப்பித்துக் கூறப்பட்டிருத்தலின் திருமால் பத்தியிலுஞ் சிறந்தவன் என்ப தற்குத் தடையில்லை. நன்னிலம், அம்பர் முதலானதலங்களில் இவன் கோயில் எடுப்பித்த விவரத்தைத் தேவாரப்பதிகங்கள் கூறுகின்றன. இவன், சேரமான், பொய்கையார்ஆகிய இருவர் மாட்டுமிழைத்த தீமைக்குக் கழுவாயா கப் பலதலங்களிலும் தேவகுல மெடுப்பித்தான் என்று இந்நாடகவாசிரியர் தமது கதைக்கு ஏற்பப் பொருத்திக்கொண்டது மிகவும் பாராட்டற்பாலது. இவன் கழுமலப் போரிற் கணைக்காலிரும் பொறையை வென்றகப்படுத்திய செய்தியை,

"நன்னன் ஏற்றை நறும்பூண் அத்தி
துன்னருங் கடுந்திறற் கங்கன் கட்டி
பொன்னணி வல்விற் புன்றுறை யென்றாங்
கன்றவர் குழீஇய அளப்பருங் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டது நோனா னாகித் திண்டேர்க்
கணைய னகப்படக் கழுமலந் தந்த
பிணையலங் கண்ணிப் பெரும்பூட் சென்னி,"

என்று அகநானூற்றுச் செய்யுட்பகுதி விளக்குகின்றது. இதன்கண் கழு மலப் போருக்குக் காரணமும் ஒருவாறு கூறப்பட்டுள்ளது.

சேரனது படைத் தலைவர்களாகிய நன்னன் முதலியோருடன் சோழ படைத்தலைவனாகிய பழையன் பொருது அவர்களை வென்று அவர்

பாசறையை அழித்த பின்னர்த் தான் இறந்து பட்டானென்பதும் அங்ஙனம் அவன் பட்டமைக்குப் பொறுதலனாகிய சோழன் படைகொடு சென்று கழுமல மென்னுமிடத்திற் சேரனையும் அவன் றுணையரசர்களையும் பொருது வென்றதுமன்றிக் கணைக்கா லிரும்பொறையைக் கைப்பற்றியும் மீண்டானென்பதும் மேற்குறித்த அடிகளால் விளங்குகின்றன. ஆயினும், அச்செய்யுளின் உரைக்குறிப்பில், 'கணையன் - சேரன் படைமுதலி; நன்னன் சொன்னவர்க்குப் பிரதானி,' என்று காணப்படுதலின், சிலர் அச்செய்யுளிற் குறித்த கணையன், சேரமான் கணைக்கா லிரும்பொறையல்லன் அவனது சேனாபதியே என்றும், சேரமானைப் பற்றியது மற்றோர் போர்க்களத்து என்றும் துணிந்து கொண்டனர். என்றாலும், இந்நாடகவாசிரியர், மேற்குறித்த அகநானூற்றுக் குறிப்புரையைத் தழுவாது, "ஒ ஓ உவமனுறழ்வின்றி யொத்ததே, காவிரிநாடன் கழுமலங் கொண்ட நாள்..........புனனாடன், மேவாரை யட்டகளத்து" என்று களவழி நாற்பதில் கழுமலப் போரையே பொய்கையார் சிறப்பித்துப் பாடியிருத்தலாலும், அக்கழுமலத்தையே "புனனாடன் வஞ்சிக் கோவட்ட களம்" ஆகப் பின்னரும் அவர் கூறலாலும், களவழி நாற்பதின் பழைய வுரையின் இறுதியிற் காணப்படும், "சோழன் செங்கணானுஞ் சேரமான் கணைக்கா லிரும்பொறையும் போர்ப்புறத்துப் பொருதுடைந்துழிச் சேரமான் கணைக்கா லிரும்பொறையைப் பற்றிக்கொண்டு சோழன் செங்கணான் சிறைவைத்துழிப் பொய்கையார் களம்பாடிவீடு கொண்ட களவழி நாற்பது முற்றிற்று," என்ற வாக்கியத்தால், பொருதுடைந்து பற்றுக்கோட்பட்டவன் கணைக்கா லிரும்பொறையே என்று தெளிவாக விளங்குதலாலும், 'கணையனகப்படக் கழுமலந்தந்த' என்ற அகநானூற்றடியிற் குறிக்கப்பட்ட கணையன், கணைக்கா லிரும்பொறை யென்றே துணிந்து கொண்டனர்.

ஈண்டுக் குறித்துள்ள கழுமலம் என்பது சீகாழிப்பதியைக் குறிப்பது அன்று, சேரநாட்டகத்ததோரூர் என்றே, இந்நாடகவாசிரியர் கருதியுள்ளாரென்றாலும், அதுவும் அதன் பெயரை நோக்குமிடத்து ஓர் புண்ணிய க்ஷேத்திரமாக இருத்தல் வேண்டுமென்று நினைத்தே, தமது நாடகத்தில், " திருக்கழுமலத்துச் செருக்களனின் வென்றியை" என அப்பதியை விசேடித்துக் கூறியுள்ளார். கழுமலம் சேரனுடைய நகர் என்பது, "நற்றேர்க்குட்டுவன் கழுமலத் தன்ன அம்மாமேனி," என்ற அகநானூற் றடிகளால் விளங்கும்.

கணைக்காலிரும் பொறையைச் சிறைவைத்த இடம் குடவாயிற் கோட்டம் என்பது, "குழவி யிறப்பினும்" என்ற புறப்பாட்டின் கீழ்க்குறிப்பாற் றெரியவருகின்றது. இதனையே "குணவாயிற் கோட்டத்துத் தளைப்பட்ட போது" என்று தமிழ் நாவலர் சரிதை கூறுகின்றது. பண்டைக் காலத்துப் பெரிய தலைநகரங்களின் நான்கு வாயில்களிலும் புறம்பே கோட்டங்கள் அமைக்கப்பட்டிருந்தன வென்பதும், அவை தத்தம் திசைப் பெயரான் விசேடிக்கப்பட்டுப் பெயர் வழங்கப்பட்டு வந்தன என்பதும், பிற்காலத்தில் அத்

தலைநகரங்கள் சிறப்பிழந்து குன்றிய காலத்தும் அப்புறநகர்க் கோட்டங்கள் அவ்வப் பெயரான் அழைக்கப்பட்டு வந்தன வென்பதும், அக்கோட்டங்களைச் சூழ்ந்து சீறூர்கள் உண்டாகிப் பழைய கோட்டங்கள் அழிந்து போன காலத்தும் அச்சீறூர்களும் அக் கோட்டங்களின் பெயரையே பெற்று வரலாயின என்பதும், ஊர்ப்பெயர் வரலாற்று முறையை யாராய்வோர்க்கு எளிதிற் புலனாம். ஆகவே, குணவாயில் குடவாயிற் கோட்டங்கள் இப்பொழுது பெரிய நகரங்களைச் சார்ந்த சீறூர்களாகச் சில* இடங்களிற் காணப்படினும் அக்கோட்டங்கள் ஆதியில் ஊர்களையே குறித்துள்ளனவென்று அவற்றைத் தேடுவதிற் பயனில்லை. எனவே, வென்ற அரசன் தோற்றுப் பற்றுக்கோட்பட்ட அரசனைத் தன்னூர்க்குக் கொடுவந்து அவ்வூர்க் கோட்டத்திற் சிறை வைத்தனனென்று கொள்வது பொருத்தமுடைய தொன்றாகும். ஆதலால், புறநானூற்றிற் குடவாயிற் கோட்டம் என்றது செங்கணானின் தலைநகராகிய உறந்தையம்பதியின் மேலைவாயிற் புறம்புள்ள கோட்டமென்று கொண்டு அதன் கண்ணே கணைக்கால் இரும்பொறை சிறையிடப்பட்டனன் என்று இந் நாடக வாசிரியர் கூறியது தவறாகாது. பொய்கையாரையும் உடன் சிறையிட்டதைப்பற்றி முந்தை நூல்கள் எவையும் கூறாவிடினும், நாடகப் போக்கிற்கேற்ப இவர் அங்ஙனம் கூறினாராதலின் அவர் எவருடனும் முரணினார் என்று கூறற் கிடமில்லை.

இனிப், 'போர்ப்புறத்து' என்பதற்குச் சாதாரணமாகப் போர்க்களத்து என்று பொருள் கூறலாமாயினும், அஃது அத்துணைச் சிறப்புடைய தன்றென்று கொண்டு, போர் என்னும் ஊரின் புறத்து எனப் பொருள்கூறலே சிறப்புடைத்தென்றும், அப்போர் என்னும் ஊர் சோழனது சேனாவீரனாகிய பழையனதாய்ச் சோணாட்டிலுள்ளதொரு நகரென்றும் சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். "புனலம் புதவிற் போஒர்க் கிழவோன், பழைய னோச்சிய வேல்," என்று அகநானூறும், "வெண்கோட் டியானைப் போஒர்க் கிழவோன், பழையன் வேல்," என நற்றிணையும் போர் என்னும் ஊர் பழையனுடைய நகராய்க்கூறுமாயினும், † ஆண்டுச் செங்கணாற்கும் பொறையற்கும் போர் நிகழ்ந்ததாகக் கூறவில்லை. முருகக் கடவுள் கோயில் கொண்டுள்ளதும் சிதம்பர சுவாமிகளாற் பாராட்டப் பெற்றதுமான போரூர் என்ற ஸ்தலமுமொன்றுண்டு. இக்காலத்துத் திருப்பூர் என வழங்கப்படும் ஊர் சேரநாட்டதாதலின் அதுவே அக்காலத்தில், திருப்போர் என வழங்கப்பட்டிருத்தல் வேண்டும் எனச் சிலர் ஊகிக்கின்றனர். முன்னர்க் குறித்துள்ள அகநானூற்றுச் செய்யுட்பகுதியிற் "பழையன் பட்டெனக் கண்டது நோனானாகித் திண்டேர்க் கணைய னகப்ப

* குடவாயில், குடவாசல் என வழங்கப்பெற்றுக் கும்பகோணத்திற்கு மேற்கிலுள்ள ஒரு சீறூரையும்; குணவாயில் என்பது வஞ்சி நகரத்திற்குக் கீழ்த்திசையிலுள்ளதாய திருக்குணவாயில் என்னும் ஊரையும் குறிக்கும்.

† 'பேஎர்க் கிழவோன்' என்ற பாடமும் உண்டு.

டக் கழுமலந்தந்த," என்று பழையன் செய்தி காணப்படுதலின், ஈண்டுக் குறித்த போர் அவனுடைய ஊரே என்று துணிதற்கு இடமிருப்பினும், புறநானூற்றில்,

"வருதார் தாங்கி யமர்மிகல் யாவது," (செய். 62)
"களிறு முகந்து," (செய். 368)

என்ற செய்யுட்களின் கீழ்க் குறிப்புக்களில், 'போர்ப் புறத்துப்பொருது,' என்று காணப்படும் இடத்திலும், போர் என்பது பழையனது ஊரே என்று கொள்ளுதற்கு இடஞ் சிறிதுமில்லாமையால், 'போர்ப் புறத்துப் பொருதல்' என்னுஞ் சொற்றொடர்க்கு வேறு பொருள் கோடலே அமைவுடைத்தெனத் தோன்றுகிறது. மேற்சென்ற படையும் எதிரூன்றிய படையும் தம்முட் கலந்து பொருமிடத்தே இருதிறச் சேனாதிபதிகளுந் தம்முடைய வன்மைதோன்றத் தனியே பொருது நிற்றலைப் 'போர்ப்புறத்துப் பொருதல்,' என முன்னையோர் குறிப்பித் திருத்தல் கூடும் எனக் கருதுகின்றேன்.

சேரமான் கணைக்கா லிரும்பொறை புலவர் பெருமானை பொய்கையாரைத் தனது ஆசிரியனாகக் கொண்டதோடு அமையாது அவரைத் தனது அவைக்களப் புலவர் பெருமானாகப் பாராட்டி யிருந்தானென்பது இந் நாடகத்தாற் புலனாம்.

இவன் தன்னொடுபகைத்த மூவன் என்னுஞ் சிற்றரசனது பல்லைப் பிடுங்கித் தனது தொண்டி நகர்க் கோட்டைவாயிற் கதவிற் பலருங்காண அழுத்தி வைத்திருந்தனன் என்றசெய்தி நற்றிணையிற் "பருவர னெஞ்சமொடு" என்ற செய்யுளால் விளங்குகின்றது. இக்கவியினைப் பாடியவர் பொய்கையார். அச்செய்யுளில்,சேரனைத் 'தெறலருந்தானைப் பொறையன்' என்று குறிப்பித் திருத்தலால், அப்பொறையன் கணைக்கா லிரும்பொறையென்றே கொண்டு நற்றிணை யுரையாசிரியரும் பொருளெழுதி யுள்ளார்கள். புறநானூற்றில், "கோதை மார்பிற் கோதையானும்" என்ற தொடக்கத்த செய்யுளிற் பொய்கையார் தொண்டி மன்னனைச் சேரமான் கோக்கோதை மார்பனைப் பாடியுள்ளார். இதனால், தொண்டியைத் தலைநகராகக்கொண்டு சேரமான் கோக்கோதை மார்பனும் அவன் பின்னர்ச் சேரமான் கணைக்கா லிரும்பொறையும் பொய்கையார் காலத்திலேயே அரசுபுரிந்தன ரென்பது கொள்ளக்கிடக்கும்.

இனி இந்நாடகத்தின்கண் அமைந்துள்ள பாத்திரர்களின், குணவிசேடப் பகுதிகளையும், களங்கடோறுங் காணக்கிடக்கும் பொருள்விசேடப் பகுதிகளையும் நூலாசிரியரே தமது முகவுரையிற் செவ்விதாக எடுத்துக் காட்டியுள்ளனர் முக்கியமாக இந்நாடகத்தினைப் படிக்குநர்க்கு, ஆசிரியன் தன் அன்புடை மாணவன்பாற் காட்டும் உடலுயிர் நீங்கும் அளவற்ற ஆதரத்தின் நிலையும், மாணவனுக்குத் தன்மாட்டு அருள்செய்யும் ஆசிரியன் பாலுள்ள பேரன்

பின் நிலையும் இத்தன்மையினவென்பது விளங்காமற் போகாது. " குற்றமிலாத் தாதைமக வென்றோர்தங் கோண்மறுத்துக், கற்றறிந்த காதலனுங் காதலியு மாகுநிலை, மற்றறிந்த வாசானு மாணவனு மாமிவர்கட், குற்ற வியைபு," என்ற கொள்கையை நன்கு பற்றிய இந்நூலாசிரியர்தம் இயல்பினை, இச்சிறு நாடகம் பிரதிபிம்பித்துக் காட்டுகின்ற தன்மை தெள்ளிதின் விளங்கும்.

இங்ஙனம் :

அண்ணாமலை நகர்,
30—12—31.

ந. பலராம ஐயர்.

உ

# மான விஜயம்

## பாயிரம்.

---

### கடவுள் வாழ்த்து.

---

விநாயகர் வணக்கம்.

இன்னிசை வெண்பா.

*காமருவு சக்கிரத்தைக் கைக்கொடுத்தின் றேதனது*
*மாமனைக்கூத் தாட்டியகைம் மாமுகத்தெம் பெம்மானை*
*நாமுவந்து நாளு நயந்து தொழுகுதுமிஃ*
*தேமமிகு மாலா கியர்.* (3)

சுப்பிரமணியர் வணக்கம்.

இன்னிசை வெண்பா.

*குருகுபெயர்க் குன்றங் குமைத்தவடி வேலோன்*
*பருகுகலை யெல்லாம் பரிந்துலகிற் றந்தோன்*
*முருகனிணைத் தாண்மலரை முற்புகுந்து நெஞ்சே*
*கருதினருள் செய்யுமவன் காண்.* (4)

---

*கா - முதனிலைத் தொழிற்பெயர். காத்தற்றொழிலையுடைய சக்கிரம். திருமாலின் காத்தற்றொழில் அவர் சக்கிரத்தின் மேலேற்றப்பட்டது. மாமன் - திருமால்; உமையின் உடன் பிறந்தாராதலின். மாமுகத்து எம்பெம்மான் - எமது பெருமானாகிய கஜாநநன். உவந்து - மகிழ்ந்து. நயந்து - விரும்பி. தொழுகுதும் - வணங்குவோம். ஏமம் - இன்பம்; காவலுமாம். ஆகியர் - ஆகுதற்பொருட்டு. தக்கயாக சங்கார காலத்தில், திருமாலெறிந்த திகிரிப்படையை வீரபத்திரனணிந்த வெண்டலை கௌவிற்றாக, அதனைப் பெறுதற்பொருட்டுத் திருமால் விகடக் கூத்தாடிய ஞான்று, சிரித்த வெண்டலை வாயினின்றும் கீழ்வீழ்ந்த சக்கிரத்தை, விநாயகர் விரைவிற்கைக் கொண்டதைக் கண்ட மாயோன், அவர் முன்னர் மீளவும் நெடும் பொழுது விகடநடம்புரிந்து திகிரிபெற்ற புராண கதையீண்டுக் குறித்துள்ளது. காஞ்சிப்புராணம் விடுவச்சேனீசப் படலம் நோக்குக.*

*(செய் - 4.) குருகுபெயர்க் குன்றம் - கிரௌஞ்சமலை. குமைத்த - அழித்த. மனத்தாற் பருகு கலை என்க. கலை - நூல். பரிந்து - அன்புற்று. இணைத்தாள் மலர் - உபயபாத கமலம். முற்புகுந்து - முன்னிட்டுச் சென்று. கருதின் - சிந்தித்தால். அவன் அருள் செய்யுமென்க.*

### நாமகள் வணக்கம்.

#### நேரிசை வெண்பா.

நாமகள்பூந் தாட்கு நலங்கொள் சிலம்பொன்று
தேமருவு செந்தமிழிற் செய்குதுமாற்—பாமயிலெந்
நாத்தா னரங்கமா நண்ணி நயந்துதிருக்
கூத்தாடி நிற்குங் குறித்து. (5)

### நடராசர் வணக்கம்.

#### நேரிசை வெண்பா.

மான விசயமெனு மன்னு டகம்புலவர்
போனக மாகப் புகல்கிற்பா—ஞானச்
சபாபதிப்பே ரின்பத் தனிப்பொருளின் றாளை
யவாவிநெஞ்ச மேநீ யடை. (6)

### சங்கப்புலவர் வணக்கம்.

#### கலி விருத்தம்.

உலக மென்னு முயர்தமிழ் வாணரை
யிலகு பொன்னக ரின்பமும் வெஃகலா
வலகில் பேரவை யாளரை நல்லிசைப்
புலவ ரைத்தினம் போற்றி வணங்குவாம். (7)

---

(செய் - 5.) நாமகள் - வாணி. பூந்தாள் - கமலப்பூவனையதாள். நலம் - அழகு. சிலம்பு - நூபுரம். தேம் - இனிமை. பாமயில் - பாவாகிய மயில்; கலைமகள். நாத்தான்: தான் - சாரியை. அரங்கம்-நடனசாலை. குறித்து - அருள் செயக்கருதி. உருவகவணி.

(செய் - 6.) மானம் - குடிப்பிறந்தார்க்கு உரியவாய குணங்களுள் முதன்மையானது. இஃது எஞ்ஞான்றும் தந்நிலைமையிற் றாழாமையும் தெய்வத்தாற் றாழ்வுவந்துழி உயிர் வாழாமையுமாம். விசயம்-வெற்றி. மான விசயம் - மானத்தாலடைந்த வென்றி, 'வாள்வென்றி' யென்றாற்போல. மூன்றனுருபும் பயனு முடன்றொக்கது ஆறனுருபுத் தொகையுமாம். மன் - நிலைபெற்ற. போனகம் - உணவு. தனிப்பொருள்-பரம்பொருள். தமது தமிழாசிரியர் பெயரான் நடராஜப் பெருமானைக் குறித்தது ஈண்டுக் கருதற்பாலது.

(செய் - 7.) 'உலகமென்ப துயர்ந்தோர் மாட்டே' என்பதில் உயர்ந்தோர் இவராவர் என்பதை விளக்கினர். வெஃகலா - விரும்பாத. அலகில் பேரவையாளர்: அளவில்லாத பெருமை வாய்ந்த சங்கப் புலவர். தமிழுள்ள அளவும் இவர் இசை நிற்குமாதலின் நல்லிசையென விசேடித்தனர்.

## அவையடக்கம்.

கை. வேறு.

பெரும்பொரு ளறிஞர்சொற் பேணி நாடொறு
மருந்தமிழ் தாமென வவற்றி னன்புபூண்
டிருந்தினி தன்னரை யிறைஞ்சும் பண்பினே
மருங்கலை யவையினுக் கடக்கங் கூறலென்? (8)

இளிவர லெனுஞ்சுவைக் கெடுத்துக் காட்டெனு
வெளிவரு நகைக்குமுன் விளம்பு காட்டெனு
வெளிவரு மிதனையு மினிதின் மேற்கொள்வார்
தெளிவுட னூற்சுவை தேரு நாவலர். (9)

வஞ்சித்துறை.

ஆதலா னஞ்சலை
நீதியார் நெஞ்சமே
போதுவாய் புந்திகொண்
டோதுவா மோர்ந்தரோ. (10)

---

(செய் - 8.) பெரும்பொருள் வாய்ந்த சொல்லெனக் கூட்டுக. நின்றுங் குரைப்பினுமமையும். அருந்து அமிழ்து - பருகும் அமுதம். அன்னர் - அறிஞர். இனிது இறைஞ்சும் என்க. கலை - ஈண்டுக் கலைஞர் மேற்று.

(செய் - 9.) நகை, இளிவரல் இரண்டும் மெய்ப்பாடுகள். "நகையே யழுகை யிளிவரன் மருட்கை, யச்சம் பெருமிதம் வெகுளி யுவகையென், றப்பா லெட்டே மெய்ப்பா டென்ப," என்பது தொல்காப்பியம். இளிவரல் - இழிபு. நகை - சிரிப்பு; அது முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப. ஈண்டுக் குறித்தது எள்ளல்பற்றிய நகையாம்; பேதைமை பற்றியதுமாம். இளிவரல் மென்மை பற்றியதாம். சுவை - இரசம். எடுத்துக்காட்டு, காட்டு - உதாரணம். வெளிவரும் - தோன்றும். முன் - முதன்மையாக. எளிவரும் - இகழ்ச்சி பொருந்தும். இளிவரலும், நகையும் சுவைகளாதலின், நூற்சுவை தேருநாவலர் இவற்றையும் மேற்கொள்வரென்றனர். தெளிவுடன் தேர்தலாவது, ஐயம், திரிபு, அறியாமை யின்றியுணர்தல்.

(செய் - 10.) நீதி - ஒழுக்கம். புந்திகொண்டு ஓர்ந்து ஓதுவாம் போதுவாய் என முடிக்க.

## நாடக பாத்திரங்கள்.

1. சேரமான் கணைக்கால் இரும்பொறை : சேரநாட்டரசன்.

2. சோழன் செங்கணான் : சோணாட்டரசன்.

3. பொய்கையார் : கடைச்சங்கப் புலவரு ளொருவர்; சேரமான் கணைக்கா லிரும்பொறைக்கு ஆசிரியர்.

4. இராசமாதேவி : சோழன் செங்கணான் மனைவி.

5. அறிவுடைநங்கை : இராசமாதேவியின் பார்ப்பனத்தோழி.

பிரபுக்கள், சிறைகாவலர், சேவகர், முதலாயினோர்.

### நாடக நிகழ்விடம்.

உறந்தையம் பதியிற் சோழனரண்மனையும் அதனை யடுத்துள சிறைக்கோட்டங்களுமாம்.

# மான விஜயம்.

## ஓர் அங்கம்.

### முதற்களம்.

இடம் : சோழ னரண்மனை.

காலம் : வெயின்மாலை.

பாத்திரங்கள் : செங்கணான், பொய்கையார், பிரபுக்கள் முதலாயினோர்.

செங்கணான்:—(பொய்கையாரை நோக்கி)

உலகெலாம் படைத்த வொருதனி முதல்வன
அலகிலா விளையாட் டற்புத மென்னே!
கழுமலப் போரிற் கான்செறி வாகைக்
கொழுமலர்ப் பிணையல் கொண்டவன் யார்கொல்?
எந்தம தாற்றல் சிந்தியான் வந்தனன்
சேரமா னென்னும் வீரமார் வேந்தன்
அறிவுநூல் கற்றுச் செறிவு மீக்கொள
மறப்போ ரின்க ணறப்போ ரென்ப

---

வெயின்மாலை - மாலையின் முற்கூறு. மஞ்சள் வெயில் கூடியமாலைக்காலம். மாலையின் பிற்கூறு இருண்மாலையாம்.

வரி. 1. முதல்வன - முதல்வனுடைய. 2. அலகிலா - அளவில்லாத; அளவிட முடியாத எனினுமாம். விளையாட்டு - ஈண்டு, எளிதின் முடியுஞ் செயல்; 'சாத்தனுக்கு ஐங்கலப்பாரஞ் சுமத்தல் விளையாட்டு', என்ற இடத்திற்போல. படைத்தலாதிய அரிய செயல்களையும் விளையாட்டா எளிதின் முடித்தலின் 'அற்புத மென்னே' என்றனன். 3. கழுமலம் - சோழன் செங்கணானும் சேரமான் கணைக்காலிரும்பொறையும் பொருத போர்க்களம். கான் - மணம். வாகை - வெற்றி மாலை; "போர்க்களத்து மிக்கோர்செரு வென்றது வாகையாம்."

4. பிணையல் - மாலை. பிணைக்கப்படுதலின் மாலைக்கு ஆகுபெயர். 5. ஆற்றல் - வன்மை. சிந்தியான் - (முற்றெச்சம்) சிந்தியாமல். 7. செறிவு-அடக்கம். cf. "செறிவறிந்து சீர்மை பயக்கும்" [திருக்குறள். 129]. மீக்கொள - மிக. வினையெச்சம் காரணப் பொருட்டு. 8. மறப்போர் - வீரயுத்தம். அறப்போர் - தருமயுத்தம்.

இல்லையென் றுணரான் வல்ல சேரமான்
கணைக்கா லிரும்பொறை துணைக்காவ லின்றி
நிற்பது கண்டவெம் விற்பொரல் வீரர்
ஓய்யெனப் பாய்ந்தவன் மெய்யுறப் பற்றிக்
கொணர்தலு மதனை யுணர்தரு மவன்படை
புறந்தந் திரியச் சிறந்தன முவகை.

பிரபு முதல்வன்:—(இளநகை யரும்பி)
ஆதலின் வெற்றி யடைந்தோம்.

பிரபு இரண்டாவன்:—(மகிழ்ந்து)
சேத மொன்றுநஞ் செம்படைக் கிலையே. (11)

பொய்கையார்:—(வெகுண்டு)
வெங்கண் யானைச் செங்கட் சோழ!
என்னைகொ னீயு மின்னண முரைத்தனை?
அறப்போ ரிலையெனன் மறப்போ வன்றிப்
புன்பொரல் புரியும் வன்புடைக் கருத்தோ?
புந்தியி னின்னை விந்தை வீரனு
மதித்துறு சேரமான் வாளா திருந்தனன்;
மதித்திற முடைமையோ வஞ்சகத் தொழிலோ
யாதுகொ னின்படை யெம்மிறை கொண்டது?
பேதுறீஇப் பிறழ்ந்து பிதற்றலை, அரசே!

பிரபு முதல்வன்:—(வெகுண்டு)
போலிப் புலவீர்! போதுநும் பேச்சு

பிரபு இரண்டாவன்:—(எழுந்து)
காலைக் குறைத்திவர்க் கடுஞ்சிறை யிடுமினோ. (12)

செங்கணன்:—(அமைந்து)
என்னிடத் தன்பு மன்னிய மதிவலீர்!

---

9. உணரான்-முற்றெச்சம். 10. துணைக்காவல் - உற்ற விடத்துதவும் துணைவராகிய மெய்காப்பாளர். 11. விற்பொரல் வீரர்-வில்லைக்கொண்டு பொருதலைச் செய்யும் வீரர். 12. ஓய் - விரைவுக் குறிப்பு. 14. இரிய - ஓட, கெட. 16. செம்படை - செவ்விதாகிய படை. 17. வெங்கண்யானை போன்ற சோழ, என்க. யானைப்படையை யுடைய எனினுமாம்.

20. புன்பொரல் - இழிந்தபோர். வன்பு - வலிமை. 21. விந்தை - வீரலக்குமி 23 மதித்திறம் - அறிவினுற்றல். 24. எம்மிறை - எமது மன்னனாகிய கணைக்கா லிரும்பொறை. 25. பேதுறீஇ - அறிவின்மை யுற்று. பிறழ்ந்து - முறைமைதவறி 27. குறைத்து - வெட்டி. இவர்க் கடுஞ்சிறை இடுமின் - இவரைக் கடுங்காவலில் இடுங்கள். கடுஞ்சிறை - Rigorous Imprisonment.

கொன்னே யொன்றுங் குறைபடக் கூறலிர்;
என்னே யவர் தெண்ணமென் றறிவோம்.
இப்புல வோரையெம் மெய்க்குரு வாகக்
கோடல் குறித்தியா நாடி யடைந்துழி
அன்னர் நம்மை யுன்னா தறிவுநூற்
குரியரல் லேமென வுரைத்தன ராயினுங்
குருவென வொருமுறை கருதின மாதலின்
அவரைநாம் வழிபட றவறாக் கடனே. (13)

இதுநிற்க. இந்த மதிமிக்க புலவர்
அமைய நோக்கா தெமையிகழ் தந்தது
பொருத்தமில் செயலே.

பிரபு முதல்வன்:— கருத்தினி லவர்தாம்
என்ன நினைத்திவ ணின்னன பிதற்றினர்?

பொய்கையார்:—(அமைந்து)
நல்லியல் புடையீர்! நல்லியல் புடையீர்!!
இகழ்ச்சியு மொன்றே புகழ்ச்சியு மொன்றே
இன்பதுன் பங்க ளெல்லா மொன்றே;
இன்பதுன் பங்க ளெனக்கில கண்டீர்.
என்ற னுள்ள மொன்றினுந் திரியா
ததனாற் புகழ்நரை யன்பின் வியத்தலும்
மதனா லிகழ்நரை மருண்டு தெழித்தலும்
இலமே.

பிரபு இரண்டாவன்:— மூவகை மலமு முனிந்த
போறி வுடையார் பேசலி ரொன்றுமே. (14)
(கைகட்டி வாய்புதைத்துக் கொள்ளுகின்றான்.)

சேங்கணன்:—(கையமைத்து)
முனிவரை யிகழி னனிவருந் தீங்கே;
ஆதலி னமைகவெ மன்புடை யீர்காள்!

---

29. கொன்னே - வீணாக. குறைபட-குற்றம் பொருந்த. 30. அவரது எண்ணம் என்னே என்றறிவோம், என்க. 32. கோடல் குறித்து - கொள்ளுதலைக் கருதி.

33. உன்னாது - மதியாது. அறிவுநூல் - ஞான சாஸ்திரம். 45. திரியாது - மாறுபடாது. 46. புகழ்நர் - கொண்டாடுபவர். 47. இகழ்நர் - அவமதிப்பவர்.

cf. "மாட்சியிற் பெரியோரை வியத்தலு மிலமே
சிறியோரை யிகழ்த லதனினு மிலமே" (புறம். 192)

தெழித்தல் - அவமதித்தல்.

48. மூவகை மலம் - ஆணவம், மாயை, கன்மம்.

போதமெய்ஞ் ஞானப் புலவீர்! ஒருமொழி :
முன்னைநா ளும்மடி முடிமிசைக் கொண்டெமக்
கின்னறி வூட்டுமா றிரந்து மிகழ்ந்தனிர் ;
உலகநூல் பயின்றோ ரலகுசால் கற்பின்
அறிவுநூற் புலமைக் கருக னல்லனென்
றறையுபு நின்றனிர் ; அஃதிவ ணேற்புடைத்
தன்றாம், யாவையு நன்றா யுணர்ந்து
பொய்கை யாடாப் பொய்கை யாரே !
இந்நா ணந்த மிரும்பே ராற்றல்
மெய்ந்நா வல்லீர் மேதகக் கண்டி
ரன்றே? நீவிரஃ தன்றியு நமது
கையகப் பட்டீர் ; மெய்யாப் புற்றீர் ;
உய்யுமா றில்லீர் ; ஓங்கு சிறைக்களத்
துற்றீர் ; நும்மை யெற்றே யாயினும்
வேட்ட படியெலா மாட்டவும் வல்லேம்.
நுந்த நிலைமையைச் சிந்தை செய்ம்மினோ. (15)

பொய்கையார்:—(வெகுண்டு)

அருந்தமிழ் நாட்டிற் பொருந்திய வண்ணலே!
திருந்திய மதியிலாய்! வருந்திய சிந்தையாய் !
அறியலை பலப்பல வறைந்தனை ; வாளா
மறியலை ; எனது வாய்மொழி யதனை
உய்த்துணர் பெற்றியு முற்றனை யல்லை ;
பொய்த்திரு வேதோ பொருந்திற் றெனுமகிழ்ந்
தந்தோ செருக்கினில் வந்தோ வீழ்ந்தனை !
என்னைச் சிறைக்களத் திருத்துத னீகொலோ ?

52. போதம் - அறிவு. 53. முன்னைநாள் - முற்காலத்தில். அடி முடிமிசைக் கொண்டு - வணங்கி. 54. இன்னறிவு-உயிருக்கு இன்பந்தரும் பேரறிவு. 55. அலகு சால் கற்பின்-விசாலம் அமைந்த படிப்பினையுடைய; அளவுமிக்க வித்தைகளுள்ளே, என்றுமாம்.

cf. "அலகுசால் கற்பி னறிவுநூல் கல்லாது" (நாலடி. 140.)

57. அறையுபு-அறைந்து; சொல்லி. இவண்-இங்கு; எம்மிடம். ஏற்புடைத்து - பொருத்தமாவது 59. பொய் கையாடா - பொய்ம்மையிற் பழகாத சொற் பின்வரு நிலை யணி. 61. மேதக - மேம்பாடுற. 63. மெய் யாப்பு உற்றீர் - விலங்கிடப்பட்டீர். 64. உய்யுமாறு - தப்பும்வழி.

65. எற்றேயாயினும் - எப்படியானாலும். 66. வேட்டபடி - விரும்பிய விதம். 70. வாளா மறியலை - வீணாகக் கவிழ்ந்து போகலை. 71. வாய்மொழி - மெய்ம்மை மொழி. 72. உய்த்துணர் பெற்றி - நுனித்தறியுந் தன்மை. 73. பொய்த்திரு - பொய்யான அதாவது நிலையற்ற செல்வம். எனு - என்று. 74.] செருக்கு - அகங் காரம். வந்து ஓ வீழ்ந்தனை - ஓ, இரக்கக் குறிப்பு.

உன்னைநீ யறியா யுரைத்தனை பேதாய்!
யாரோய் நீயே? யாரேன் யானே?
நிற்கு மெற்கு நேர்ந்த தொடர்பெனை?
சொற்குறி யறியாத் தோன்றலை! கேண்மோ:
யானுன் சிறையலேன்; எனைச்சிறைப் படுத்தநீ
தானும் வலையலை; தகாதன பிதற்றேல்:
யானே யென்னை யிச்சிறைப் படுத்தேன்;
ஏனோ ரொன்று மெனைச்செய் தாரலர்
செய்யவும் வலரலர் மெய்யிது வாமே. (16)

பிரபு முதல்வன்:—(முகங்கறுத்து)
பித்தமீ தூரச் சித்தந் திரிந்து
புத்தி மயங்கிப் புரைமொழி பேசனும்
வித்தைச் செருக்கோ? வேந்தனை யிழித்துரை
யாடுத லெவரை யடுத்துக் கற்றீர்?

செங்கணான்:—(கையமைத்து)
நாடிப் பேசுதிர் நாவலர் தம்மை
யெள்ளி னந்தோ வேதம் படுமால்;
உள்ளலி ரொன்று முரைக்கலிர்; பெரியோர்ப்
பிழைக்கலிர்; தீமை யிழைக்கலிர்; அமைமினோ. (17)

(பொய்கையாரை நோக்கி)

நல்லிசைப் புலமை நாட்டிய பெரும!
தொல்லைநூற் கடலிற் றுளைந்த களிறே!
பாவல ரேறே! பண்புறக் கூறுமின்:
ஓவலில் சிறைக்களத் தும்மையா மிட்டதும்
பொய்கொலோ? அம்ம! 'பொய்கை யார்' என
நும்பெய ரிட்டவர் நுண்ணறி வாளரே! (18)

(நகைக்கின்றான்.)

---

78. நிற்கும் எற்கும் - நினக்கும் எனக்கும். தொடர்பு-சம்பந்தம். எனை - என்னை, யாது. 79. சொற்குறி - சொல்லின் கருத்து. தோன்றலை - ஐ, முன்னிலை புணர்த்தி நின்றது. 81. வலையலை - வல்லையல்லை.

83. ஏனோர் - பிறர். 85. மீதூர - மிக. 86. புரை - குற்றம். 87. வித்தைச் செருக்கு - வித்யா கர்வம். உரையாடுதல் - பேசல். 89. நாடி - ஆராய்ந்து. 90. எள்ளின் - இகழின். ஏதம்படும் - குற்றமுண்டாகும். 91. உள்ளலிர் - யோசியாமல். முற்றெச்சம். 92. பிழைக்கல் - அபசாரப் படல். அமைமின் - அடங்குங்கள். 94. தொல்லைநூல் - பழைய சங்கநூல்; வேதமுமாம். உருவகவணி. 96. ஓவல்இல் - நீங்குதல் இல்லாத. 97. 'பொய்கையார்'- பொய்யினை வெறுத்தவர்.

போய்கையார்:—(வெறுப்புடன்)

என்னே நின்மதி! என்னே நின்மதி!!
நீயோ வரசனை நீதி வள்ளலை?
ஏயே பேதாய்! ஏயே தீயாய்!
புல்லறி வாண்மையே பொருளெனக் கொண்டு
நல்லியல் புணரு நயமிலா யெனினும்
நின்னைத் தெருட்டுத லென்னுறு கடனால்.
உற்றுக் காண்டிநீ பற்றிய தெனுதி
யாக்கையே யன்றிப் பார்க்கு மிடத்து
வேறொன் றிலையே; நாறுமிவ் வுடலம்
என்ன தன்று; மற் றிடையே போந்ததோர்
துச்சிலே யன்றி யிச்சைகொண் டென்றும்
மெச்சிடற் பாற்றே? விளம்பாய் வேந்தே!
இதனைக் கைக்கொண் டெனைச்சிறைக் கொண்டதாக்
கதனெழ வுரைப்பினுங் கட்டுரை யாமோ?
என்னுட னுறையு மின்னுயி ராகிய
என்னைச் சிறையி னிட்டனை கொல்லோ?
என்சிறைக் கோட்ட மென்னுட லாமால்.
என்னிலை யின்னும் பன்னுவல் கேண்மோ:
பரந்த பண்பினேன்; விரிந்த நிலையினேன்;
இயற்கை நன்மையேன்; இயற்கை யொளியினேன்;
அழிவெனக் கில்லை; இழிவெனக் கில்லை;
அறிவு மின்பமு மார்ந்த பெற்றியேன்;
செறிவு சான்ற செம்பொரு ளாவேன்.
இன்னண மிருந்த மெய்ந்நிலை தவறித்
தலையி னிழிந்த தனிமயி ரியைய

---

100. அரசனை, வள்ளலை - ஐ, முன்னிலை குறித்து நின்றது. 102 புல்லறி வாண்மை - புல்லிய அறிவினை யுடையனாதல். 103. நல்லியல்பு - நற்குணம் 104. தெருட்டுதல் - தெளிவித்தல். உறுகடன் - மிக்க கடமை. 105. பற்றியது - சிறைப்படுத்தியது. 108. துச்சில் - குடிசை; ஒதுக்கிடமுமாம். 110. மெச்சிடல் - புகழ்தல். 112. கதன்-கதம், கோபம். எழுத்துப்போலி. கட்டுரை - பொருள் பொதிந்த வாசகம். 115. சிறைக்கோட்டம்-சிறைச்சாலை. 116. பன்னுவல் - கூறுவேன்.

118. ஒளி - பிரகாசம்; அறிவுமாம். 120. ஆர்ந்த - நிறைந்த. பெற்றி-தன்மை. 121. செறிவு-திட்பம். செம்பொருள் - உண்மைப் பொருள். 122. மெய்ந்நிலை உண்மை நிலை.

123. cf. "தலையி னிழிந்த மயிரனையர் மாந்தர்
நிலையி னிழிந்தக் கடை" (திருக்குறள். 664.)

என்பழ வினையா னின்பந் தவிர்ந்து
சுரிந்து சாம்பிச் சுருங்கி யங்கோ
ஆணவ மலத்தி னகப்பட் டணுவாய்ப்
பேணியிவ் யாக்கையிற் பெட்புட னிருந்து
வினைப்பய னுகர்ந்து தனிப்பட வினிதிற்
காலங் கழித்து மேலங் குறுவேன்.
அம்மவோ! அரசே! இம்மையி னென்னிலை
இதுகாண். ஈண்டிஃ திங்ஙன மிருக்க.
மதியறை போகி மாண்பறு சோழ!
இத்துணை தானு முய்த்துண ருரனிலாய்!
என்பா லறிவுறா லன்பாற் பயிலுதல்
எவ்வகை யியலும்? செவ்வி பெறச்சொலாய்.
பெரிதும் பொல்லாய் பேதைநீ
விரிதரு மனத்தின் வேறு நினைத்தியோ? (19)

சேங்கணன்:—(சிறிது புன்முறுவல் பூத்து)
செந்நாப் புலவீர்! செந்நாப் புலவீர்!!
மிகுத்துக் கூறலிர் பகுத்துணர் வின்றி;
அவ்வயி னமைதிர்; கவ்வை விளைக்கலிர்;
பொருள்விளங் கல்லா மருண்மொழிப் பேச்சு
மேன்மேற் பேசினீர்; ஆன்ம போதம்
போதும் போதும்; ஓதலி ரினிமேல்.

(சேவகரை நோக்கி)

யாரீ ரேவலர்! வாரீ ரிங்ஙனம்:

(சேவகர் வருகின்றனர்.)

இவரை மீட்டு மிடுமின் சிறைக்களம்;
தவறினி ராயிற் றலையிழந் திட்டீர்.

சேவகர் தலைவன்:—(முற்போந்து)
உங்க ளாணையை யெங்குஞ் செலுத்துவோம்;
சாமி சித்தமே தாமெஞ் சட்டம்.

---

124. பழவினை - ஸஞ்சிதாதி கருமங்கள். 125. சுரிந்து - முறுக்குண்டு. சாம்பி - வாடி. 127. பேணி - விரும்பி. பெட்பு - மகிழ்ச்சி. 129. அங்கு - முடிவாய அவ்விடம். 116-ம் அடிமுதல் 129-ம் அடிவரை, ஆன்மாவி னிலக்கணஞ் சுருக்கமாய் விளக்கப்பெற்ற நயம் இன்புறற் பாலது. 132. மதியறைபோகி - அறிவற்று. மாண்பறு - மாட்சிமை நீங்கிய. 133. இத்துணை - இவ்வளவு. உய்த்துணர்உரன் - அறிவினைச் செலுத்தி உணரும் வலிமை. 135. இயலும்-கூடும். 137. விரிதரும்-பரந்துபட்ட. 139. மிகுத்து - வரம்பு கடந்து. 140. கவ்வை - துன்பம்; பழிச்சொல்லுமாம். 141. மருள் - மயக்கம். 142. ஆன்மபோதம் - ஆத்தும ஞானம். 143. ஓதலிர் - கூறற்க. 148. சட்டம் - கட்டளை, விதி.

(சேவகர்கள் பொய்கையாரைப் பற்றுகின்றனர்.)

பொய்கையார்:—(அந்நிலையில்)

யாவு நல்ல! யாவு நல்ல! !
கோவு நல்லன் ; குடிகளு நல்லர்.
மன்னவ வாழ்தி மன்னி யுலகினே. (20)

[சேவகரும் பொய்கையாரும் போகின்றனர்.]

செங்கணன்:—(பிரபுக்களை நோக்கி)

என்னுழை யீர்காள்! என்னைகொ னீவிர்
என்னுள மறியீ ரின்னணம் பிதற்றினிர்?
புலவரை யாய்வேன் பலவகை மொழிகளைப்
பேசுவே னுயினேன் பெற்றி யுணரீர்
ஏசுவீ ராயினீர்; ஈதிவ ணிருக்க.
சற்றே யாயினு முற்றுக் கேட்டிரோ
தெருள்வழி காட்டிய செந்நாப் புலவர்தம்
பொருள்பொதி கட்டுரை? புரிந்து கூறுமின்.
என்னே யவருளம்! என்னே யவர்மொழி!
என்னே யவர்செயல்! என்னே யவர்நிலை!
அன்னார் நுட்பமு மொன்னார்க் கஞ்சாத்
திட்பமு மறிவி னொட்பமு மென்கொலோ!
என்னே பேதையே னென்னே யவரைத்
தெழித்தே னந்தோ பழித்தே னிழித்தேன்!
போதங் கனிந்த பொய்கை யாரே!
ஏதமெண் ணுறு மின்ப வுளத்தினை
என்னென் றுரைக்கேன்! என்னென் றுரைக்கேன்!!
இன்னுங் காண்பனு மின்ப வுள்ளமே. (21)

—(மௌனம்)

(சேவகர் தலைவனை நோக்கி)

---

150. 'கோவுநல்லன்; குடிகளுநல்லர்'' எதிர்மறைக் குறிப்பு. (irony.) 151. மிகைபடக் கூறிய மன்னன் கேடுறுவனுதலின், அவனை வாழ்தியென இரங்கி வாழ்த்தினர். மன்னி - நிலைபெற்று. 152. உழையர் - அருகிருப்போர். 153. அறியீர் - அறியீராய். முற்றெச்சம். 154. ஆய்வேன் - ஆய. முற்றெச்சம் 155. பெற்றி - தன்மை. 158. தெருள்வழி-ஞான மார்க்கம். 159. பொருள்பொதி கட்டுரை - உண்மைப் பொருள் நிறைந்த உறுதிமொழி. புரிந்து விரும்பி. 162. நுட்பம் - நுண்ணிய அறிவு. 163. திட்பம் - மனவலிமை. ஒட்பம் - பிரகாசம் 165. தெழித்தேன் - இகழ்ந்தேன். 166. போதம் - அறிவு. 167. ஏதம்-குற்றம் பிறர் குற்றங்காணுதநும் இன்பம் நிறைந்த மனம். 169. காண்பன் - காண்பேன்.

ஏவ லாளநீ யிருஞ்சிறைக் கோட்டம்
மேவி யாங்குறை காவ லாளர்க்
கிதென் னாணை போதுதி கொண்டு :
' சற்றுமுன் சென்ற நற்றமிழ்ப் பாவலர்க்
கொன்று முதவலிர் ; கன்று முளத்தொடு
சீறி விழுமின் ; செவ்விய வுரையுங்
கூறலிர் ; உணவுங் கொடுக்கலிர் ;
படுக்கையு நல்கலிர் ; மிடுக்குற நடிமினே! ' (22)

சேவகர் தலைவன்:—(வணங்கி)

இந்த வாணையை யென்சிர மேற்றேன் ;
வந்தன னீதோ மன்னர் மன்னவ !

[சேவகர்தலைவன் போகின்றான்.]

பிரபு முதல்வன்:—(வணங்கி)

எம்பிழை பொறுத்தி யெம்மிறை யவனே !
வம்புரை யாக வழங்கின மன்றே. (23)

பிரபு இரண்டாவன்:—(வணங்கி)

உன்கருத் துணரா துரைத்த மொழிகளை
நன்குதீங் கறியா நலமி லுரையென
விடுத்து நின்றெமை யடுத்துக் காத்தி.

செங்கணான்:—(மனமொத்து)

பொறுத்தன முமையிர்காள்! பொறுத்தனம் போமின் ;
வெறுத்துரை யொன்றும் விளம்பலி ரினிமேல்.

[பிரபுக்கள் போகின்றனர்.

(தனக்குள்)

இற்றைஞான் றிரவினில் யாமே சென்று
தெற்றெனப் புலவர் செயல்களை யாய்துமே. (24)

(தனக்குட் பாடுகின்றான்.)

---

170. இருஞ்சிறைக் கோட்டம் - பெரிய சிறைச்சாலை. 173. என் ஆணை கொண்டு போதுதி என மாற்றுக. 174. உதவலிர் கொடாதேயுங்கள். கன்றும்- சினம்மிக்க. 175. செவ்விய உரை - இன்மொழி - 177. மிடுக்கு - பெருமிதம், இறுமாப்பு. 181. வம்புரை - வீண்பேச்சு. அன்று, ஏ - அசை. 183. நலம் இல் உரை - நன்மையற்ற சொல். 186. வெறுத்துரை - அருவருப்புச் சொற்கள். 187 ஞான்று - தினம். 188. தெற்றென - தெளிவாக. ஆய்தும் - ஆராய்வோம்.

போத மேயொரு வடிவெனப் பொருந்திநின் றவரே
யேதம் வந்துழி யுஞ்சிறி தேனுமுள் ளிடையீர்
சீத மாமதி நிகர்முகச் செவ்விசேர் புலவீர்
தீது செய்கிலே னினிநுந் தஞ் சேவடி சேர்கோ ? (25)

[போகின்றான்.]

முதற்களம் முற்றிற்று.

---

[ஆகச் செய்யுள் 25-க்கு : வரி 232.]

---

## இரண்டாங்களம்.

இடம் : சிறைச்சாலை.

காலம் : யாமம்.

பாத்திரம் : சேரமான்.

சேரமான்:—(தனக்குள்)

என்னே யுலகம் ! என்னே வாழ்க்கை !
என்னே யரசியல் ! என்னே மன்பதை !
தீமையே நன்மையாத் திரிந்து நின்றவிந்
நாமநீ ருலகின் ஞாயமு முண்டோ ?
வல்லடி வழக்கே நல்லடி வழக்கென
நாடி நடக்குநர் பேடிய ரலரோ ?
நீதியு மறமு மோதியு முணராப்
பேதை மாக்கள் பெருகிய துலகம் !
பேரற மென்பது போரி னிலையோ ?
போரெனில் வஞ்சமும் பொய்யுந் தாமோ ?
அரும்புவி யினைவிடுத் தறப்பெருங் கடவுளே
பிரிந்துசென் றனையோ பேதுற் றனையோ ?

---

(செய் - 25.) போதம் - அறிவு. ஏதம் - இடையூறு. வந்துழி - உண்டாய விடத்து. உள்ளிடைதல் - உள்ளம் பின்வாங்குதல், மனந்தளர்தல். செவ்வி - அழகு சேர்கோ - சேர்வேனோ. கு - தன்மையொருமை விகுதி எதிர்காலங் காட்டிற்று.

2. அரசுஇயல் - அரசாட்சியின் தன்மை. மன்பதை - சனங்கள்; உயிர்ப் பன்மை. cf. "மன்பதை காக்குநின் புரைமை" (புறம் - 210.)

3. திரிந்துநின்ற - மாறுபட்டுப் பொருந்திய. 4. நாமநீர் - அச்சத்தைச் செய்யுங்கடல். 5. வல்லடி வழக்கு - பொய்வழக்கு. 11. புவி - நிலவுலகம். அறப் பெருங் கடவுள் - மஹா தருமதேவதை. 12. பேது - பேதைமை, அறிவின்மை

தீமை யொறுத்துச் செம்மை போற்றுங்
கோமக னென்னக் குலவு மறத்தே
வென்றோர் கூற்று மன்றோ பிறழ்ந்தது?
வீர மென்ப தாருஞ் சூதோ?
தீர மென்பது செம்மைப் பிறழ்வோ? (26)

(மௌனம்)

பாசறை யதனிற் படுத்துறங் கியவெனை
மோசப் படைஞர்கண் மூவா யிரவர்
நீசத் தொழிலினை நினைத்த வுளத்தினர்
வலிகொடு பற்றி நலிதந் தந்தோ
பொங்கிய வெகுளிச் செங்கணன் முன்னர்
உய்த்து நின்றனர். ஓகோ! இஃதென்?
கால்யாப் பிட்டனர் கயவர்கள், ஐயோ!
மேல்யாப் பென்னையிம் மேதினி யின்கண்?
யானெனை? வேங்கைகொ லெறுழ்வலி யரிகொலோ
ஈன விளிவுடை யிச்சிறை யெய்த?
ஐயகோ! தீயே னவற்றினுங் கொடியேன்
செய்யகோ லறியாச் சிறியே னென்றெணிப்
போது மென்னையிப் புழையில்சிறை யிட்டு
மேலா தென்றென விருதாள் கட்டும்
விலங்கு மிட்டனர் மலங்கிய புந்தியர்!
ஓடிக் கரப்பெனென் றுன்னி னர்கொலோ
நேடிமெய் யுணரா நீதியில் காவலர்?
'இவ்வயி னிற்றி; எவ்விடை யுஞ்செலேல்'
என்றவ ராணை யிடிற்போ தாதோ?

---

13. ஒறுத்து - கண்டித்து. 14. குலவும் அறம் - பொருந்திய நீதி.

15. கூற்று - பகுதி. பிறழ்ந்தது - மாறியது. 16. ஆரும் - மிக்க. 17. செம்மை - நீதி. பிறழ்வு - மாறுபாடு. 18. பாசறை - படைவீடு. 20. நீசத்தொழில் - இழிந்தசெயல். 21. நலிதந்து - துன்பமியற்றி. 23. உய்த்து - செலுத்தி. 24. கால்யாப்பு - கால் விலங்கு. கயவர் - கீழ்மக்கள். 25. யாப்பு - கட்டுப்பாடு, உறுதி. மேதினி - பூமி. 26. எறுழ்வலி - மிக்கவலி. அரி - சிங்கம். 27. ஈனம் - குறைவு. இளிவு - இகழ்ச்சி. எய்த - அடைய. 28. அவற்றினும் - அக் கொடு விலங்குகளைக் காட்டிலும். 29. செய்யகோல் - செங்கோன் முறைமை. 30. புழை - துவாரம், ஈண்டுச் சிற்றறை. 31. ஏலாது - போதாது. என இருதாள் - என்னுடைய இரண்டு கால்கள்.

32. மலங்கிய - மயங்கிய. 33. கரப்பென் - ஒளிவேன். உன்னுதல் - நினைத்தல். 34. நேடி - ஆராய்ந்து. மெய்யுணரா நீதி இல் காவலர் - உண்மை அறியாத நியாயமார்க்கஞ் செல்லாத அரசர். 35. இவ்வயின் நிற்றி - இவ்விடம் நிற்பாய். எவ்விடையும் - எந்த இடமும். செலேல் - செல்லாதி. 36. ஆணை - கட்டளை.

கன்றின ராணை கடப்பெனோ! வாழ்வு
பெரிதென வெண்ணிப் பேணி யொளிப்பெனோ?
விரிகட லுலகில்யான் வேண்டுவ தொன்றிலை.
உலகி லறமின் றொழிந்ததே யென்னுமக்
நலிகருத் தென்ற னல்லுள மறுப்பதே. (27)

(மௌனம்)

எல்லா முணர்ந்த நல்லோ னாகிய
கடவுளென் பான்மறக் கருணைகாட் டினன்கொல்?
மடமையாற் றீயேன் வாளா திதுவரை
யென்னுடை யாசான் றன்னரு மொழிகளை
மறந்து காலம் வறிதே
திறந்தபு நெறியிற் செலவழித் தேனே. (28)

(தனக்குட் பாடுகின்றான்.)

ஒளியானை யன்பரிடத் தொளியா தானை
யுயர்நிலநீர் தீவளிவா னாயி னானை
யளியானை யலர்க்குநல்வீ டளியா தானை
யறிவானைத் தீமைநெறி யறியா தானை
வெளியானை விளங்குமெழில் வடிவி னானை
மிளிரடியா ருளக்கோயி லுறைகின் றானைக்
களியானை யருண்மழைபெய் காரி னானைக்
கருதுவோ ரின்பவுளங் காண்பர் தாமே. (29)
இனியானை நினைதோறு மினிக்கிற் பானை
யிசையானை நன்மையொடு மிசைந்தான் றன்னைத்
தனியானை யெவற்றினின்றுந் தனிக்கிற் பானைத்
தணியானை யுமையூடத் தணிந்தான் றன்னைப்

---

37. கன்றினர் - சினந்தோர். வாழ்வு - இவ்வுலக வாழ்க்கை. 39. பேணி-உயிர் வாழ்தலை விரும்பி. 41. நலிகருத்து - துயரந்தரு மெண்ணம். நல்லுளம் அறுப்பது - நன்மை பொருந்திய மனத்தைக் கிழிப்பது. 43. மறக்கருணை - சீறியகருணை; துன்புறுத்திச் செம்மையாக்கும் அருள். 44. மடமை - அறிவின்மை. 46. வறிது - பயனின்றி. 47. திறந்தபு நெறி - உறுதியற்ற தீநெறி.

(செய் - 29.) ஒளியான் - தேஜோமயமானவன். ஒளியாதான் - மறையாதவன். நிலம் நீர் தீ வளி வான் - பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்னும் ஐம்பூதம். அளியான் - கருணை யுருவினன். அலர் - நல்லரல்லார், தீயோர். வீடு அளியாதான் - முத்தி கொடாதவன். அறிவான் - ஞானமயமானவன். அறியாதான் - தெரியாதவன். வெளியான் - ஞானாகாச வுருவினன். மிளிர் - அறிவு விளக்கால் விளங்கும். உளக்கோயில் - மனமாகிய ஆலயம். களியான் - ஆநந்த மயமானவன். அருள் மழை பெய் கார் - கருணை மழை பொழியும் மேகம். கருதுவோர் - தியானிப்பவர்.

(செய் . 30.) இனியான் - நல்லவன், இன்பஞ் செய்பவன், சங்கரன். நினையாத போழ்து இனியாதான் என்றலுமாம். நினைதோறும் இனிக்கிற்பான் - அன்பால்

பனியானைத் தீமைகண்டு பனிக்கிற் பானைப்
பணியானை யன்பர்சொற்குப் பணிந்தான் றன்னைக்
54. குனியானை யம்பலத்திற் குனிக்கிற் பானைக்
குறிக்கொண்டா ரின்பவுளங் கூடு வாரே. (30)

[போகின்றான்.]

இரண்டாங்களம் முற்றிற்று.

---

[ஆகச் செய்யுள் 30-க்கு: வரி - 287.]

---

## மூன்றாங் களம்.

இடம்: சிறைச்சாலை.

காலம்: யாமம்.

பாத்திரங்கள்: பொய்கையார், செங்கணன், சிறைகாவலர்.

(பொய்கையார் உலவுகின்றனர்; செங்கணன் ஓரிடத்து மறைந்திருக்கின்றனன்.)

சிறைகாவலன் முதல்வன் :—(பொய்கையாரைச் சுட்டி)

அண்ணே! இதோபார், அருந்தமிழ்ப் புலவன்
மண்ணோ விண்ணோ மதியா னொன்றும்.
பழித்து மிழித்தும் பார்த்தோம் நாமும்;
விழித்தும் பார்த்திலன், அழுத்த முடையான்.
இன்னு மவன்குண மென்னெனச் சொல்வேன்?

---

நினைப்பவர் உள்ளத்திற் நித்திப்பவன்.

cf. "வென்றுளே புலன்க ளைந்தார் மெய்யுண ருள்ளந் தோறுஞ்
சென்றுளே யமுத மூற்றும் திருவருள் போற்றி" (திருவிளையாடல்.)

இசையான் - கான ரூபியானவன்; மெய்ப்புகழானன்; தீமையொடு பொருந்தான். இசைந்தான் - பொருந்தியவன். தனியான் - ஒப்பற்றவன்; ஏகன்; சர்வாந்தரியாமியுமாம். தனிக்கிற்பான் - வேறாய் நிற்பவன்; புறனேயிருப்பவன். தணியான் - அடக்கமுடியாதோன். உமை ஊட - உமாதேவி ஊடிய காலத்தில். தணிந்தான் - பணிந்தவன். பனியான் - நடுக்கமற்றவன், அசலன்; குளிர்ச்சி வாய்ந்தவன். பனிக்கிற்பான் - நடுக்கஞ் செய்பவன். பணியான் - சர்ப்பங்களை அணிந்தவன்; பிறரைப் பணியாதவன். பணிந்தான் - வணங்கினவன். அன்பர்சொற்குப் பணிந்தான் - அடியார்க்கெளியன். குனியான் - பிறரை வணங்காதவன். அம்பலம் - சபை. குனிக்கிற்பான் - நடனஞ் செய்பவன். குறிக்கொண்டார் - தியானிப்பவர். சொன்னயம் பொருணயஞ் செறிந்த இவ்விரு திருத்தாண்டகங்களினும் மூரணணி திகழுஞ் செவ்வி யோர்ந் தின்புறற்பாலது.

2. மண்........ஒன்றும் - மண்ணுலகாயினும் விண்ணுலகாயினும் ஒன்றையும் பொருட்படுத்தான். 4. அழுத்தம்-நெஞ்சுறுதி.

வெறித்து நின்று மேலே பார்ப்பன் ;
குறித்தறி வான்போற் கோணி நிற்பன் ;
கீழே குனிவன், 'ஊழ்' என்பன் ;
தானே பேசுவன் ; தானே சிரிப்பன் ;
தானே குதிப்பன் ; தானே யோடுவன் ;
வாய்குவித் தூதுவன் ; கால்குவித் தயர்வன் ;
கைகொட்டி யார்ப்பன் ; மெய்தட்டி நிற்பன் ;
போவன் ; வருவன் ; நாவை நீட்டுவன் ;
கண்ணை மூடுவன் ; காதைக் கையாற்
பொத்துவன் ; தெற்றுவன் ; சித்தங் களிப்பன் ;
தாளம் போடுவன் ; நீளங் குறைவன் ;
இருப்பன் ; எழுவன் ; விருப்புட னோக்கி
நடப்பன் ; பாட்டுப் படிப்பன் நன்றே! (31)

சிறைகாவல னிரண்டாவன் :—(இகழ்ந்து)

பைத்தியக் காரனும் பாட்டுப் படிப்பான்.
வைத்தியஞ் செயினவன் வழிக்கு வருவான்.
பித்தனும் புலவனும் மெத்தவு மொப்பர்;
இருவருந் தனியே யிருந்து பேசுவர் ;
இருவருஞ் சிரிப்பர் ; இருவரு மழுவர்.
மிகப்படிப் புள்ளவன் சுகப்படா னிங்கே ;
துக்கப் படுவன், திக்கற் றவன்போல்.
கற்றவ ரெல்லாங் கவனியா ருடம்பை ;
இற்ற சுவரி லெப்படிச் சித்திர
மெழுத லாகும்? பழுதே யெழுதினல்.
றனிமர மேறி நோக்கி நிற்பவன்
இனிய காட்சியி லெல்லாம் மறந்து
தன்னுடை நிலைமை தானுமெண் ணாது
கூத்தாடி னுலவன், ஆத்தாடி! செத்தான்.
இவனைப் பித்த னென்பதிற் றடையேன்?
நேற்று முதலா, நீயும் பார்த்தையே ;
நீருஞ் சோறு நினையான் ; பொல்லா

---

7. கோணி - தலைவளைத்து. 8. ஊழ் - விதி. 15. தெற்றுதல் - கால் மாறி வைத்து நிற்றல். 16. நீளம் - உயரம். நீளம்குறைவன் - குன்றுவன். 31-ம் கவியிற் குறித்துள்ள பொய்கையார்தம் மெய்ப்பாடு உய்த் துணரற்பாலது. 24. மிகப் படிப்புள்ளவன் - மெத்தப்படித்தவன். 25. திக்கற்றவன் - ஆதரவில்லாதோன். 27. இற்றசுவர் - இடிந்த சுவர். 30. இனிய காட்சி - கண்ணுக்கினிய காட்சி. 32. ஆத்தாடி - வியப்புக் குறிப்பு.

வீண னிவன்றான் ; விடடா ;
ஊனுண் டுறங்குவோம் ஓடிவா வுடனே. (32)

போய்கையார் :—(சிறிது நின்று தமக்குள்)
உலகே போர்க்களம்; உற்ற மாந்தரே
பலதிறப் பட்டும் பாழ்ம்போர் செய்குநர் ;
வாழ்க்கையோ போர்த்தொழில் ; பாழ்க்கையோ மக்கள்
ஒருவரை யொருவர் வெருவுறத் தாக்கி
இருவரு மொழிவர் என்னைகொ லவர்மதி !
(உலவுகின்றனர்.)

(திரும்பித் தமக்குள்)
தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்
மனக்கனி வோடும் வாய்மலர்ந் தருளிய
அருளற மறிந்தார் மருளறு காட்சியர் ;
அறியாப் பேதைக ளறித லென்றுகொல் ?
பேதைய ராயினு மோதித் தெருளுதல்
கடனே யன்றோ ? மடனோய் தீர்ந்தார்
அன்னார்த் தெருட்டலு மறனே யன்றோ ?
இன்னார் மாட்டு மின்னருள் புரிந்து
நன்னயஞ் செயலே நல்லோ ரியற்கை ;
ஆதலி னிவ்வூ ரரசனைத் தெருட்டுதல்
தீதி லாததோர் செய்கட னாமால்.
(உலவுகின்றனர்.)

---

39. திறம் - வகை. 40. வாழ்க்கை - உலக வாழ்க்கை. பாழ்க்கு ஐயோ எனப் பிரிக்க. 41. வெருவுற - அஞ்ச. 43. தனக்கென வாழாப்பிறர்க் குரியாளன் - தான் சீவித்திருத்தல் தனக்கென்று கருதாமல் பிறர்க்கே உரிமைபூண் டொழுகு பவன்.

cf. " தனக்கென் றொன்றானு முள்ளான் பிறர்க்கே
யுறுதிக் குழந்தான் " (குண்டலகேசி.)

45. அருளறம் - அருளாகிய அறம் ; காருணியம் ; தயா தருமம்.

cf. " தனக்கென வாழாப் பிறர்க்குரி யாளன்,
இன்பச் செவ்வி மன்பதை எய்த,
அருளறம் பூண்ட வொருபெரும் பூட்கையின் "
(மணிமேகலை. 5. 73 - 75.)

மருள் அறு காட்சி - மயக்கம் நீங்கிய மெய்யறிவு.

47. தெருளுதல் - அறிதல். 48. மடனோய் - அறிவின்மையாகிய நோய். தீர்ந்தார் - நீங்கியார். 49. அன்னார் - அவர், பேதையர். தெருட்டல் - அறிவுறுத்தல். 50. இன்னார் - பகைவர், தீயோருமாம்.

cf. " இன்னா செய்தார்க்கு மினியவே செய்யாக்கா
லென்ன பயத்ததோ சால்பு " (திருக்குறள்.)

51. நயம் - இனிமை. 52. இவ்வூரரசன் - உறந்தைமன்னனாகிய சோழன் செங்கணான். cf. " ஊரெனப் படுவ துறையூர் " தெருட்டுதல் - அறிவு கொளுத்துதல். 53. செய்கடன் - செயற்பால கடமை.

சேங்கணான் :—(உளமகிழ்ந்து தனக்குள்)
என்னே புலவ ரெண்ணம்!
தந்நே ரில்லாத் தகையின ரிவரே. (33)

பொய்கையார் —(வானத்தை நோக்கித் தமக்குள்)
அருட்பெருங் கடலே! தெருட்செழுங் குன்றே!
யாவு முணர்ந்தோய்! யாவு மானோய்!
உன்னரு ளுருவி லொருசிறி துடையேன்;
உன்னின் வேறலேன்; உன்னிடத் துள்ளேன்;
உன்மய மானேன்; உற்றிலேன் றுன்பம்;
இன்ப வுளத்தினேன்; என்னியல் பறிந்தேன்
இனியெனக் கென்குறை? இனிய பொருளே! (34)
(தமக்குட் பாடுகின்றார்.)

உலகனைத்து நிறைந்தொளிரு மொருபொருளே யுன்றனையா
னிலகுமுயிர் தமக்கெல்லா மிருக்குமிட மென்றுரைக்கோ
மலரகத்து மணமென்ன மணியகத்தி னொளியென்ன
நலரகத்து விளக்கென்ன நயந்துறையும் பெருமானே. (35)

உயிர்க்கெல்லா முயிராகு மொருபொருளே யிவ்வுலகிற்
செயிர்க்கெல்லா முறுகருவித் தீவினைதந் தனையென்ப
ரயிர்க்கின்ற புந்தியினா ராங்கதனீ தந்திலையாற்
றுயர்க்குமுத லவ்வவர்தந் தொடர்பிறனிச் சித்தமன்றோ? (36)
(உலவுகின்றனர்.)

சேங்கணான் :—(மனமிரங்கித் தனக்குள்)
பாவலர் கடவுட் பத்தியு மென்கொலோ!
ஆவலிற் சென்றிவ ரணைகோ?
- காவலி னின்றிவர்க் கடிது நீப்பலே. (37)

---

55. தகையினர் - பெருமையுடையார். 56. தெருள் - ஞானம். 57. யாவு முணர்ந்தோன் - ஸர்வஜ்ஞன். யாவுமானோன் - ஸர்வன்.

58 - 60. ஆன்ம தத்துவம் விளக்கின. 61. என்னியல்பு - ஆன்மலக்கணம்.

(செய் - 35.) உரைக்கோ - சொல்லுவேனோ. நலர்-நல்லோர். அறிஞர். அகத்து விளக்கு - ஞானதீபம். பின்னிரண்டடிகள் கடவுளின் அத்துவித நிலை விளக்கின.

(செய் - 36.) உயிர்க்கெல்லாமுயிர் - அந்தராத்துமா. செயிர் - குற்றம். உறு கருவி - பெருங்காரணம். அயிர்க்கின்ற புந்தியினர் - ஐய வறிவினை யுடையார். முதல் - காரணம். அவ்வவர்தம் - அவரவருடைய. தொடர்பில் - சம்பந்தமில்லாத தனிச்சித்தம் - ஒன்றியானமனம்

c f. "நிலையில்லாத் தீவினையு நீதந்த தன்றே" (கம் - ரா.)

71. பாவலர் - கவிஞர். கடவுட் பத்தி - கடவுண்மாட்டுள்ள அன்பு.

72. இவர் அணைகோ - இவரை அணைவேனோ. 73. காவலின் நின்று இவர் கடிது நீப்பல் - சிறையினின்றும் இவரை விரைவின் நீக்குவேன்.

போய்கையார் :—(*தரையை நோக்கித் தமக்குள்*)

*உலகநற் றாயே! உலகநற் றாயே!!*
*உன்மகார் தம்மு ளொருவனே னந்தோ!*
*இதுகாறு நின்னி னெளிதிற் பிரிந்தே*
*பதிதோறு மேகிப் பஞ்சணை யுறங்கினேன்.*
*அப்பொழு தெல்லா மடியே னுற்றன*
*செப்பருந் துயரே, சிறிதுமின் பில்லை; மற்*
*றிப்பொழு தோயா வின்ப மெய்தினேன்.*
*ஒருபே ரன்னாய்! உன்றன தருமைத்*
*திருமடி யதனிற் சிறப்புட னுறங்கும்*
*பெரும்பேறு பெற்றேன்; விரும்பே னெதனையும்.*
*இன்றே நன்னாள்; நன்றே யிந்நாள்.*
*இன்றே போல்க வென்றே யாயினும்.*
*எவையும் பெற்றேன் ; நவையு மற்றேன்.*
*குறையொன்று மில்லேன், தறையென்ற னம்மே!* (38)

(*இன்புடன் தரையிற் படுக்கின்றார்.*)

சேங்கணான் :—(*வியப்புடன் தனக்குள்*)

*இன்பநல் லுருவி னெழிற்றமிழ்ப் புலவீர்!*
*நும்மியல் புணரேன், அம்மவோ தீயேன்!*
*நும்மிற் பிழைத்தேன், நொய்ய பாவியேன்!*
*செம்மை தவிர்ந்தேன், இம்மைப் பயனிலேன்.*
*நும்மடி யடைந்திந் நுவலரும் பிழையைப்*
*போக்கியுய் தலையலாற் போக்குவே றில்லேன்.*
*வைகறைப் போழ்தில்யான் செய்கட னிதுவே.*
*இன்ப நாவலீர் ! என்னையும்*
*அன்புடன் போற்றி யாதரிப் பீரோ ?* (39)

[*போகின்றான்.*

மூன்றாங்களம் முற்றிற்று.

[ஆகச் செய்யுள் 39-க்கு: வரி-382.]

---

74. *உலகநற்றாய் - உலகமாகிய நற்றாய். சராசரங்களை யீன்றெடுத்ததாதலின் உலகினை நற்றாயென்றனர்.* 75. *மகார் - குழந்தைகள்.* 77. *பதி - நகரம். அணை - படுக்கை.* 83. *பேறு - பாக்கியம்.* 86. *நவை - குற்றம்.* 87. *தறை - தரை. தரையாகிய எனதுதாயே.*

88. *இன்பநல்லுரு - அழகிய ஆனந்தஸ்வரூபம்.* 90. *நும்மிற் பிழைத்தேன் - நும்பாற் றவறு செய்தேன். நொய்ய - அற்பமான.* 91. *செம்மை - நடுவுநிலைமை; நல்வழியுமாம்.* 92. *நுவல் அரும்பிழை - செப்புதற்கரிய தவறு.* 93. *உய்தல் - பிழைத்தல் ; தப்பித்தல். போக்கு - வழி.* 94. *வைகறை - விடியற்காலம்.*

## நான்காங்களம்.

இடம் : சோழ னரண்மனையி னந்தப்புரம்.

காலம் : நள்ளிரவு.

பாத்திரங்கள் : இராசமாதேவி, அறிவுடை நங்கை.

(இருவருந் துயில்கின்றனர்.)

இராசமாதேவி :—(வெருண்டு)

அறிவுடை நங்காய்! அறிவுடை நங்காய்!!
அறிவு கலங்கினேன் ; ஆருள முடைந்தேன் ;
உடலம் வியர்த்தேன் ; ஓடிவந் தெனைப்பார்.

(உடல் நடுக்குகின்றாள்.)

அறிவுடைநங்கை :—(விழித்து அருகில் வந்து)

என்னையோ தாயே! என்னையோ தேவீ!
ஏனோ வுடலி வித்துணை நடுக்கம்?

இராசமாதேவி:—(சிறிது பயந்தெளிந்து)

கனவொன்று கண்டேன், கண்டவக் கனமுதல்
மனமொன்றி நிற்கும் வலியற் றயர்ந்து
வாடுவேன் வெருண்டு மயங்கி விழித்தேன்.

அறிவுடைநங்கை:—(நெருங்கி)

பாடுநின் னுளத்தைப் படுத்திய வக்கன
வென்னையோ? தாயே! எடுத்துக் கூறாய்.

இராசமாதேவி:—(சிறிது நின்று)

'எங்கோ? ஒருபே ரிராச்சியம் போலும்;
என்கோ மானும் யானு மொருங்கே
அங்கே சென்றுழி யங்கக ரரசன
தேவன் மாக்களு மெண்மர் பாய்ந்து

---

நள்ளிரவு - நடுராத்திரி. 1. அறிவுடை நங்கை - இராசமாதேவியின் பார்ப்பனத் தோழி. 2. ஆருளம் - புலன்களைச் செவ்விதின் நுகரும் மனம். 7. மனம் ஒன்றி நிற்கும் - விடயங்களிற் பரவாது மனம் ஒன்றுபட்டுச் சுருங்கிக் கிடக்கும். நிற்கும்-பெயரெச்சம். 9. நின்னுளத்தைப் பாடுபடுத்திய எனமாற்றிக் கூட்டுக. பாடுபடுத்திய - துன்புறுத்திய ; பாடு - துன்பம்.

11. எங்கோ - எவ்விடத்தோ. ஒரு பேரிராச்சியம் - ஈண்டு முத்தி யுலகைக் குறிப்பா னுணர்த்திற்று. 13. அங்கரரசன் - முத்திபுரநாதனாகிய சிவனைக் குறிப்பா னுணர்த்தியது. 14. எவன் மாக்கள் - சிவகணங்கள் ; எண்மர் - அவர் தலைவர்கள் எண்மர்; பாணன், இராவணன், சண்டீசன், நந்தி, பிருங்கி, ஜடாதரன், பாநுகம்பன், சங்குகன்னன். இராவணனை நீக்கி மாவலியைக் கூறுவாரு முளர்.

மாவலி கொண்டெமை வம்மெனப் பற்றி
விலங்கெமக் கிட்டவ் வேந்தன் முன்னர்க்
கலங்குறு வேலைக் கடிதி னிறுத்தலும்
அன்னா னிருவரை யாருயிர் போக்கிய
துன்னாப் பழியைச் சுமத்தின னெந்தலை;
அக்குற் றத்தினுக் காங்கழு வாயாத்
தக்கவே ழாயிரந் தாவில்பொன் னீத்துச்
சிறைவீடு பெற்றுத் திரும்பினம்.' இதுதான்
நறையாடு குழலாய் நான்கண்ட கனவு.
பறைபோல நெஞ்சம் படபடக் கின்றதே! (40)

அறிவுடைநங்கை:—(நகைத்து)

இதற்கோ தாயே யித்துணை யச்சம்?
மதிக்கோ ளாறிது மயங்கலை; கேளாய்:
பலிக்குங் கனவும் பலிக்கலாக் கனவும்
உண்டவை தம்முணீ கண்ட கனவுதான்
எத்தன் மைத்தோ? யாமறி யேமால்.
சித்தந் திரிதல் பித்துமீ தூரல்
உயிர்ப்புனல் மூளைக் குரியவா றூறாமை
வயிற்றிட மின்றென வாய்மடை செறித்தல்
உலர்ந்த வூண்கோள் மலர்ந்து துயிலுதல்
யாக்கை மெலிவு சேக்கைக் குறைவோ

---

15. மாவலிகொண்டு - பலாத்காரமாய். வம்-வம்மின். பற்றி-பிடித்து. 18. அன்னான் - இறைவன். இருவர் - பொய்கையார், கணைக்கா லிரும்பொறை. 19. துன்னாப்பழி - பொருந்தாப்பழி. 20. கழுவாய் - பிராயச்சித்தம். 21. ஏழாயிரம் - ஏழாயிரந்துலாம். தாவில் பொன் - குற்றமற்ற பொன்; சாம்பூநதம். ஈத்து - அபராதமாகக் கொடுத்து. ஈண்டு, ஏழாயிரம் துலாம்பொன் கொடுத்தது, கோவிலொன்றுக்கு நூறு துலாம் பொன்னாக எழுபது கோவில்களைப் பின்னர்ச் செங்கணான் நிருமித்ததைக் குறிப்பானுணர்த்தியது. 22. சிறைவீடு - சிறைநீக்கம். 23. நறையாடு குழலாய் - தேன்மணங் கமழுங் கூந்தலையுடையாய்.

24. பறைபோல - பறையடிப்பதுபோல. 26. கோளாறு - கிரகசாரம்; ஈண்டுக் கலக்கம் அல்லது குற்றத்தை யுணர்த்திற்று. மதிக்கோளாறு - புத்தியின் குற்றம். 27. பலித்தல் - பயன்றரல். 30. திரிதல் - மாறுபடல். மீதூரல் - அதிகப்படல். 31. உயிர்ப்புனல் - இரத்தம். உரியவாறு - வேண்டியபடி. (Insufficient circulation of blood to the brain.) 32. மடை - சோறு. வாயின்கண் என ஏழனுருபு விரிக்க. இனிப் பொருந்திய உணவுமாம். செறித்தல் - நிரப்புதல். 33. உலர்ந்த ஊண் கோள் - நீர்ப் பசையற்ற உணவினை உண்ணல். மலர்ந்து துயிலுதல் - மல்லாந்து படுத்துறங்குதல். 34. யாக்கை மெலிவு - உடலிளைப்பு. சேக்கைக் குறைவு - படுக்கைக்கண் உளதாம் குற்றம். ஈரம், உறுத்தல் முதலியன. இடக்கரடக்கியதுமாம்.

டின்னும் பலவா யியம்புகா ரணத்தால்
துன்னுங் கனவுகள். என்னருந் தேவீ!
இக்கனா நிகழ்ச்சிக் கெய்திய
தெக்கா ரணமோ? உட்காய், மாதே! (41)

இராசமாதேவி:—(தெளிவுடன்)

எக்கா ரணத்தா லிக்கன வெய்தினென்?
காரணங் காண்டல் கருத்தன் றெனக்கு; மற்
றிக்கன வதனால் யாதுந் தீங்கு
புக்கெமை நலியுமோ? புகல்வாய், தோழீ!
மக்கட் குறுவன மாட்சியிற் றெரிக்கும்
மெய்க்குறி யலவோ விளம்புங் கனவுகள்?
மன்னிய கடவுண் முன்னறி குறியாக்
காட்டுந வாகுங் கனவென
ஏட்டினி லெழுதி யிருப்பதும் பிழையோ? (42)

அறிவுடைநங்கை:—(முகஞ்சிவந்து)

கனவுநூல் கண்ட கட்டுரை யாளர்
முனமுரைத் திட்ட முதுமொழி யின்கட்
புரைசொல விரும்பி யுரைசெய லொல்லேன்.
கண்ட கனவுகண் மண்டிநம் மாட்டுப்
பலிக்குறி னவற்றை விலக்குமா றென்னோ?
நின்னா லியலுமோ நேர்வன விலக்கல்?
முன்னாட் செய்வினை முதுக்குறை வதனாற்
பின்னாள் விலக்கும் பெற்றிய ருளரோ?
என்னா னும்மஃ தெய்தியே தீரும்.
உன்னா தொன்று முரைக்கலை, தேவீ!
எல்லா மிறைவ னெழுதிய வாறெனச்
சொல்லா நின்றனர் தொல்லை யோரே. (43)

---

30—35. கனவிற் குளவாய காரணங்கள் கூறுகின்றனள். 38. உட்காய் - வருந்தாய்; மனமுடையாய்; அஞ்சாய்.

43. மாட்சி - சிறப்பு. தெரிக்கும் - அறிவிக்கும். 44. மெய்க்குறி - உண்மையான அறிகுறி. 45. மன்னிய கடவுள்-நிலைபெற்ற முழுமுதற் கடவுள். 46. காட்டுந - காண்பிப்பவை. 47. ஏடு - சாத்திரம். 48. கட்டுரை - மெய்ம்மொழி. 49. முதுமொழி - பழைய வாசகம். 50. புரைசொல - குற்றங்கூற. ஒல்லேன் - மாட்டேன். 51. மண்டி - மிகுத்து. நம்மாட்டு - நம்பால். மாடு - ஏழனுருபு. 52. விலக்குமாறு - நீக்கும்விதம். 53. இயலுமோ - கூடுமோ. நேர்வன - சம்பவிப்பவை. 54. முன்னாட் செய்வினை - பழவினை. முதுக்குறைவு - பேரறிவு. 55. பெற்றியர் - தன்மையர். 56. என்னானும் - எதுவாயினும். எய்தியே - சம்பவித்தே. 57. உன்னாது - ஆராயாது. 58. எழுதியவாறு - தலையிலெழுதியபடி. 59. தொல்லையோர்-முன்னோர்.

இராசமாதேவி:—(துக்கத்துடன்)

எவ்வள வுரைத்து மென்னுளந் தெளியுஞ்
செவ்விபெற் றிலதே செந்தமி ழணங்கே!

அறிவுடைநங்கை :—(சிந்தித்து)

ஆருயிர்க் கெல்லா மருநலங் கருதியே
சீருறச் செயல்கள் செய்யப் படுவன.
எல்லா நன்மையே, பொல்லாங் கொன்றிலை.
கடவுள் படைப்பின் கருத்திது வாமால்.
மடவரால்! சிந்தை மாழ்கலை;
குராமலர் விராங்குழ லிராசமா தேவியே! (44)

இராசமாதேவி :—(திரும்பி)

ஆயி னமையும், மேயவென் பாங்கி!
அந்நலன் யாவென மெய்ந்நெறி நின்றியாம்
உணர்வான் முயலுத லொக்குமே யன்றோ?

அறிவுடைநங்கை :—(புன்முறுவல் பூத்து)

வணர்பூங் கோதாய்! வளரெழிற் றோகாய்!
அருளுரு வாகிய வொருபெருங் கடவுள்
உறுநல முயிர்கட் குணரொணா வண்ணம்
நெறிமையிற் செய்வன். நேர்ந்தறி வாமென
முயலுநர் பலரால். முடிவி லந்நலன்
நயனுற விளங்கும்; நடுவினில் விளங்கா.
ஆதலிற் கனுப்பய னீதெனக் காண்டல்
அரிதாம்; அன்றியும் பெரிது மடுத்தடுத்
தெய்துந தம்மு ளெய்யாமை பற்றிப்
பாருறு பற்பலர் காரண காரிய

---

60. செவ்வி - தன்மை. செந்தமிழ் அணங்கு - செந்தமிழ் அறிந்த நங்கை. 62. அருநலம் - பிறவாற்றாற் செயற்கரிய நன்மை. 63. சீர்உற - சிறப்புண்டாக. 64. பொல்லாங்கு - தீமை. 66. மடவரால் - பெண்ணே. மடவரல் என்பதன் விளி. மாழ்கலை - மயங்கலை. 67. குரா - மகளிரான் மலரும் மரங்களுள் ஒன்று. விராம்- விராவும், பொருந்தும். செய்யுமெனெச்ச ஈற்றய லுயிர்மெய் கெட்டது. 68. ஆயின்- அங்ஙனமெனில். மேய - அன்புடைய 69. அந்நலன் - அவ்வித நன்மைகள். யாவென - எவையென. மெய்ந்நெறி நின்று - உண்மை வழியிற் பொருந்தி.

70. உணர்வான் - உணரும்படி. ஒக்குமே - பொருந்துமே. 71. வணர் - நெறிப்பு: வளைவுமாம். கோதை - மாலையை யுடையாள். எழில்வளர் தோகாய் என மாற்றுக; தோகை - மயில். 73. உறுநலம் - மிக்கநன்மை. உணரொணா வண்ணம் - அறியமுடியாதபடி. 74. நெறிமை - கிரமம். நேர்ந்தறிவாம் - மனம்பொருந்தி ஆராய்வோம். 75. முடிவில் - இறுதியில்; அந்நலன் - அந்நன்மை. 76. நயனுற - செம்மைபொருந்த. 79. எய்துந - சம்பவிப்பவை. எய்யாமை - அறியாமை. 80. பாருறு - உலகிற் பொருந்திய.

முறைவகுத் திட்டுக் கறைகெழு புந்திய
ராவார்; அந்தோ! ஆவா! தவறுவர்.
ஒன்றுமுற் படமற் றொன்று பிற்பட
முன்னது காரணம் பின்னது காரியம்
என்பவர் வாதம் புன்பய னுடைத்தே. (45)

இராசமாதேவி :—(தெளிந்து)

நன்றென் றோழீ! நறுந்தமிழ் நங்காய்!
என்ற னுள்ளமு மெய்திற் றமைதி;
எனினு மொருசார்த் துனியு முறுமால்.

அறிவுடைநங்கை:—(ஆலோசித்து)

அற்றே லரசற் கறிவுறுத் திடுவோம்,
சற்றே பொறுத்தி, தையலர் மணியே! (46)

(கடவுளைத் துதித்துப் பாடுகின்றாள்.)

இறையுயிர் யாப்பென வியம்பு மூன்றுமே
யறைதரும் பொருளவை யழிவி லாதன
வறிதிரென் றுயிர்களுக் கருளி னல்கிய
மறைமுடி வாணனை வணங்கி வாழ்த்துவாம். (47)

தறையினிற் பயின்றிடுஞ் சமய நூல்களின்
றுறைதொறு மிலங்குறுந் தூய செம்பொரு
ளிறைவனை யுயிர்க்குயி ரெனவி ளங்குநம்
பிறைமுடிப் பெரியனைப் பேணி வாழ்த்துவாம். (48)

---

81. முறை - கிரமம். கறைகெழு - குற்றம் பொருந்திய. 82. அந்தோ! ஆவா! - இரக்கக் குறிப்பிடைச் சொற்கள். 85. புன்பயன் - பயனின்மை. 86. நறுந்தமிழ் நங்காய் - 61—ம் வரி பார்க்க. இதனானே, தமிழும் அறிவும் ஒன்றெனக் கொண்டனர் ஆசிரியரென்பது விளங்கும். 87. உம்மை, உடலேயன்றி உள்ளமும் என எச்சவும்மையாய் நின்றது. எய்திற்று - பொருந்தியது. 88. ஒருசார் - ஒருபுறம். துனி - துன்பம். 89. அற்றேல் - அங்ஙனமாயின். அறிவுறுத்திடுவோம் - தெரிவிப்போம். 90. தையலர் மணி - வநிதாரத்நம்.

(செய். - 47.) இறை உயிர் யாப்பு என - பதி பசு பாசம் என்று, இயம்பும் மூன்றுமே - நூல்களாற் சொல்லப்படும் மூன்றுமே; அறைதரும் பொருள் - உண்மையானவை என்று சொல்லப்படும் பொருள்களாம்; அவை அழிவிலாதன;— அறிதிர் - அறிவீராக; என்று-; உயிர்களுக்கு - ஆன்மாக்களுக்கு; அருளின் நல்கிய - கருணையால் அறிவுறுத்திய; மறைமுடி வாணனை - வேதாந்தத்தில் வாழ்பவனை; வணங்கி வாழ்த்துவாம் - மெய்யால் வணங்கி வாயால் வாழ்த்துவேமாக. வாணன் வாழ்நன். மெய்வாய்களின் செயல் கூறவே இவற்றிற்கு இன்றியமையாத மனத்தாற் சிந்தித்தலும் உபலக்கணத்தாற் பெற்றாம்.

(செய். - 48.) தறை - தரை; நிலவுலகம். துறை-வழி. இலங்குறும் - விளங்கும்; தூய - பரிசுத்தமான; செம்பொருள் - மெய்ப்பொருளாகிய; இறைவனை - எல்லாப் பொருளிலும் தங்கிய கடவுளை; உயிர்க்குயிரென - உயிருக்கு உயிர்போல, அதாவது அந்தராத்துமாவாய்; விளங்கும்—; நம் பிறைமுடிப் பெரியனை - நமது பிறைத்

பறையினி லிசையெனப் பாலிற் பூவினி
னறையெனச் சுவையென நயந்து நான்மறை
யுறைபொரு ளாகிய வொருவ னைக்கடுக்
கறைகெழு மிடற்றனைக் கருதி வாழ்த்துவாம். (49)

[இருவரும் போகின்றனர்.]

நான்காங்களம் முற்றிற்று.

---

[ஆகச் செய்யுள் 49-க்கு: வரி - 485.]

---

## ஐந்தாங்களம்.

இடம்: சோழ னரண்மனை.

காலம்: காலை.

பாத்திரங்கள்: செங்கணன், பொய்கையார்.

(பொய்கையார் உயர்ந்ததோர் இருக்கையில் வீற்றிருக்கின்றனர்; செங்கணன் அருகே பணிவுடன் நிற்கின்றான்.)

செங்கணன் :—(மனங்கசிந்து)

எந்தமை யாளுஞ் செந்தமிழ்ப் புலவோய்!
அருளே நலஞ்சா லுருவெடுத் தனையாய்!
அன்புநீர் பொழியு மானந்த முகிலே!
இன்ப வுள்ளத் தெழிற்றவ முனியே!
கல்விக் கடலே! செல்வக் குருவே!
மக்கண் மனப்பெரு மாட்சிசேர் நாட்டை
யொக்கச் செங்கோ லோச்சியா ளரசே!

---

திங்களை முடியிற்சூடிய பெருமானை; பேணி வாழ்த்துவாம் - விரும்பி வாழ்த்துவேமாக. இறைவன் - சர்வாந்தரியாமி. செம்பொருள் - அறமுமாம். cf. "செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்" (திருக்குறள்.)

(செய். - 49.) 'பாலிற் பூவினில் நறையெனச் சுவை என' என்பது எதிர் நிரனிறை. பறையில் இசையும், பாலிற்சுவையும், பூவில் நறையும் நான்மறையின் கண் இறைவன் அத்துவிதமாய் நிற்றற்குஉவமை. நயந்து - விரும்பி. நயந்து உறை பொருள் எனக் கூட்டுக. நான்மறை - நான்கு வேதங்கள். ஒருவன் - ஏகன். கடுக் கறை கெழுமிடற்றன் - விடமுண்டதாற் கறைபொருந்திய கழுத்தினையுடையான். விடமுண்டு கண்டங் கறுத்ததும் அடியார்க்கருள் செயற்பொருட்டாதலின், அவனைக் கருதி வாழ்வாம் என்றனள், கனவால் உறற்பாலதாய தீங்கையும் அவன் அருளால் அகற்றவல்லான் என்பது நோக்கி.

3. உருவகவணி. 6—7. ஆறறிவுடைய மக்களின் மனமாகிய பெரிய சிறப்பு வாய்ந்த நாட்டை நடுவு நிலையோடு செங்கோனடாத்தியாளு மரசே. ஒக்க - பகை, நொதுமல், நட்பினராம் யாவர்க்கும் ஒப்ப எனவே பக்ஷபாதமின்றி எனப் பொருள் பட்டது.

செற்றந் தணிந்தெமை யுற்றுக் காத்தியோ ! (50)

[வலம் வந்து பாடுகின்றான்.]

மன்னுயிர்க்குத் தாயாகி வந்தவனைத் தீவினையே
னென்னுயிருக் குறுதியென வெண்ணமை யிருந்தேனே ! (51)

செறிந்தபொருட் செருக்குடையேன். சிறப்புடைய நின்னியல்பை
யறிந்திருந்து மறியாதே னயினேன் குருமணியே ! (52)

குருவருமை யறியாத கொடியவருட் கொடியேற்குந்
திருவருணீ பாலித்துச் சிறிதுகடைக் கணித்திகொலோ ! (53)

உன்பெருமை யுணராதே யுளமயங்கிச் சோதித்தே
னென்புன்மை யிருந்தவா வென்னைகொலென் பெருமானே ! (54)

பிழையனைத்தும் பொறுத்துமெனப் பேசினின்றன் கருணையெனு
மழைபொழிய மாட்டாயேன் மலரடிக்கீ ழுயிர்துறப்பேன். (55)

[வணங்குகின்றான்.]

போய்கையார் :—(செங்கணானையெடுத்து ஆதனத்திருத்தி)
அறிவொளி பெற்றனை, யன்புகொள் சோழ !
வெறுவிய பொருளினி விழையலை, வேந்தே !
நின்பிழை பொறுத்தேன் ; இன்புட னிருத்தி.
உலகநான் மட்டி னலமெனக் கற்றனை ;
அறிவுநா லனைத்தையு மறவொழித் திட்டனை ;
இனிக்குறை யில்லை நினக்கறி யரசே !
உன்னைச் சிறப்பித் துரைப்பான் வேண்டி
வெள்ளை யாப்பினின் வியந்துநூல் செய்துளேன்
கொள்ளுதி யதனைக் குற்றமில் கோவே ! (56)

---

8. செற்றம் - கோபம். தணிந்து - ஆறி.

(செய். - 51) உறுதி - ஆன்மாவிற்கு நன்மை பயப்பது.

(செய். - 52.) செறிந்த - மிக்க. பொருட்செருக்கு - செல்வத்தாலுளதாம் அகங்காரம். (செய் - 53.) கொடியவருட் கொடியேன், " தீயவை யாவையி னுஞ்சிறந்த தீயாள் " (கம். ரா.) என்புழிப்போல நின்றது. பாலித்து - அளித்து. கடைக்கணித்தி - கடாக்ஷிப்பாய். (செய். - 54.) புன்மை - இழிபு. இருந்தவா-இருந்தவாறு ; இருந்தவிதம். (செய். - 55.) பொறுத்தும்-பொறுத்தோம். தும் - தன்மைப் பன்மை விகுதி இறந்தகாலப் பொருட்டு.

19. அறிவொளி - ஞானப்பிரகாசம். 20. வெறுவிய - பயனற்ற. விழையலை - விரும்பாதே. 22. மட்டில் - மாத்திரம். 'மட்டில் நலமென'க் கூட்டிக் குறைவற்ற நன்மையெனப் பொருளுரைத்தலுமொன்று. 23. அற - முற்றிலும். 24. இனி நினக்குக் குறையில்லை என மாற்றுக. 25. உரைப்பான் - உரைக்கும் பொருட்டு வேண்டி - விரும்பி. 26. வெள்ளையாப்பு - வெண்பா. வியந்து - பாராட்டி, புகழ்ந்து 27. கொள்ளுதி - அங்கீகரிப்பாய், பெற்றுக் கொள்வாய்,

சேங்கணான் :—(கண்ணீர் சொரிந்து)

எனக்குஞ் சிறப்போ ? என்பெரு மானே !
மனக்குற் றேவன் மாண்பினிற் செய்த
எனக்குஞ் சிறப்போ ? இன்றமிழ்ப் புலவோய் !
நின்றிரு வாயா னென்றனைப் புகழ்ந்து
வாழ்த்தினை யென்னிற் பாழ்த்தயா னுய்ந்தேன் !
உயர்ந்தேன்! அம்ம! மயர்ந்தபுல் லறிவினேன்.
என்னையும் புகழு மந்நூல் யாதோ ? (57)

பொய்கையார்:—(இளநகையரும்பி)

நன்றுநின் மாற்றம், நறுந்தமி ழண்ணால் !
இன்றமிழ்ப் பாவலர்க் கெல்லா மொருங்கே
எய்ப்பினில் வைப்பா யிருக்கு மன்னவ !
மெய்ப்பொருள் கண்டநீ மேதக்கு வாழ்க.
திருக்கழு மலத்துச் செருக்கணின் வென்றியை
யுளவகை புனைந்து 'களவழி நாற்பது'ப்
பெயரின் வகுத்தேன், அயர்வில் வேந்தே! (58)

சேங்கணான்:—(மகிழ்ந்து)

என்னுயிர்க் குறுதி யெனவெழுந் தருளிய
நல்லிசைப் புலவோய்! மெல்லிசை சான்றவந்
நூலின் பாச்சில நுவல்க, கற்றறி
மேலவர் புகழும் விந்தைநா வலனே !

பொய்கையார்:—(இணங்கி)

இருந்தனை கேட்டி, அருந்தமி ழரசே! (59)

(பாடுகின்றார்.)

---

29. மனக்குற்றேவல் - மனம் இட்ட குற்றேவலை. மாண்பினிற் செய்த - சிறப்புடன் செய்த. 32 . பாழ்த்த யான் - வீணான நான். உய்ந்தேன் - பிழைத்தேன். 33. மயர்ந்த-மயங்கிய. 34. என்னையும்-இழிவு சிறப்பும்மை.

37. எய்ப்பினில் வைப்பு - ஆபத்தனம்; வருவாய் குறைந்து கையிளைத்த காலத்தில் உதவ வைத்திருக்கும் சேமநிதி. 38. மேதக்கு - மேம்பாடுற்று. 39. கழுமலம்-செங்கணானும் கணைக்காலிரும் பொறையும் பொருத இடம். செருக்கண் - போரினிடத்து. 40. உளவகை - மெய்யுரையாக. களவழி நாற்பது - பதினெண் கீழ்க்கணக்கினுள் ஒன்று. போர்க்களத்தை வருணித்துப் பாடியதால் இஃதிப் பெயர்த்தாயிற்று. 40. அயர்வில் - தளர்ச்சியில்லாத. 43. மெல்லிசை சான்ற - மெல்லோசை பொருந்திய. 44. நுவல்க - கூறுக. 45. விந்தை நாவலன் - ஆச்சரிய வித்துவான். வித்யா, வித்தை, விந்தையென மெலித்தல் விகாரம் பெற்றதெனினுமாம். 46. இருந்தனை - இருந்து, முற்றெச்சம்.

* "நாண்ஞாயி றுற்ற செருவிற்கு வீழ்ந்தவர்
வாண்மாய் குருதி களிறுழக்கத்—தாண்மாய்ந்து
முற்பக லெல்லாங் குழம்பாகிப்—பிற்பகற்
றுப்புத் துகளிற் கெழூஉம் புனனாடன்
றப்பியா ரட்ட களத்து." (60)

* "கவளங்கொள் யானையின் கைதுணிக்கப் பட்டுப்
பவளஞ் சொரிதரு பைபோற்—றிவளொளிய
வொண்செங் குருதி யுமிழும் புனனாடன்
கொங்கரை யட்ட களத்து." (61)

* "இருசிறக ரீர்க்குப் பரப்பி யெருவை
குருதிப் பிணங்கவருந் தோற்ற மதிர்விலாச்
சீர்முழாப் பண்ணமைப்பான் போன்ற புனனாட
னேராரை யட்ட களத்து." (62)

---

(செய். - 60.) நாள் ஞாயிறு உற்ற - விடியற்காலையில் உண்டான, செருவிற்கு வீழ்ந்தவர் - போரின்கண் இறந்து பட்டவருடைய. வாள் மாய்குருதி - வாள் அழுந்துதலாற் சொரிந்த குருதியை, களிறு உழக்க - களிறுகள் உழக்குதலினாலே, தாள் மாய்ந்து - கால்களாலே சுருங்கி, முற்பகல் எல்லாம் குழம்பாகி - பகலின் முற்பகுதி யெல்லாம் சேறாகி, பிற்பகல் துப்புத்துகளிற் கெழூஉம் - பகலின் பிற்பகுதியிற் பவளத்தூளாய் ஆகாய வெளியெங்கும் பரந்து செறியாநிற்கும்; புனல் நாடன் - காவிரியின் நீர்வளமுள்ள சோழநாட்டையுடைய செங்கணான், தப்பியார் அட்டகளத்து - பகைவரைக் கொன்ற போர்க்களத்தின்கண்.

களத்துக் குருதி மாய்ந்து குழம்பாகித் துகளிற் கெழூஉம்என வினைமுடிவு செய்க. அப்பொழுதலர்ந்த மலரை நாண்மலர் என்றாற்போல, நாண்ஞாயிறு உதய பானுவினை யுணர்த்திற்று. ஞாயிறு அது தோன்றுங் காலத்திற்கு ஆகுபெயர். இனி ஞாயிறு நாள்என மாற்றிச் சூரியன் உதிக்கும் நாட்பொழுது என்றுங் கூறலாம். இன்னும், நாள் - விடியற்காலையில், ஞாயிறுற்ற செரு - ஞாயிற்றினை யடைதற்குக் காரணமாகிய போர் என்பாருமுளர். cf. "கதிருடல் வழிப்போய்க் கல்லுழை நின்றோர்" (கல்லாடம் - 8.) செருவிற்கு - வேற்றுமை மயக்கம். களிறுதாள் உழக்கக் குருதி மாய்ந்து என மாற்றுக. மாய்ந்து - சுருங்கி. முற்பகல், பிற்பகல் - முன் பின்னாகத் தொக்க ஆறும் வேற்றுமைத் தொகை. கெழுவுதல் - செறிதல், நெருங்குதல். துப்பு - பவளம். தப்பியார் - தவறு செய்தோர், எனவே பகைவர்.

(செய். - 61.) (பொழிப்புரை) புனனாடன் கொங்கரைக் கொன்ற போர்க்களத்தின்கண், கவளத்தைக் கொள்ளும் யானைகள் தமது கைகள் துணிக்கப்பட்டுப் பவளத்தைச் சொரிகின்ற பைபோல், விளங்காநின்ற ஒளியையுடைய ஒள்ளிய செங்குருதியைச் சொரியாநிற்கும். கவளம் - அரிசி, கருப்புக்கட்டி, நெய் முதலிய வற்றைக் கலந்து உருண்டையாக்கி யானைக்குத் தரும் உணவு. யானைக் கைக்குப் பையும் சோரிக்குப் பவளமும் உவமை. கொங்கர் - கொங்க நாட்டினர்.

cf. "பைசொரி பவழம் போலப் படிதாழ், கைசொரி யுதிரம் கான்றுவந் திழிதர." (பெருங்கதை. 53 - 27. 28.)

(செய். - 62.) (பொழிப்புரை) இரண்டு சிறகின்கண்ணுமுள்ள ஈர்க்குக்களைப் பரப்பிக் கழுகுகள் குருதி சோரும் பிணங்களைக் கவர்கின்ற தோற்றம், கலக்கமில்லாத வோசையையுடைய முழாவினைப் பண்ணமைப்பானை யொத்த, நீர்வள நாடன் பகைவரைக் கொன்ற போர்க்களத்துக்கண். சிறகர் - அர் போலி. சிறகு - இறகுகளின் தொகுதியாகிய பக்கம். எருவை - கழுகு. அதிர்வு - கலக்கம்; நடுக்கம்.

* களவழி நாற்பது.

*"ஓடா மறவ ருருத்து மதஞ்செருக்கிப்
பீடுடை வாளர் பிணங்கிய ஞாட்பினுட்
கேடகத்தோ டற்ற தடக்கைகள்கொண்—டோடி
யிகலன்வாய்த் துற்றிய தோற்ற மயலார்க்குக்
கண்ணாடி காண்பாரிற் றோன்றும் புனனாட
னண்ணாரை யட்ட களத்து." (63)

"கடிகாவிற் காற்றுற் றெறிய—வெடிபட்டு
வீற்றுவீற் றோடு மயிலினம்போ—னாற்றிசையுங்
கேளி ரிழந்தா ரலறுபவே செங்கட்
சினமால் பொருத களத்து." (64)

---

*"அதிர வருவதோர் நோய்" (திருக்குறள்.) "அதிர்வில் படிறெருக்கி வந்து" (கலி. 81) "அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்." (சிலப்பதிகாரம். பதிகம்.) பண்ணைமைப்பான் தோற்றத்தைப் பண்ணமைப்பான் என்றது ஆகுபெயர். ஈர்க்கு - இறகு. நேரார் - பகைவர்.

(செய். - 63.) புனனாடன் நண்ணாரை அட்டகளத்து - காவிரி நீர்வள நாடன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தின் கண்ணே, ஓடா மறவர் - போரில் முதுகு காட்டி யோடாதவீரர், வெகுண்டு - கோபித்து, மதம் செருக்கி - களிப்புமிக்கு, பீடு உடை வாளர் - பெருமை வாய்ந்த வாளினையுடையராய், பிணங்கிய ஞாட்பினுள் - மாறுபட்ட போரினிடத்து, இகலன் - நரி, கேடகத்தோடு அற்ற தடக்கை வாய் துற்றிக்கொண்டு ஓடிய தோற்றம் - பரிசையோடு அறுந்த பெரிய கையினை வாயின் கட் கவ்விக்கொண்டு ஓடிய தோற்றம், அயலார்க்கு - பக்கலுள்ளார்க்கு, கண்ணாடி காண்பாரில் தோன்றும் - கண்ணாடி காண்பார்போலத் தோன்றுநிற்கும்.

மதம்-களிப்பு, மகிழ்ச்சி. போர்பெறின் வீரர் மகிழ்தல் இயல்பு. (cf. போரெனிற் புகலும் புனைகழன் மறவர் (புறம். 31). செருக்குதல் - மிகுதல். பிணங்குதல் - மாறுபடல், பொருதல். கேடகம் - பரிசை (Shield) காண்பார் - காட்டுவார் எனப் பொருள் கூறுவாருமுளர்.

cf. "அற்றதோர் கேட கக்கை கவ்விய நரிகண் ணாடி
பற்றிய குறளி செல்வா டன்முகம் பார்த்த போலும்."

(மேருமந்தர. பல. 17.)

(செய். - 64.) (பொழிப்புரை) மிகுந்த சோலையின்கண் காற்று மிக்கு வீசுதலான் வெருவிச் சிதறித் தனித்தனியாக வோடும் மயிலினது கூட்டம்போல, நான்கு திக்கின் கண்ணும் கொழுநனை யிழந்த மாதர் சுழலா நிற்பர்; சினத்தாற் சிவந்த கண்ணையுடைய சோழன் பொருத போர்க்களத்தின்கண். கடி - மிகுதிப் பொருள் படும் உரிச்சொல். கடி வாசனையுமாம். உற்று - மிகுதிப் பொருளதாகிய உறு என்னும் உரிச்சொல்லடியாகப் பிறந்த வினையெச்சம். வெடிபடல் - சிதறுதல். அலமருப - அலமா என்னும் பகுதியடியாகப் பிறந்த பகரவீற்றுப் பலர்பால் வினைமுற்று; ப விகுதி எதிர்காலங் காட்டியது. செங்கட் சினமால் - சினத்தையுடைய செங்கட் சோழன் எனலுமாம். மால் என்பது சோழர்க்குப் பெயர். திருமாலின்கூறாகிய இராமன் வம்சத்தைச் சேர்ந்தோராதலின், இப்பெயர் பெற்றனர். (cf. பெரும்பா. 29; 30.)

* களவழி நாற்பது.

* "மையின்மா மேனி நிலமென்னு நல்லவள்
செய்யது போர்த்தாள்போற் செவ்வென்றாள்—பொய் தீர்ந்த
பூந்தார் முரசிற் பொருபுன னீர்நாடன்
காய்ந்தாரை யட்ட களத்து." (65)

* "ஓஒ வுவம னுறழ்வின்றி யொத்ததே
காவிரி நாடன் கழுமலங் கொண்டநாண்
மாவுதைப்ப மாற்றார் குடையெலாங் கீழ்மேலா
யாவுதை காளாம்பி போன்ற புனனாடன்
மேவாரை யட்ட களத்து." (66)

* "வேனிறத் திங்க வயவரா லெறுண்டு
காளிலங் கொள்ளா கலங்கிச் செவிசாய்த்து
மாநிலங் கூறு மறைகேட்ப போன்றனவே
பாடா ரிடிமுரசிற் பாய்புன னீர்நாடன்
கூடாரை யட்ட களத்து" (67)

---

(செய். - 65.) மை இல் மா மேனி - குற்றம் இல்லாத அழகியமேனியை யுடைய, நிலமென்னும் நல்லாள் - பூமியாகிய பெண், செய்யது போர்த்தாள்போல் - சிவந்த போர்வையைத் தன்மேற் போர்த்தாள்போல, செவ்வென்றாள் - செந்நிறந் தோன்றக் காட்டினாள்; பொய்தீர்ந்த-பொய்யைச் சொல்லுதலும் கேட்டலும் விட்ட, பூந்தார் முரசின் - அழகிய மாலையணிந்த முரசினையுடைய, பொருபுனல் நீர்நாடன்-கரையை மோதும் அலைவீசும் காவிரி நீர்வளநாடன், காய்ந்தாரை அட்டகளத்து-வெகுண்டு தன்மேல் வந்த பகைவரைக் கொன்ற போர்க்களத்தின்கண்.

cf. "பூண்குலாம் வனமுலைப் பூமிதேவி தான், காண்கவேன் கடியன கண்ணி னாலெனாச், சேண்குலாம் கம்பலம் செய்யதொன்றினான், மாண்குலாங் குணத்தினான் மறைத்திட் டாளரோ." (சிந். 2233). பயிர் பச்சென்றது, வெள்ளென வெளுத்தது, என்பனபோலச் செந்நிறங் காட்டினாளென்பதற்குச் செவ்வென்றாள் என்றனர். பொய்தீர்ந்த நாடன்எனச் சேர்க்க. தாரையும் முரசையு முடைய நீர்நாடன் எனலுமாம். பொய் தீர்ந்த என்பதைக் காவிரிக்கு அடையாக்கிப் பொய்தீர் நீர் எனக் கூட்டலுமாம். cf. "வான்பொய்ப் பினுந் தான்பொய்யா, மலைத்தலைய கடற்காவிரி" (பட்டின. 5, 6.).

(செய் - 66.) (பொழிப்புரை) காவிரி நீர்வளநாடன், கழுமல மென்ற ஊரினைக் கைக்கொண்ட நாளில் அவன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தின்கண் புரவிகளான் உதைக்கப்பட்ட மாற்றார் குடைகள்எல்லாம் பசுக்களாற் கீழ்மேலாய் உதைக்கப்பட்ட காளாம்பிகளை யொத்தன; இவ்வுவமை கூறுமிடத்து ஒப்புமை சிறிதும் மாறுபாடின்றிச் சிறப்புடைத்தாகவே பொருந்திற்று. ஓ ஒ - ஓ என்னும் இடைச்சொல் சிறப்புணர்த்தி அடுக்கி நின்றது. உவமன் - உவமை. உறழ்வு - மாறுபாடு. ஒத்தது - பொருந்திற்று. காளாம்பி - குடைக்காளான்; நாய்க்குடை. குடைக்குக் காளாம்பி யுவமை.

(செய். - 67.) (பொழிப்புரை) ஒலித்தல் மிகுந்த இடிபோலமுழங்கும் முரசினை யுடைய அலைகள் பாய்ந்து செல்லும் காவிரிநீர் வளநாடன் பகைவரைக் கொன்ற போர்க்களத்தின்கண், வேல் மார்பின்கண் அழுந்த வீரர்களான் எறியப்பட்டுக் குதிரைகள் கால்தளர்ந்து வீழ்ந்து செவிகளைச் சாய்த்து நிலமகள் கூறும் மந்திரங்களைக் கேட்பன போன்றன. நிறம் - மார்பு. இங்குதல் - தங்குதல்; அழுந்துதல்;

* களவழி நாற்பது

சேங்கணான் :—(களிகூர்ந்து)

நற்றே னொழுகு நறுந்தமிழ்ப் பாடல்
கேட்டவென் செவியும் வேட்டவென் மனமும்
இன்புற் றெதனையு மேற்கில வாயின.
என்புன் றளைவிடுத் தெனையெடுத் தாண்டோய்!
செவிக்கின் னுணவுஞ் சுவைக்கிருப் பிடமுமாங்
களவழி நாற்பதாங் கனிதமிழ் நூலென்
உளவழிப் புக்கங் குறையும், பெரும!

[எழுந்து வணங்குகின்றான்.]

போய்கையார் :—(செங்கணானைக் கையாலெடுத்து)

இந்நூ லுட்கருத் திஃதெனக் கண்டியோ?
மெய்ந்நூ லறிவான் வேண்டிய வேந்தே! (68)

சேங்கணான்:—(சிறிது சிந்தித்து)

கண்டேன், தேசிக! கண்டேன், தேசிக!!
களத்தைப் புனைந்த கருத்தறிந் தேனஃ
துளத்தை யறுக்கு மொள்வா ளாமால்.
அந்தோ! தீயேன்! அந்தோ தீயேன்!!
என்னா னழிந்தவ ரெத்தனை வீரர்!
என்னா னழிந்தன வெத்தனைக் களிறே?
எத்தனை மாவோ? எத்தனைத் தேரோ?
அழிவு கருதிலேன்; அருளுங் கருதிலேன்;
இழிதக வுடைய வெனக்குமுய் வுண்டோ?
துன்புறுத் தாதுதா னின்புற்று வாழ்தலுந்
துன்புறான் பிறரை யின்புறுத் துதலும்
உலக வாழ்க்கையி னுட்கருத் தாகும்.

---

cf. "இணைவே லெழின் மார்வத்திங்க" (களவழி-21). நிலைகொள்ளா - நிற்றலைக் கொள்ளமாட்டாமல் வீழ்ந்து; கொள்ளா - ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம்; எதிர்மறை முற்றெச்சமுமாம். கலங்கி - தளர்ந்து, மனமயங்கி. மா எறுண்டு தளர்ந்து விழுந்து செவிசாய்த்து மறைகேட்பன போன்ற எனவினை முடிவு செய்க. பாடு - ஒலி; பெருமையுமாம்.

84. நல்லதேனின் சுவைபோன்ற சுவையினையுடைய தமிழ்ப்பாடல். பயன்பற்றிய உவமை. பயன் - இனித்தல், மேன்மேல் வேட்டல், மயக்கல். 85. வேட்ட - விரும்பின.

87. புன்தளை - இழிந்த விலங்கு (கட்டு); ஈண்டு ஆன்மாவைப்பிணித்துள்ள பாசத்தை யுணர்த்தி நின்றது. 90. அங்கு - உளத்தின்கண். 91. இஃது - இன்னது. கண்டி - உணர்ந்தனை. 92. அறிவான் - அறிதற்பொருட்டு. வேண்டிய - விரும்பிய. 94. களம் - போர்க்களம். புனைந்த - வருணித்த. 95. ஒள்வாள் - ஒள்ளியவாள்; கூரியவாள். 101. தகவு - தன்மை. 102. துன்புறுத்தாது - பிறர்க்குத் துன்பஞ் செய்யாது. 103. துன்புறான் - தான் துன்பப்படாமல், முற்றெச்சம்.

கலகப் போர்செயல் கரிசுடைத் தையோ !
அறிந்தே னருளறம்; மறந்தேன் மருண்மறம்.
தன்னயங் கருதாத் தகையோய்! போற்றி.
பொய்ப்பொருள் கடிந்த புலவோய்! போற்றி.
மெய்ப்பொருள் கண்ட விமலா! போற்றி.
பிறர்நலந் தேடும் பெரியோய்! போற்றி.
(வணங்கி யெழுந்து)
அறிஞ! நீ யெற்கிடு மாணை யென்னோ? (69)

பொய்கையார்:—(மனமகிழ்ந்து)
செந்நெறிப் பட்ட செங்கண் மாலே!
நின்னுளந் திருந்திய நேர்மைக் குவந்தேன்.
மற்றெனக் கொருகுறை மனத்திற் கிடக்கும்;
உற்றனக் குரைப்பதி லொன்றுந் தடையிலை:
மறைக்கோ ளணைத்து மயக்கற வுணர்ந்தோன்
சிறைக்கோட்ட முற்றவென் செய்யமா ணாக்கன்
சேரலர் தமையுஞ் சேரமான் சேரமான்
கணைக்கா லிரும்பொறைக் காவலன் றன்னைச்
சிறைவீடு செய்தியோ? மறைநாடு மன்னே! (70)

சேங்கணன்:—(விரைந்து)
செய்தே னின்னே! செய்தேன், பெரும!
ஈதென் கைப்பொறி யிட்ட திருமுகம்;
ஏது மெண்ணலை யேற்றருள், குருவே! (71)
(முத்திரையிட்ட ஓலை யொன்றை நீட்ட)

பொய்கையார்:—(திருமுகத்தை யேற்று)
ஏற்றேன், சோழ! எனக்குறு விடைதா;
ஆற்றேன், என்ற னரியமா ணவனை
இன்னே காண்பல்; மன்னே! போவல்.

---

105. கரிசு -குற்றம். 106. அருளையுடைய அறம்; மருளையுடைய மறம். மறம் - வீரம் 107. தன்னயம் -ஸ்வலாபம். 108. பொய்ப்பொருள் - மயக்கம். 109. மெய்ப்பொருள் - கடவுள். 112. செந்நெறி - சன்மார்க்கம். செங்கண்மால் - செங்கட் சோழன். 115. உற்று - மனம் பொருந்தி. 116. மறைக்கோள் - வேதத்தின் உட்பொருள். கோள் - கொள்கை; கருத்து. 118. சேரலர் தமையும் சேர்அமான் - பகைவர் மாட்டும் வெறுப்பின்றி விருப்பொடுஞ் சேரும் அப்பெரியோன்; இன்னா செய்தார்க்கும் இனியவே செய்புமியல்புடைய சான்றோன், என்றது கருத்து. எனவே, வென்று சிறையிட்ட நின்மாட்டும் விருப்புடையன் என்றபடி. சேரமான் கணைக்காலிரும் பொறை - பெயர். 120. சிறைவீடு - சிறையினின்றும் நீக்குதல். மறைநாடும்-வேதத்தின் உட்பொருளை அதாவது மெய்ஞ்ஞானத்தினை அடைய விரும்பும். 121. கைப்பொறி - கையெழுத்து; முத்திரை.

சேங்கண்ணன் :—(மிக விரைந்து)

சித்தம் போலச் செய்கவென் றேவே! (72)

[பொய்கையார் போகின்றார்.]

(தனக்குட் பாடுகின்றான்.)

செய்கை தூய தேசிகர்
பொய்கை யாரின் பொன்னரு
ஐகை நீங்கி நாயினே
னுய்கை யென்ற வுண்மையே. (73)

[போகின்றான்.]

ஐந்தாங்களம் முற்றிற்று.

---

[ஆகச் செய்யுள் 73-க்கு : வரி 616.]

---

## ஆறுங்களம்.

இடம் : சிறைச்சாலை.

காலம் : முற்பகல்.

பாத்திரங்கள் : சிறைகாவலர், சேரமான்.

சிறைகாவலன் முதல்வன் :—

(சிறைகாவல னிரண்டாவனை விளித்து)

என்ன டாவிது ! இவ்வநி யாயம்
எங்கடா வுண்டு ? இரண்டு நளாய்ச்
சோறு மில்லை, நீரு மில்லை ;
இப்படி யிருந்தா லெப்படிப் பிழைப்பான் ?
என்ன மனிசன்! என்ன காவல் !
செத்துத் தொலைஞ்சாற் குத்திப் போடுவார் ;
நம்ம ராசர் சும்மா விடாரே. (74)

சிறைகாவல னிரண்டாவன்:—(சிரித்து)

எல்லாப் பயல்களு மிப்படித் தானடா ;
பொல்லாத் துஷ்டர்கள் ! போடா வுனக்கென ?

---

128. ஆற்றேன் - சகியேன்; பொறேன்.

(செய். - 73.) தேசிகர் - குரு ; ஆசாரியன். பொன்னருள் - சிறந்த அருளால். ஐகை - பிறவித்துயரால் வாடுதல். உய்கை - பிழைத்தல்; ஈடேறல்.

சிறைகாவலன் முதல்வன்:—(இரக்கமுற்று)

என்னபோ னாலு மிராச னிராசனே ;
பொன்னுரு கிட்டாற் போகுமோ செம்பா ?
இருந்தா லிருக்கிறான் ; நின்றா னிற்கிறான் ;
சாய்ந்தாற் சாய்கிறான்; ஓய்ந்தா லோய்கிறான்.
இதென்னடா வம்பு ? இதைத்தா னும்போய்
இராசா விடத்திலே யெடுத்துச் சொல்வமே ? (75)

சிறைகாவல னிரண்டாவன்:—(தடுத்து)

இவனைக் கைப்பிடி ; இவனிட மெத்தக்
காசு கிடக்கும் ; கண்ணைக் கதிலே.
கைசோர விட்டாற் பைசே ராதுகாண்.
இக்கா லத்திற் கைக்கா சில்லான்
படித்தா லுமில்லை, நடித்தா லுமில்லை,
விழுந்தான் விழுந்தான், எழுந்திட மாட்டான்.
காசில் லானைக் காலா லுதைவர் ;
காசுள் ளானைக் கையெடுத் தடியேன்
தாச னென்று தாங்கும் பிடுவர் ;
இதுவே யுலகத் தியற்கை யாகும்.
பணப்பெருந் தாயைக் கணத்திலே பற்று ;
கொஞ்சம்யோ சித்தால் மிஞ்சிப் போயிடும்.
பணமென்று சொன்னாற் பிணமும்வாய் திறக்கும் ;
மூக்கா லழாதே ! முதலிற் பணக்கண்,
இரண்டாவதுதா னிரக்க மெனுங்கண்.
என்ன ? தெரிந்ததா ? சொன்னதை விடாதே. (76)

(பாடுகின்றான்.)

போய்ச்சிறையச் சொன்னாலும் போகட்டுங் குற்றமில்லை
கைச்சிறையப் பெற்றபணங் கண்கண்ட தெய்வமடா ! (77)

சிறைகாவலன் முதல்வன்:—(வெறுப்படைந்து)

உனது பேச்சுசா னெப்ப வில்லை ;
முனகா திரடா, எனவோர் பேசினன் .

சேரமான்:—(மந்தமான குரலில்)

காலக் கொடுமையோ ? ஞாலக் கொடுமையோ ?

---

10—11. எடுத்துக் காட்டுவமை.

16. கைப்பிடி - உறுதியாகப்பற்று; விடாதே. மெத்த-மிக. 18. பை-பணப்பை. 19-24. 'இல்லானை யெல்லாரு மெள்ளுவர்' என்பதை விளக்கியது. 16-33. இவ் விரண்டாங் காவலன் பணமே கதியென்பார்க்குக் காட்டாய் நிற்பவன். 32. போகட்டும் - கிடக்கட்டும். 35. முனகுதல் - தாழ்ந்தகுரலிற் பேசுதல்.

கால மென்செயும்? ஞால மென்செயும்?
மக்கள் குணத்தை மாற்றுவார் யாவர்?
இக்கள்வ ரோவிவ் விருஞ்சிறை காப்போர்?
நெருந லிரவினி னினைத்த வண்ணம்
பருகிக் கள்ளிவர் பாரினி லுருண்டு
வாய்க்கு வந்தன வந்தவா பிதற்றிக்
கூக்குர லிட்டுக் கூடி யாடி
யுடையு மிழந்து நடையு மிழந்து
பிணமெனக் கிடந்தனர்; பேயர்! அந்தோ!
பணமென வடிக்கடி பரிந்திவர் மாழ்கலென்?
செல்வங் கருவியோ சிறந்த பயனோ?
கல்வி நலமிலாக் கயவர் தாமே
கருவியைப் பயனாக் கருதுந் தீயோர்.

(மௌனம்)

எனக்குநா வறட்சி யெய்துத லெவனோ?
மனத்தின் மருட்சியால் வந்ததோ விதுவும்?
இந்நிலை யிருந்தியா னின்னணம் வருந்தல்
என்னிலைக் கேற்குமோ? இன்னுயிர் துறத்தல்
இதனினு மிகவு மேற்புடைத் தன்றோ? (78)

(மௌனம்)

என்று மெங்கணு மிருளே தோன்றுமால்;
பொன்றிய பின்னர்ப் புகுமிட மாகிய
துன்றிரு ளுலகமுஞ் சொல்லினிஃ தாங்கொலோ? (79)

சிறைகாவல னிரண்டாவன்:—(வெகுண்டு)

என்னவோ நீதி யெடுத்தையே! கேட்டியா
இன்னவர் பேச்சை? மன்னவர் மன்னர்!
ராசாதி ராசர்! பேசா திருப்பவர்!
போடா வுனைப்போற் புத்தி கெட்டுவெள்
ளாடா யிருப்பவ னாடா வுலகில்?
நம்ம தலைக்கே நடுக்குறி வைச்சான்.

---

40. நெருநல் - நேற்று. 41. இவர்கள் பருகி என மாற்றுக. 42. வந்தவா - வந்தவாறு, வந்தபடி. 46. பரிந்து - ஆசைகொண்டு. மாழ்குதல் - மயங்குதல். 46—49. செல்வத்தின் உண்மைநிலை கூறியது. 55. எங்கணும் - எவ்விடமும்.

56. பொன்றிய பின்னர் - இறந்தபின். 57. துன்று இருள் - நெருங்கிய இருள். 60. உயர்த்ததுபோல் இழித்தது. 61. வெள்ளாடு மூடனுக்கு உவமை. 63. நடுக்குறி- நீங்கு.

சிறைகாவலன் முதல்வன்:—(மறுத்து)

நம்ம குற்ற ஞாயந் தானே?
கள்ளுக் குடிக்கலாம்; உள்ளுக் குருளலாம்;
ஒன்றுங் குற்ற முரைக்கப் படாதோ? (80)

சேரமான்:—(காவலனொருவனை நோக்கி)

வருவ காவல! பருகுதற் குரிய
நன்னீர் சிறிதுநீ யின்னே கொணர்தி.

சிறைகாவல னிரண்டாவன்:—(முனகிய குரலில்)

இப்போது மட்டும் யாங்கள் வேண்டுமோ?
அப்பா! என்ன அதிகாரம்! அடடா!
உனக்கெச மான்யான்! நினைக்க வில்லையோ? (81)

(எழுந்து மெல்ல வந்து சேரமானைப் பார்த்து)

என்ன வேண்டும்?
என்ன சொல்லையா?

சிறைகாவலன் முதல்வன்:—(ஓடிவந்து)

குடிக்கத் தண்ணீர் கொண்டு வரச்சொனார்.

சிறைகாவல னிரண்டாவன்:—(வெகுண்டு)

சும்மா விருநீ; சொல்லலா மப்புறம்.
இன்னொரு தரமிவர் சொன்ன லென்ன?
வாய்முத் துதிர்ந்து வழியெலாம் விழுமோ? (82)

சிறைகாவலன் முதல்வன்:—(தடுத்து)

ஓடிப் போய்நீ யொருநொடிக் குள்வா;
நாடிப் பேசடா, நல்லவ ரேயிவர்.

சிறைகாவல னிரண்டாவன்:—(இணங்கி)

ஆன விதோநீர் நானே கொணர்வேன்.

[போகின்றான்.]

சேரமான்:—(தனக்குள்)

ஏவல ரெல்லா மிழிதொழி லோர்; சிறை
காவல ரெல்லாங் கயவர்கள். ஐயோ!

65. உள்ளுக்கு - உள்ளிடம்; வேற்றுமை மயக்கம். 67. வருவ - வருவாய்; பருகுதல் - குடித்தல். 68. இன்னே - இப்பொழுதே. கொணர்தி - கொண்டுவா; த் எழுத்துப் பேறு. 81. கயவர் - கீழோர்.

இற்றை நாளினி லேவன் மாக்கள்
சற்று மன்பிலர் தந்தலை வோர்மேல்.
இன்னா ரியல்பினை யெய்யே னிவர்கட்
கன்னோ வெளியே னுனை யிட்டனென் !
ஏனோ நீயே யின்னரை யேயினேன் ?
யானோ மனிதன் ? மானினு மிழிந்தேன்.
மயிரொன்று நீப்பின் வாழா கவரிமா
செயிரொன்று நண்ணியுஞ் சிறியேன் கருதேன்
உயிரொன்றி நின்றிங் குயங்கு வேனோ? (83)

(மௌனம்)

பிறவி யனைத்தினும் பெருமைசான் மக்கட்
பிறவி சிறந்ததே ; பிறங்குமப் பிறவியுள்
உறுப்பின் குறைகளு ளொன்று முறாது
பிறத்தன் மேலாம். பிறப்பியா னின்னணம்
பெற்றேன் ; அறிவுநூல் கற்றேன் ; சற்குரு
தாண்மல ரடைந்தேன் ; ஆண்மையிற் சிறந்தேன்.
' இந்த வுலகமே நந்தலி லின்பந்
தந்திடு முலகம். இந்த யாக்கையே
செந்தவக் கருவி ; சீரிய வுயிருக்
குறைவிட மாகி யுறுதி பயப்பது ;
இதனைப் பேணு திருத்தன் மடமை.
உடலினு ளன்றே யுயிரினைக் காண்டல் ;
உடலிருப் புழியே யுயிருக் கறிவாம் ;
உடலினை யிழந்தா லுயிர்க்கறி விலையால் ;

---

83. தலைவோர்-எசமானர். 84. எய்யேன் - அறியேன். ஈண்டு முற்றெச்சம்.
86. இன்னரை - இவரை. எயினேன் - ஏவினேன்.

87. மான்-விலங்கு. ன் - சாரியை, மானுமாம்.

88. cf. "மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னா
ருயிர் நீப்பர் மானம்வரின்."

89. செயிர் - குற்றம். செயிர் ஒன்று நண்ணியும் - தீங்குஒன்று நேர்ந்தும். ஈண்டுத் தீங்கு என்றது தான் சிறைப்பட்டது. 90. உயிர் ஒன்றி நின்று - உயிர்கூடி நின்று. உயங்குவேனோ - வாடுவேனோ. 91. பெருமைசால் - சிறந்த. 93. உறுப்பின் குறை - அவயவக் குறைபாடுள்ளவை. இவை எண்பேரெச்ச மெனப்படும். cf. "சிறப்பில் சிதடும் உறுப்பில் பிண்டமும், கூனும் குறளும்ஊமும் செவிடும், மாவும் மருளும் உளப்பட வாழ்நர்க் கெண்பே ரெச்சம்." (புறம் - 28.) உறாது - உண்டாகாமல். 97. நந்தல் - கெடல், அழிதல். நந்தலிலின்பம் - பேரானந்தம். 99 செந்தவக்கருவி - செவ்விய தவத்தைச் செய்தற்கு வாய்த்தகருவி. 100. உறுதி- அறம், பொருள், இன்பம், வீடு. 101. பேணாது - பாதுகாவாது. 103. இருப்புழி இருக்கும்பொழுது.

உன்னைநீ யறிதலு மொன்றாது கண்டாய்
அறிவுட னிருக்குஞ் செறிவுடை யுயிரே
இறைவனை வழிபட் டிறுதியில் வீடு
பெறும்'என வெற்குப் பெட்டினி தருளிய
தேசிகன் வாய்மொழி சிந்தைவிட் டகலா.
மாசிலான் மாற்ற மயங்கவும் படுமோ ?
எனினு மிவ்வுல கெனக்கு மட்டில்
தீதெனத் தோன்றற்கி யாதுகா ரணமோ ? (84)
கடவுளா ரின்னருள் கனிந்து தந்தவிவ்
வுடலினைத் தபுத்த லுறப்பெருந் தீங்குகொல் ?
என்புதோல் போர்த்தவிப் புன்புலால் யாக்கையைப்
போக்கி னெனக்குப் போதரும் பாவமென் ?
கடவு ளாணை கடத்தற் பாவமும்
மடமைப் பிணிக்கு மருத்துவன் சொல்லை
மதியாப் பாவமும் வந்தெனைப் பற்றிற்
கதியா தாமோ ? விதியா தாமோ ? (85)

[சிறைகாவல னிரண்டாவன் தண்ணீர் கொண்டு வருகின்றான்.]

சிறைகாவலன் முதல்வன்:—(கைகாட்டி)
கொண்டுபோ, விரைவாக் கொண்டு போய்க்கொடு.

சிறைகாவல னிரண்டாவன்:—(தடுத்து)
மண்டு தாகமோ மன்னவ ருக்கே ?
என்னடா அவசரம்? இன்னுங் கொஞ்சம்
நேரங் கழித்து நீட்டினாற் குடிக்கிறான்.
தாமதஞ் செய்தாற் றலைபோ யிடுமோ ? (86)

---

105. ஒன்றாது - கூடாது. உன்னை நீ அறிதல் - தன்னைத் தானறிதல்; ஆன்மாவை யறிதல். 106. செறிவு - நெருக்கம். 107. இறைவன் - கடவுள். வழிபட்டு - தியானித்து வாழ்த்தி வணங்கி; தொழுது. இறுதியில் - முடிவில். இல் - ஏழனுருபு. இனி இறுதியில் வீடு வினைத் தொகையுமாம். உயிரே பெறும் என முடிக்க. 108. எற்கு - எனக்கு. பெட்டு - விரும்பி. இனிது - செவ்விதாக, நன்றாக. 97—108. உடலின் தன்மையை விளக்கிய தேசிகன் வாய்மொழி. 109. வாய்மொழி - உபதேசம்; மெய்ம்மொழி. 110. மாசிலான் - குற்றமற்றோனாகிய தேசிகன். மாற்றம் - உபதேசமொழி. 113. ஆர் இன் அருள் - அரிய இனிய கருணை. கனிந்து - பழுத்து, முதிர்ந்து. தந்த - உதவிய 114. தபுத்தல் - அழித்தல். உறப்பெரும் - மிகப்பெரும். 115. என்பு தோல் போர்த்த - எலும்பினைத் தோலாற் போர்த்த. புன்புலால் யாக்கை - இழிந்த மாமிசத்தாலாகிய உடம்பு. 116. போதரும் - உண்டாகும். 117. ஆணை - கட்டளை. 118. மடமைப் பிணிக்கு மருத்துவன் - அறிவின்மையாகிய நோயை நீக்கும் வைத்தியனாகிய ஆசிரியன் 119. மதியா - பொருட் படுத்தாத. 122. மண்டு - மிகுந்த.

சிறைகாவலன் முதல்வன்:—(இரக்கமுற்று)

இல்லை, இல்லை. எனைவேண்டி யாவது
நல்லதண் ணீரென்று நயத்தொடு நீட்டு.
தவிச்ச வாய்க்குத் தண்ணீ ரில்லையோ? (87)

சிறைகாவல னிரண்டாவன்:—(இணங்கி)

அப்படி யானு லங்ஙனே போய்நான்
கொடுத்து வருகிறேன்; கூடவா ராதே.

சிறைகாவலன் முதல்வன்:—(சிரித்து)

எடுத்துக் கொள்ளடா வெல்லாப் பரிசையும்.

சிறைகாவல னிரண்டாவன்:—

(சேரமானிடஞ் சென்று நிமிர்ந்து நின்றவாறே வணக்கமின்றி ஒரு கையால் தண்ணீர்க் கலத்தை நீட்டி யுரத்த குரலில்)

தண்ணீர் சாமி!—(எதிரில் வந்து)
தண்ணீ ரையா!
(நகையாடி)
என்ன? நீர் கேட்டது தண்ணீர் தானே?
பித்தந் தானோ? சித்தப் பிரமையோ?
மெத்தப் படித்த புத்திக் கேடோ?
என்னடா பெரிய இழவு! தண்ணீர்
வேண்டா விட்டால் வீணுக் கிப்படி
யென்னை யனுப்பி யேய்க்க லாமோ? (88)

சிறைகாவலன் முதல்வன்:—(வெறுப்புடன்)

அங்ஙனே வைச்சிட் டிங்ஙனே வாடா.

சிறைகாவல னிரண்டாவன்:—(வெகுண்டு)

குடிச்சாற் குடியும், குடியா விட்டாற்
கொட்டிக் கவிழும். வெட்டி வேலை
பொய்க்கா யினுமெனைப் போகச் சொன்னீர்,
இப்படி யென்று மெழுந்தே போயிரேன்.
எப்படிப் போனு லெனக்கென வம்போ? (89)

சிறைகாவலன் முதல்வன்:—(யோசித்து)

நேரமா யிற்று; நீயு நானும்
உண்ணவேண் டாமா? உண்டு வருமுன்
தண்ணீர் குடித்திவர் தாகந் தீர்வார்.

---

128. தவிச்ச-தவித்த. 129. அங்ஙனே - அவ்விடம். 131. பரிசு - வெகுமதி.
139. வைச்சிட்டு - வைத்திட்டு. 141. வெட்டி வேலை - பயனற்றதொழில்.

புண்ணிற் கோலிடல் போலக்
கெட்டசொற் பேசாது விட்டுவா ராயோ? (90)

[இருவரும் போகின்றனர்.]

சேரமான்:—(முகம் விளர்த்து)

நாடு மிழந்தேன்; நல்வினை மிழந்தேன்;
பீடு மிழந்தேன்; பெருமையு மிழந்தேன்;
ஏடு மிழந்தேன்; என்னையு மிழந்தேன்;
இல்லற மிழந்தேன்; என்வய மிழந்தேன்;
நல்லற மில்லார் நாப்ப ணிருந்தேன்;
பொலிவிலேன் பொருளிலேன் புலமிலேன், அந்தோ!
போரிற் றொலைந்த புன்மையேன் றனக்கு
வீர னெனும்பெயர் விளம்ப றகாது.
விழுப்புண் பட்டு மேதக வீழ்ந்து
செழிப்புடன் வீரர் செவ்விய துறக்கம்
எய்துவர். அந்தோ! கைதலா ரெளியேன்;
சாகிலே னிருந்தேன்; போகிலே னின்றேன்;
மாய்கிலேன் மறந்தேன்; வீகிலேன், விளிகிலேன்,
ஏகிலேன், தீயேன், என்னைகொல்? ஐயோ!
பகைவன் கையகப் பட்டுச் சிறையில்
நகைபல ராட ஞமலி போல
இருப்புத் தொடரிற் பிணிப்புண் டண்டை
யிருத்தலிற் சாத லெத்துணை மேன்மை?
இனியிவ் வாழ்வெனக் கினியது கொல்லோ?
மானமே யுயிரினு மாண்புடைத் தாமால்.
நீரின் வேட்கை யாரத் தணித்தியான்
யாரைக் காத்த லியலுமோ? அறியேன்.
நீரும் வேண்டேன்; பாரும் வேண்டேன்;

---

151. பீடு - சிறப்பு. 152. ஏடு - உடல். உயிர் பிறவிகடோறும் எடுப்பது ஏடு எனக் காரணப் பெயர் கொண்டது.

cf. "ஏடுதுற்ற வைவேலான்" (கம். ரா.)
"ஏடு துற்றக லோயி லெற்கே" (கலாவதி)

என்னையும் - யான் என்னும் ஆன்மாவையும்.

154. நாப்பண் - நடுவில். 155. பொலிவு - அழகு. புலம் - அறிவு. 156. புன்மையேன் - அற்பன், கீழ்மையேன். 158. விழுப்புண் - போரிடத்து முகத்தினும் மார்பினும் பட்டபுண். cf. "விழுப்புண் படாத நாளெல்லாம்" (திருக்குறள்). மேதக - மேம்பாடுற. 159. செவ்விய - உயர்ந்த, சீரிய. துறக்கம் - வீரசொர்க்கம். 160. கைதல்ஆர் - வருந்துதல் மிக்க. சாதல், போதல், மாய்தல், வீதல், விளிதல், ஏகுதல் - இவை இறத்தல் என்னும் ஒருபொருள் குறித்தன. 165. பலர் நகையாட எனக் கூட்டுக. ஞமலி - நாய். 166. இருப்புத்தொடர் - இருப்புச்சங்கிலி. 169 மாண்பு-சிறப்பு. 170. ஆர-நிறைய, நிரம்ப. 171. இயலுமோ-கூடுமோ. 172. பார்-பூமி

சாவு வேண்டினேன், தருவாய்,
தேவ தேவவென் செய்ய கடவுளே ! (91)

(இரங்கிப் பாடுகின்றான்.)

யாவற் றினையு மினிதறியு மெம்மானே
தாவற் றொளிருந் தயாநிதியே நின்னடியேன்
காவற் றொழில்புரியேன் கையற் றிருத்தலொவ்வேன்
பாவச் சுமையுடலைப் பாரிலெறிந் துய்வேனே ! (92)

வேலின் வீழ்ந்திலென் வெவ்விய வாளினிற்
கோலின் வீழ்ந்திலென் கோதுடை யேனந்தோ
ஞாலப் பாரமு நல்லுண்டிக் கேடுமாம்
போலி யாக்கையைப் போக்கியுய் வேனரோ. (93)

பொய்யோ வென்னப் புகலுறுமிப்
புன்மைக் குடிலின் பொறைவேண்டே
ஐயோ பரனே யரும்பொருளே
யருளா னந்தப் பெருங்கடலே
துய்யோய் நிறைந்த சுடரொளியே
தொல்லை ஞான சுகவாழ்வே
செய்யோய் நின்றன் திருவடியிற்
சிறியேன் றனையுஞ் சேர்த்தருளே. (94)

மானமே யாருயிர் மான மேயறம்
மானமே செம்பொருண் மான மேயின்பம்
மானமே பேரொளி மான மேபுகழ்
மானமே யெவற்றினு மாட்சி சான்றதால். (95)

இத்தகை மானம திழந்த பின்னரு
முத்தம முடலினை வுணர்ந்து சாகிலர்
தத்தம யாக்கையைத் தகவி லாதையோ
நித்தமும் பேணுவார் நீச ரல்லரோ ? (96)

---

(செய். - 92.) இனிது - செவ்விதின். தா அற்று - குற்றம்இன்றி. தயாநிதி-அருட் செல்வம். கையற்று - செயலற்று. ஒவ்வேன் - இணங்கேன். எறிந்து - வீசி, துறந்து.

(செய். - 93.) வெவ்விய - கொடிய. கோல் - அம்பு. ஞாலப்பாரம் நல்லுண்டிக் கேடு: 'பூமிக்குப் பாரம் சோற்றுக்குக் கேடு'; பயனின்றி என்றபடி. பயனிலதாதலிற் போலியாக்கை என்றனன்.

(செய். - 94.) புன்மைக்குடில் - இழிந்தகுடிசை. பொறை - பாரம்; சுமை. பரன்-மேலோன். அரும்பொருள்-பெறற்கு அரும்பொருள். அருளாநந்தம்- அருளை யுடைய ஆநந்தம். துய்யோன் - பரிசுத்தன். தொல்லை - பழமையான. ஞானசுகம்- சிதாநந்தம்.

(செய். - 95.) செம்பொருள் - உண்மைப்பொருள். மாட்சிசான்றது - சிறப்பு மிக்கது. (செய். - 96.) உத்தமம் - உயர்ந்தது.

புலன்கழி பேதைமார் போல மன்றலங்
கலன்கழி மடந்தையர்க் கடுப்ப வாழ்கிலேன்
வலன்கழி யுதவுறு மான மென்றசெந்
நலன்கழி வுற்றபுன் னையி னேனரோ. (97)

(எழுது கருவிகள் கொண்டு ஓலையின்கண் ஒரு செய்யுளெழுதுகின்றான். நாவறட்சி மேலிடுதலான் மந்தமான குரலில்,)

உடலே! செய்ய உடலே! இதுகாறு
மெனக்கிட மாகி யிருந்த வுடலே!
உனக்கினி யேனு யுன்னைப் பேணி
வாழ்தல் விரும்பேன் வறட்சி மிக்குத்
தாழ்த லுற்றேன்; தாதாய்!
என்னையுங் காத்தி நின்னருள் கொடுத்தே. (98)

[சாகின்றான்.]

(சிறைகாவலர் வருகின்றனர்.)

சிறைகாவலன் முதல்வன்:—(பார்த்து)
இன்னுந் தண்ணீ ரேனடா குடியா
துறங்கு கின்றனர்?—ஓகோ!
ஓடிவா, தம்பி! ஓகோ! மோசமே! (99)

சிறைகாவலனிரண்டாவன்:—(அஞ்சி யோடிவந்து)
சேத்துக் கித்துப் போய்விட் டானோ?
மெத்த வம்பா விளைஞ்சு விட்டதே!
என்னடா செய்யலாம்? என்னுடல் மிகவும்
பதறு கின்றதே, பாவீ! பாவீ!!

(உடல் நடுங்குகின்றான்.)

சிறைகாவலன் முதல்வன்:—(உற்றுநோக்கி)
கதறிச் செத்தார் போலுங் காணுய்;
வாயி னுரைமிக வந்திருக் கின்றதே. (100)
இனித்தா மதித்திங் கிருக்கப் படாது;
நம்மரா சாவிட நான் போய்
உரைத்து வருவேன்; உட்கா ரிங்கே. (101)

[போகின்றான்.]

(செய். - 97.) புலன்கழி - அறிவுநீங்கிய. மன்றல் அம் கலன்கழி மடந்தையர் - திருமங்கலியமிழந்த கைம்பெண்கள். கடுப்ப - போல. வலன் - பலத்தை. கழி உதவுறும் - மிகுதியும் உதவும். செந்நலன்-செம்மைவாய்ந்த அழகு. புன்னையினேன் இழிந்த நாய் அனையேன்.

203. தாதாய் - பிதாவே; என்றது கடவுளை. 208. செத்துக்கித்து - ஒரு சொல் விழுக்காடு. (வழக்குச் சொல்) 209. வம்பு - குற்றம். (வழக்.)

(பொய்கையார் வருகின்றார்.)

பொய்கையார்:—(மலர்ந்த முகத்துடன்)
யாரை? காவல! பாரிதைப் போந்து.

(திருமுகத்தைக் காட்டி)

கோட்டம் புகுதல் வேட்டனென்; விடுத்தியோ?

சிறைகாவல னிரண்டாவன்:—(துன்புடன்)
உள்ளே போங்கள், உயர்தமிழ்ப் புலவரே !

பொய்கையார்:—(சேரமானிடஞ் சென்று)
தெள்ளே ரமுதச் செஞ்சொலாய்! எழுக;
செவ்விய கேள்விச் சேரமான்! எழுக;
ஔவிய மகன்ற வண்ணல்! எழுக;
அறிவுநூற் புலவர்க் கிறைவனே! எழுக;
அழகொரு வடிவா யமைந்தோய்! எழுக;
மழகளி றனைய மன்னே! எழுக;
மன்னுயிர்க் குயிரென வந்தோய்! எழுக;
நிற்சிறை வீடு செய்து நேர்ந்தனென் ;
எற்கின் னினிய விருந்தமிழ் மாணவ!
எழுக; எழுக; தொழுக வீசனே.

(சேரமானொன்றும் பேசாமைகண்டு)

துயில்கின் றனையோ பயில்கிலாப் பகலில் ?
உண்டிலை கொல்லோ தண்டமிழ்க் கோவே ! (102)

(உற்றுப் பார்த்து)

ஓகோ! அரசே! உயிர்துறந் தனையோ ?
தீகோ தமியேன் செய்யநிற் பிரிந்தே ?

(கலுழ்ந்து)

---

217. யாரை - ஐ முன்னிலை குறித்து நின்றது. போந்து இதைப் பாரென மாற்றுக. 218. கோட்டம் - சிறைச்சாலை. 220. தெள் ஏர் அமுதச் சொல்- தெளிந்த அழகிய அமுதம் போலு மினிய சொல். நற்பொருள் கேட்டறிந்தவனாத லின் செவ்விய கேள்வி யென விசேடித்தனர்.

222. ஔவியம் - பொறாமை. 223. அறிவுநூற் புலவர் - ஞானசாஸ்திர பண்டிதர். 225. மழகளிறு - யானைக்கன்று. 226. தன்னுயிர்போன் மன்னுயிரைப் பாதுகாக்கும் மன்னனாதலின் மன்னுயிர்க் குயிரென்றனர். 227. நிற்சிறை வீடு செய்து - நின்னைச் சிறையினின்று விடுதலைசெய்து. நேர்ந்தனென் - எதிர்வந்தேன்.
cf. "எங்குந்தேடி, நின்றனைக் காணுதிங்கு நேர்ந்தனம்
யாங்களென்றார்" (திருவிளையாடல். அங்கம். 21.)

228. எற்கு - எனக்கு. இன்னினிய - மிக இனிய. 230. பயில்கிலா - துயிலுதல்; வழக்கமில்லாத. 231. உண்டிலை - உணவுகொண்டிலை. 233. தீகோ - எரிவேனோ. கு விகுதி தன்மை யொருமை, எதிர்கால முணர்த்திற்று.

யாவு மழிந்தன ! யாவும் போயின
யாவுந் தேய்ந்தன ! யாவு மாய்ந்தன !

(கீழே வீழ்ந்து)

நசைக்கிருப் பிடமென நண்ணிய நம்பீ !
தசைச்சிறை யாக்கை தகாதென விடுத்தியோ ?
என்னுடை யெண்ண மெல்லாந் தொலைந்தன ;
ஐயவென் னசையெலா மவல மாயின !
வெய்ய பாலையே விளம்பு நானிலம் !
யாண்டுந் தீயே ! யாண்டும் பரலே !
யாண்டுநீ ரில்லை ; யாண்டுநிழ லில்லை.
எங்கணும் பறந்தலை ; எங்கணுங் கழுகும்
பருந்தும் புறாவும் விருந்து கொள்வன ;
ஆறலைத் திடலுஞ் சூறை கோடலும்
மல்கின வெங்கும்; ஒல்கிய துலகே. (103)

(எழுந்து)

முன்னின வினிமையாய் முடியு மமயத்
தன்னே வவையெலா மழிதந் தனவே.
உலகிற் றீமையே யோங்கல் வேண்டுமோ ?
ஈதோ விறைவ னிட்ட வாணை ?
இறைவ னாட்சி யினினும், அந்தோ !
குறைக ளெய்துதல் கூடுமோ ?
இறைவன் செயலை யெவரறிந் தாரே ? (104)

(சேரமானுடலைத் தொட்டுப் பார்த்துப் பற்றியெடுத்தலும் அவன் மார்பிற் கிடந்ததோர் ஓலைச்சுருள் வெளிப்பட அதனை யெடுத்து விரித்துப் படிக்கின்றார்.)

* " குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினு
மாளன் றென்று வாளிற் றப்பார்
தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளாண் சிறுபத

---

236. நசை - எனது விருப்பம், அன்பு, ஆசை. நம்பி - புருடோத்தமன். 237. தசைச் சிறை யாக்கை - உயிர்க்குச் சிறையாகிய தசையானியன்ற உடல். 239. அவலம்-பயனின்மை. 240. வெய்யபாலை - கொடிய பாலை நிலம். நானிலம் - குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் ஆகிய நான்கு பகுதிகளாலாகிய பூமி. 241. பரல் பருக்கைக்கற்கள். 243. பறந்தலை - பாழிடம், சுடுகாடு. 245. ஆறலைத்திடல் - வழிப் பறித்தல். சூறைகோடல் - பெருங் கொள்ளையாடல். 246. ஒல்கியது - வாடியது; மெலிந்தது, சுருங்கியது. 247. முன்னின - நினைத்தவை. 248. அழிதந்தன அழிந்தன. தா-துணைவினை. 249. ஓங்கல் - மிகல். 251. நல்லரசன் ஆட்சியில் அகால ருத்தியு நேருமோ என்றனர். 253. இறைவன் - கடவுள்.

* புறநானூறு.

மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
யீன்ம ரோவிவ் வுலகத் தானே." (105)

(ஓலையைக் கைசோரவிடுகின்றார்.)

ஈனச் சிறையி லிருத்தல் விரும்பிலை
மானச் சிறப்பை மதித்திறந் தனையோ?
தண்ணீர் வேட்கை தணித்திலை; அந்தோ!
எண்ணீர் மிக்க வினிய மாணவ!
உன்னைத் தணந்தபின் னுயிர்தரிக் கல்லேன்;
நிற்பிரி வாற்றேன்; வெற்புறு தோளனே! (106)

---

(செய். - 105.) (பொழிப்புரை) குழந்தை இறந்து பிறந்தாலும் மாமிச பிண்டமாகிய மணைக்கட்டை பிறந்தாலும் அவற்றையும் புருஷன் அல்ல வென்று கருதாது வாளோச்சி வெட்டுதலில் தவறார் அரசராயிருக்க, பகைவர் வாளாற்படாது, சங்கிலியாற் பிணிக்கப்பட்ட நாய்போலப் பிணித்துத் துன்பத்தைச் செய்து சிறையிலிருத்திய கேளல்லாத கேளிருடைய உபகாரத்தான் வந்த தண்ணீரை இரந்துண்ணக் கடவே மல்லேம் என்னும் மனவலியின்றி வயிற்றின்கட் டீயை யாற்றவேண்டித் தாமே இரந்து உண்ணும் அளவினையுடையாரை அவ்வரசர்கள் பெறுவார்களோ இவ்வுலகத்தின் கண்.

அளவையுடையாரை அளவை யென்றனன். இதன் கருத்து, சாக்குழவியும், ஊன்பிண்டமுமென இவற்றின் மாத்திரையும் பெற்றிலேனெனப் பிறர்மேல் வைத்துக் கூறினன். அரசர்களில் போர்க்களத்து வீழ்ந்தோரே துறக்கம் பெறுவர்; அங்ஙனமின்றி நோயால் இறந்தோருடம்பைத் தருப்பையிற் கிடத்தி வாளாற் போழ்ந்து 'போரில் மாண்டோ ரடையுங்கதியை இவர் அடைக', எனக் கடவுளை வேண்டி அவ்வுடம்பை அடக்குதல் விதி யென்பது ஈண்டறியற் பாலது. cf. "பீடின் மன்னர், நோய்ப்பால் விளிந்தயாக்கை தழீஇக், காதன் மறந்தவர் தீது மருங்கறுமார், அறம்புரி கொள்கை நான்மறை முதல்வர், திறம்புரி பசும்புற் பரப்பினர் கிடப்பி, மறங்கந்தாக நல்லமர் வீழ்ந்த, நீள்கழன் மறவர் செல்வுழிச் செல்கென, வாள்போழ்ந்தடக்கலு முய்ந்தனர்". (புறம் - 93.)

"தருப்பையிற் கிடத்தி......காணுத் தகவுடைத்து" (மணிமேகலை. 23: 13—16.) கேளல் கேளிர் - சுற்றத்தா ரல்லராயினுந் தன்னைச் சூழ்ந்திருப்பவர், என்றது சிறைக்கோட்டங் காவலரை. அன்றி, இவன் ஆண்மையுடையன் அல்லன் என்று வாளாற்கொல்லாராய்த் தொடர்ப்படு ஞமலிபோல இடர்ப்படுத்திருத்திய கேளல் கேளிர்வேளாண் சிறுபதத்தை மதுகையின்றி வயிற்றுத்தீத் தணிக்க வேண்டித் தாம் இரந்துண்ணுமளவாகக் குழவி செத்துப் பிறப்பினும் ஊன்தடி பிறப்பினும் இவ்வுலகத்து மகப்பெறுவாருளரோ, என உரைப்பினும் அமையும். வாளில் - வாள் வீசுதலில். தப்பார் - தவறார். வேளாண்மை - உபகாரம். cf. "விருந்தோம்பி, வேளாண்மை செய்தற்பொருட்டு" (திருக்குறள் - 81). சிறுபதம் - அற்ப உணவு, என்றது தண்ணீரை. மதுகை - வலிமை, ஈண்டு மனவலிமை. ஈன்மரோ - மகப் பெறுவாரோ. அரசர்க்கு மானத்தின்மிக்க அறனும் பொருளும் இன்பமும் இல்லை யென்று கூறினமையின் இது பொதுவியற் றிணையில் முதுமொழிக் காஞ்சியாயிற்று. என்பர் புறநானூற் றுரையாசிரியர்.

261. ஈனம் - இழிவு. 264. எண் நீர் மிக்க - சிறந்தனவாக எண்ணப்பட்ட குணங்கள் மிகுந்த. 265. தணந்தபின் - பிரிந்த பிறகு. தரிக்கல்லேன் - தரிக்க மாட்டேன். வெற்புறு - மலைபோன்ற.

(சேரமானை வாரியணைத்து இரங்கிப்பாடுகின்றார்.)

மான முருவெடுத்து வந்தனைய மன்னவனே
ஞான வொளிபரப்பு நல்வெண் மணியேயோ! (107)

அன்பே வடிவா யமர்ந்தவெழிற் கோமானே
நன்பே ருலக நயந்து நடந்தனையோ? (108)

காட்சிக் கினிய கவினுடைய காவலனே
மாட்சி நலஞ்சான்ற மாணவவோ! மாணவவோ!! (109)

தண்ணமிழ்தம் போலுந் தமிழின் சுவையறிந்த
வண்ணலே யென்னைகொலோ வாருயிரி னீங்கினையே! (110)

உன்னைப் பிரிந்திங் கொருகணமுந் தாழேன்யா
னென்னுடலை நீத்தங் கெழுந்தேன் பெருமானே! (111)

(மௌனம்)

என்சிறை நீக்கற் கிதுவே யற்றம்;
புன்புலாற் சுமையைப் போகட்டு நின்றேன்;
நின்மலப் பொருளி னோர்ந்து புகுந்தேன்;
செம்பொருட் சேர்ந்துபே ரின்பமுற் றேனே. (112)

(சுகாதனமேவி யோகசமாதியி லிருக்கின்றார்.)

சிறைகாவல னிரண்டாவன்:—(ஓடிவந்து தொட்டுப்பார்த்து)
என்ன வநியாயம்! இழவுமே லிழவா
விளைஞ்சா லெப்படி மேலெழ முடியும்?
இந்த மனிசனும் வந்து தொலைஞ்சான்!
போன பயலும் புதைஞ்சு போனான்!

[கேபத்தியத்துண் முழக்கம்.]

என்னடா சத்தம்? மன்னவர் வருகையோ? (113)

[சிறைகாவலன் முதல்வன் வருகின்றான்.]

சிறைகாவலன் முதல்வன்:—(பெருமூச் செறிந்து)
விரைவி லிவ்விட மரைசர் வருவார்.

சிறைகாவல னிரண்டாவன்:—(மனம் வருந்தி)
வந்த புலவனு மாண்டு போனான்!

[மெய்காப்பாளரோடு செங்கணான் வருகின்றான்.]

---

(செய். - 107.) வெண்மணி - முத்து. (செய். - 108.) அமர்ந்த - பொருந்திய. நன்பேருலகம் - முத்தி. (செய். - 109.) கவின்-அழகு. நலம்-நன்மை. (செய். - 111.) தாழேன் - தாமதியேன். அங்கு - நீ சென்ற அவ்விடம். (செய். - 112.) அற்றம் - சமயம். நின்மலப்பொருள் - அழுக்கற்ற பொருள்; என்றது கடவுளை. செம்பொருட் சேர்ந்து - மெய்ப்பொருளைக் கலந்து. சுகாதனம் - யோகாசனங்களுள் ஒன்று.

284. போனபயல் என்றது முதற்காவலனை.

(காவலரிருவரும் வணங்கி நிற்கின்றனர்.)

செங்கணன்:—(மனம் பதறி)
எங்கடா வரச ரிறந்து வீழ்ந்தது?

சிறைகாவல னிரண்டாவன்:—(அச்ச முற்று)
புலவரு மரசே போய்விட் டாரே! (114)

செங்கணன்:—(ஓடிச்சென்று)
பொய்கை யாரும் போய்விட் டனரோ?
உய்தி யில்லதோர் குற்ற முஞற்றினேன்.
அந்தோ! பேயேன்! அந்தோ!! நாயேன்!!

(உற்றுப்பார்த்து யாவுமுணர்ந்து)

தண்ணீர் வேட்டு முண்ணா திறந்து
போயினை கொல்லோ? புரவல ரேறே! (115)

(இரங்கிப் பாடுகின்றான்.)

செங்கோன்மை நெறிதிறம்பா தரசாண்ட
பெருமைசெறி சேர மானே
நங்கோமக் கள்பலரு நயந்துரைசெய்
யாநின்ற நம்பி யேவெண்

பங்கேரு கத்தமரும் பாவைகலை
நலமனைத்தும் பருகி நின்றோ
யிங்கோய்ந்து சிறைக்களத்தி னிருந்தலைநீ
விரும்புகிலை யிறந்தாய் கொல்லோ? (116)

மெய்ப்பொருளை நல்லாசான் றனையடுத்துத்
தெரிந்துகொளும் வேட்கை சான்று
துய்ப்பதற்கெவ் வாற்றானு மிசைபொருள்க
ளனைத்தையுமே தொலைத்து நின்று

---

291. உய்தி இல்லது ஓர் குற்றம் - பிராயச்சித்தம் இல்லாத பெரியதொரு பிழை. உய்தி - கழுவாய் (பிராயச்சித்தம்). உஞற்றினேன் - செய்தேன். 293. வேட்டும் - விரும்பியும். புரவலர் - அரசர். ஏறு-ஆண் சிங்கம். அரசர்க்குள் ஆண் சிங்கம் போன்றவன் என்றபடி.

(செய். - 116.) நெறி திறம்பாது - வழி தவறாது. செறி - பொருந்திய. கோமக்கள் - அரசகுமரர். நயந்து - விரும்பி. உரைசெய்யாநின்ற - புகழ்கின்ற. நம்பி - ஆடவருட் சிறந்தோன்; புருடோத்தமன். வெண் பங்கேருகத்து அமரும் பாவை - வெண்டாமரையில் விரும்பியுறையும் வாணி. கலைநலம் அனைத்தும் பருகி நின்றோய் - (வாணியின் கூறாகிய) பல நூல்களின் சுவை முழுவதையும் நுகர்ந்து உணர்ந்தவனே. பாவை கலைநலம் அனைத்தும்பருகி நின்றோய் என்று கூறியதின் நயம் உய்த்துணரற்பாலது. ஓய்ந்து - ஒரு தொழிலுமின்றி.

கைப்படைந்து பாரினில்வாழ் தால்கருதா
யுயங்குசிறைக் களத்தின் மேவி
யெய்ப்படைந்து நாவறண்டு நீர்பருகா
திருந்தந்தோ விறந்தாய் கொல்லோ ? (117)

எற்பிரிந் துற்ற வின்றமிழ்ப் புலவர்
நிற்பிரி வாற்றார் நிலத்தினி திருந்து
புன்மலக் குடிலைப் போக்கிக் கடவுளார்
மென்மலர்த் தாளின் மேவினர் கொல்லோ ? (118)
மாரனை வென்ற சேரலர் கோவே !
வீரமே யுருவாய் விளங்கிய வேந்தே !
மானப் பெருமையை மனக்கொண் டந்தோ
ஈனப் பாரி லிருத்தல் வேட்டிலை
உன்னும் போழ்தினி லுன்னைக் கொன்றவன்
செங்கண னெனுமிச் சிறுமதி யுடையான் !
உனக்கா சானு மெனக்கா சானுமாய்
விளங்கி நின்ற மேதகு புலவனைத்
துளங்கலி லறிஞனைத் தூய ஞானியை
யின்ப வுளத்தனை யென்பெருந் தேவைக்
கொன்ற புலைஞனு மன்றவித் தீயேனே ! (119)
இருகொலை புரிந்தோ னிவ்வுல கதனின்
மருவி யிருத்தல் மாண்புடைத் தன்றால்.

---

(செய். - 117.) மெய்ப்பொருள் - உண்மைப்பொருள்; நித்தியவஸ்து. நல்லாசான் - ஸதாசாரியன். வேட்கைசான்று - விருப்பமிக்கு. துய்ப்பதற்கு - அநுபவித்தற்கு. எவ்வாற்றானும் - எவ்விதத்தாலும். இசைபொருள்கள் - பொருந்திய செல்வங்கள். அனைத்தையுமே - முழுதும். தொலைத்து நின்று-துறந்து. கைப்பு அடைந்து-வெறுப்புற்று. பாரினில் - உலகில். வாழ்தால் கருதாய் - வாழ்வதைச் சிந்தியாய். உயங்கும் - வாடும், வருந்தும். சிறைக்களத்தின் மேவி - சிறைச்சாலையிற் பொருந்தி. எய்ப்பு அடைந்து - இளைப்படைந்து.

303. எற்பிரிந்து - என்னைப்பிரிந்து. புலவர் - பொய்கையார். 304. நிற்பிரிவு ஆற்றார் - நின்னைப் பிரிந்திருத்தலைச் சகியாராய். நிலம் - பூமி. இனிது இருந்து - யோகசமாதியி லின்பமுற்று வீற்றிருந்து. 305. புன்மலக்குடில் - புல்லிய மலங்கட்கு இடமான குடிசையாகிய உடல். 306. மென்மலர்த்தாள் - மெல்லிய மலர் போன்ற பாதம். தாளின்மேவல் - அடிசேர்முத்தி. 307. மாரன் - காமன். 309. மனக்கொண்டு - உளத்திற் கடைப்பிடித்து. 310. ஈனம் - இழிவு. வேட்டிலை-விரும்பினையில்லை. 311. உன்னும் போழ்தில் - ஆராய்ந்து நோக்கும்பொழுது. 312. சிறுமதி - அற்ப புத்தி. 314. மேதகு - மேன்மை வாய்ந்த. 315. துளங்கல் - கலங்கல். தூய - பரிசுத்தமான. 316. தேவு - தெய்வம்.

317. புலைஞன் - சண்டாளன். மன்ற - தெளிவாக. தீயேன் - தீயேன் 318. இருகொலை: சேரமான், பொய்கையார் இருவரையும் மடிவித்த கொலை-பாவம். 319. மருவி - உயிருடன்பொருந்தி. மாண்புடைத்து - பெருமையுடையது

தற்கொலை புரிதல் சாலா தெனினும்
இக்கொலைப் பதகனை யேற்றவா றொறுத்தல
எவ்வாற் றானு மேற்புடைத் தன்றோ?
ஒவ்வா தென்றியா னுயிர்வேட் டிருப்பலோ?
என்னுயிர் தானு மின்சுவைக் கரும்போ?
யானிறந் தாலுல கெல்லா மெற்புக்
காடாய்ப் போகுமோ? நாடாது செய்தே
னெனினுங் குற்ற மெனைவிடுங் கொல்லோ? (120)
யான்செய் தாலெனை? என்னுடைய யேவலன்
தான்செய் தாலெனை? தனக்கொரு நியாயம்
பிறர்க்கொரு நியாயமோ? அறப்பெருங் கடவுளும்
என்னைப் புடைக்கல ரிருப்பர் கொல்லோ? (121)
மனவுணர் வில்வழி வருதற் பாலதோர்
பாவமு மில்லெனப் பகர்ந்த புலவனும்
பொய்யன் கொல்லோ? மெய்யன் கொல்லோ? (122)

---

320. சாலாது-அமையாது, தகாது. 321. பதகன்-பாதகன், பாவி. ஏற்றவாறு - தக்கபடி. ஒறுத்தல் - தண்டித்தல். 322. ஏற்புடைத்து - தகுந்தது; பொருத்தமானது. 323. ஒவ்வாது - பொருந்தாது, தகாது. உயிர்வேட்டு - உயிர்வாழ்தலை விரும்பி. இருப்பல் - இருப்பேன். அல் - தன்மை யொருமைவிகுதி. 325. எற்புக்காடு - எலும்புக் காடு. 326. நாடாது - ஆலோசியாது. 328. எனை - என்ன. ஏவலன் - ஏவல்செய்பவன். 330. அறப் பெரும் கடவுள் - பெரிய தருமதேவதை. 331. புடைக்கலர் - (முற்றெச்சம்) அடியாது, தண்டியாது. 332. மனவுணர்வு - மனத்தின் அறிவு. இல்வழி - இல்லாத பொழுது. வருதற்பாலது - உண்டாகக் கூடியது.

333. பகர்ந்த புலவன் - கூறிய அறிஞன். ஈண்டுக் குறித்தது கௌதம புத்தனை. திருவள்ளுவருமாம்.

cf. "இன்னா வெனத்தா னுணர்ந்தவை துன்னாமை வேண்டும் பிறன்கட் செயல்."
"எனைத்தானு மெஞ்ஞான்றும் யார்க்கு மனத்தானா மாணாசெய் யாமை தலை."
(திருக்குறள்: 316, 317.)

இக் குறள்களினுரையிற் பரிமேலழகரும் 'அறமும் பாவமுமுளவாவது மனமுளாய வழியாகலான்' என்றும், 'ஈண்டு மனத்தானாகாத வழிப் பாவமில்லையென்பது பெற்றாம்' என்றும் கூறியவாக்கியங்கள் கவனிக்கத்தக்கன.

"சிந்தை யின்றியும் செய்வினை யுறுமெனும்
வெந்திற னோன்பிகள் விழுமங் கொள்ளவும்
செய்வினை சிந்தை யின்றெனின் யாவதும்
எய்தா தென்போர்க் கேது வாகவும்
பயங்கெழு மாமல ரிட்டுக் காட்ட
மயன்பண் டிழைத்த மரபினது"

என்று மணிமேகலை யடிகளால் (மணி - மலர்: 74—79.) கௌதமபுத்தற்கு இக் கொள்கை யுண்டென்பது விளங்கும்.

தேவி கண்ட தீக்கன வனைத்தும்
பாவி யென்வயிற் பலித்தவோ? அறியேன்.

—(மௌனம்)

(இராசமாதேவியும் அறிவுடை நங்கையும் வருகின்றனர்.)

இப்பழி நீப்பேன் ; என்னுயிர் நீப்பேன் ;
எப்படி நோக்கினு மிதுநே ரிதுவே. (123)

(வாளை யுறைகழிக்கின்றான்.)

இராசமாதேவி:—(அருகில்வந்து கையைப்பற்றி)

இஃதென்னரசே! இஃதென் கோவே!
எஃதெனி னுங்குறைக் கேற்ற கழுவாய்
இல்லா திருக்குமோ? எல்லா முணர்ந்த
பேரறி வாளர் பேசிய நூன்முறை
யோரலை யிச்செய லுவந்துமேற் கொண்டனை!
என்னுயிர்க் குயிரென வெய்திய தலைவா!
மன்னுயிர் புரக்கு மாண்கடன் மறந்தனை;
என்னை வேண்டி யிச்செய றவிர்தியோ? (124)

(பணிகின்றாள்.)

அறிவுடைநங்கை :—(செங்கண்ணனை நோக்கி)

அண்ணலே! என்சொற் கருள்செயல் வேண்டும்;
எண்ணிலே னேதோ வெடுத்துரைக் கின்றேன்:
சிந்தை யின்றியுஞ் செய்வினை யுறுமோ?
விந்தையே நீதான் விரும்பு மிச்செயல்.
என்மொழி யிதனை நின்மனக் கொளாயோ? (125)

செங்கண்ணன்.—(வாளைக் கைசோரவிட்டு).

எனைநீதி யின்னண மெடுத்துரைத் திட்டீர்!
மனுநீதி கண்ட வாய்மையை நீவிர்

335. தீக்கனவு - நான்காங்களம், வரி 11—24 நோக்குக. 338. நேரிது - தக்கது. 340. எஃதெனினும் - எத்தகைய தீவினை யெனினும். குறை - குற்றம். கழுவாய் - பிராயச்சித்தம். 342. முறை - விதி. 343. ஓரலை - ஆராய்ந்திலை. ஈண்டு முற்றெச்சம். ஓராது என்பது பொருள். உவந்து - மகிழ்ந்து. 345. புரக்கும் - காப்பாற்றும் மாண்கடன் - சிறந்தகடமை. 346. தவிர்தி - நீங்குவாய். த்-எழுத்துப்பேறு. 347. அண்ணல் - பெரியோன். 349. "சிந்தை ........யுறுமோ"—செய். 122. உரை நோக்குக. 350. விந்தை-ஆச்சரியம். மனக்கொளாயோ - மனத்திற் கொள்ளாயோ. 352. எனை - எனக்கு. வேற்றுமை மயக்கம். 353. கண்ட - உணர்த்திய. வாய்மை - உண்மை.

உணரீ ரொருபா லுரைத்த லொக்குமோ? (126)

அறிவுடைநங்கை.—(வணக்கத்துடன்)

குலத்தின் பெருமையுட் கொண்ட சோழ!
நலத்தின் பெருமையு நாடு காவலும்
நின்னைப் பற்றி நிற்கு முயிர்களும்
நாடிச் சிறிது நயந்து காண்டியோ?
முன்னுட் கொள்கை யிந்நாட் கோளொடு
முரணலும் வழக்கே; அரணெனு நீதிநூல்
காலக் கேற்ப ஞாலத் தியலும்.
பொருந்தாப் பழையன போமால், அறிதி.
வருந்தா திருத்தி, மன்னர் மன்னனே! (127)

செங்கணன்.—(சிந்தித்து மெய்காப்பாளரை நோக்கி)

அற்றேற் காவலிர்! அழிமினிக் கோட்டம்;
சற்றே யாயினுந் தாழ்த்து நில்லீர்.

(அறிவுடை நங்கையை நோக்கி)

அறிவொளி சான்ற வறிவுடை நங்காய்!
இச்சிறை காவல ரிதனை முன்னரே
எற்குரைத் தாரலர். இரண்டு நாளா
யுண்ணு திருந்தமை தண்ணீர் வேட்கை
தணியா திருந்த தன்மை முதலிய
யாவையு மென்னிடத் தெடுத்துரை யாச்சிறை
காவல ரால்யான் கண்ட பயனென்?
இவரோ வேவலர்! இவரோ காவலர்!
இவரெவாக் தீயர்; இவரெலாம் வீணர்.
இவரை வேலைக் கேயதென் பிழையே. (128)
இவ்விரு கொலைக்கு மேற்ற கழுவாய்

354. உணரீர் - உணராது (முற்றெச்சம்). ஒருபால் - ஒரு பகுதிப்பட, பக்ஷபாதமாக. 355. உட்கொண்ட - கருதிய. 356. நலம் - நன்மை. 357. நின்னைப் பற்றி - உன்னை யாதாரமாகப்பற்றி, 359. கோள் - கோட்பாடு, கொள்கை. முதனீண்ட தொழிற்பெயர். 360. முரணல் - மாறுபடல். அரண் - காப்பு. ஈண்டு உலக நடைக்குக் காவல். 361. காலக்கு - காலத்திற்கு. நான்கனுருபுசாரியை பெறாது வந்தது. ஞாலத்து இயலும் - உலகத்து நடைபெறும். (361—362.) cf. “பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே” (நன். 452); “Old order changeth yielding place to new” (Tennyson.) 362. அறிதி - அறிவாய். த் எழுத்துப்பேறு. 363. இருத்தி - இருப்பாய். 364. அற்றேல் - அப்படியானால். எல், எனில் என்பதன் விகாரம். அழிமின்-அழியுங்கள். இக்கோட்டம் சிறைச்சாலை. 365. தாழ்த்து-தாமதித்து.

366. சான்ற - அமைந்த. 367. இதனை-சேரமான் நிலையை, 369. வேட்கை - விருப்பம், தாகம். 375. ஏயது - ஏவியது. 376. கழுவாய் - பிராயச்சித்தம்.

இவ்விரு வோரையு மிருஞ்சிறை யிடுதலும்
என்குரு நினைவிற் கெய்திய குறியா
மன்பெருங் கோயின் மாட்சியி னெழுபான்
குயிற்றி யிறைவனைக் குறித்து நித்தலும்
பயிற்றியென் னுளத்தைப் பண்படுத் தலுமே. (129)
வினைப்பயன் றுய்ப்பிடம் விளங்குறுமிப்பார் ;
இதனுக் கிறுதி யென்று மில்லையால்;
மதனிற் செருக்கி மருட்கை மேவி
யுலகு பொய்யெனப் பலகரை வார்சிலர்.
பிறப்பு மீங்கே ; இறப்பு மீங்கே ;
இன்பதுன் பங்க ளிவ்வுல கின்கணே.
மன்பெருந் துறக்கமும் வகைகெழு நரகுமிம்
மாயிரு ஞாலமே, மதிக்கவே றில்லை.
ஆதலி னெளியே னருயிர் போற்றி
மேதகு மாறு மேற்கொளீஇக்
காதலி னெனது கடமைசெய் துய்வலே. (130)

(பாடுகின்றான்.)

அன்றாலின் கீழிருந்து நால்வருக்கு மெய்ப்பொருளை
யளித்தார் தாமுங்
குன்றாத தமிழ்மொழியை யகத்தியற்கு நனிமகிழ்ந்து
கொடுத்தார் தாமு

---

377. இவ்விருவோர்-சிறைகாவலர். 278. நினைவிற்கு எய்திய குறி-ஞாபகார்த்த சின்னம் (Memorial). 379. மன் - நிலைபெற்ற. மன்பெரும் - மிகப்பெரிய, எனினுமாம். எழுபான் - எழுபது. கோயில்-கோவில். 280. குயிற்றி - செய்து. 380—381. நித்தலும் இறைவனைக் குறித்து உளத்தைப் பயிற்றுதல் - தினமும் கடவுளைத் தியானித்தலைப் பழகுதல். பண்படுத்தல் - சீர்பெறச் செய்தல். 382. வினைப்பயன் துய்ப்பிடம் - நல்வினை தீவினைகளை அநுபவிக்கும் இடம்.

384. மதனில் - ஆணவத்தால். மதன் - மதம், போலி. செருக்கி - அகங்கரித்து. மருட்கை - மயக்கம். பல - பலவற்றை. 385. கரைவார் - கூறுவர். 388. றுறக்கம் - சுவர்க்கம். வகைகெழு - பலவகைப்பட்ட. பலவகை நரகு - அள்ளல், இரௌரவம், கும்பிபாகம் முதலியன. 389. மாயிரு-மிகப்பெரிய. மதிக்க-கருத. 391. மேதகுமாறு - மேன்மை யுண்டாம்படி. மேற்கொளீஇ - மேற்கொண்டு. 392. காதலின் - விருப்புடன். உய்வல் - பிழைப்பேன், ஈடேறுவேன்.

(செய். - 131.) அன்று - அக்காலத்தில், பண்டறிசுட்டு. ஆல் - கல்லால்மரம். கீழ் - அடி. நால்வர் - ஸநகர், ஸநந்தனர், ஸநத்குமாரர், ஸநத்ஸுஜாதர். மெய்ப்பொருள் - உண்மைப்பொருளை, தத்துவத்தை. அளித்தார் - உபதேசித்தவர்; தக்ஷிணாமூர்த்தி. குன்றாத - குறைவற்ற. ஆங்கு நின்று - சங்கத்தின் முன் நின்று.

நின்றுங்குக் கீரனொடு நெடுவழக்குத் தொடுப்பவுள
நேர்ந்தார் தாமு
மின்றீங்குச் சிவயோக நிட்டைநிலை கூடியவெம்
மிறைவ னரே. (131)

[யாவரும் போகின்றனர்.]

ஆறுங்களம் முற்றிற்று.

---

## வாழ்த்து.

### வஞ்சி விருத்தம்.

மான விசயம் வாழிய
கோனு மினிமை கூர்தமிழ்
ஞான குருவு நாடொறும்
வானு நிலனும் வாழ்கவே. (132)

---

திருச்சிற்றம்பலம்.

[ஆகச் செய்யுள் 132-க்கு : வரி 1016.]

மானவிஜயம் முற்றிற்று.

---

கீரன் - நக்கீரன். நெடுவழக்கு - பெரிய விவாதம். கூந்தற்கு இயற்கை மண முண்டோ என்றவாதம். இது "கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி," என்ற பாசுரம்பற்றி யெழுந்தது. உளநேர்ந்தார் - மனமொப்பினவர், சோமசுந்தரக் கடவுள். ஈங்கு - இவ்விடம். சிவயோக நிட்டை நிலைகூடிய வெம்மிறைவர் என்றது பொய்கையாரை.

(செய். - 132.) மானவிசயம் - மானவிசயமென்னும் பெயரிய இந்நாடகம். வாழிய - வாழ்க. கோன் - அரசன். தமிழ் ஞானகுரு - தமிழாசிரியர். நூலாசிரியர் தம் ஆசிரியர் பெயர் - மதுரைச் சபாபதி முதலியார். வான் - மழை. நிலன் - பூமி.

cf. "நாவலந் தீவந் தன்னுண்,
மூவர்கட் கரியா னிற்ப முத்தமிழ்ச் சங்கத் தெய்வப்,
பாவலர் வீற்றி ருக்கும் பாண்டிநன்னடு போற்றி."

(திருவால. திருவி.)